Y592.V 1
N16
179467

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# வன்னியர் மகாசங்க வைபவ சூடாமணி

மூலமும் உரையும்.

இஃது

சில வன்னிகுல கனவான்கள் விருப்பத்தின்படி

விஷ்ணுபாத சேகரரென்னும்

வித்வான்,

ஜா. பசுபதிநாயகரவர்களால்

இயற்றப்பட்டு.

பல்லவகுல சேகரரென்னும்

ஸ்ரீமாந்.

கா. கோ. பலபத்திர நாயகரவர்களால்

சென்னை

டி. வி. சி. பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

1916

ஸ்ரீராமஜெயம்.

# வன்னிய மகாசங்க வைபவசூடாமணி.

## காப்பு.

### கட்டளைக் கலித்துறை.

ஒருபத்தைந் தாயிரஞ் சூரிய காந்தி யுடையபிரான்
தருபத்தைந் தாயிரஞ் சூழ்குரு கேசன்பொற் றாள்பணிந்து
வருபத்தைந் தாயிரம் பேர்கூடும் வன்னிய மாச்சங்கத்தின்
இருபத்தைந் தாவது சம்வற்ச ரோற்சவம் யாஞ்சொல்வமே.

## நூல்.

### நகரச் சிறப்பு.

### ஆறுசீ ராசிரிய விருத்தம்.

முக்குல மன்னர் தம்முள் முதல்வனாஞ் சேரனாட்டுள்
மிக்குயர் பொன்னி யோடு மிளிருநன் மணிமுத்தாறும்
பக்கலிற் பாய்தலாலே பல்வளம் பெருகநாளுந்
தக்கவர் வாழுகின்ற தலமங்கொன் றுள்ளதாமால்.

சோமசூரியாக்கினி யென்னும், முக்குல மன்னராகிய சேர சோழ பாண்டியருக்குள்ளே, முதல்வனாகிய சேரனுடைய நாட்டின் கண்ணே, "கங்கையிற் புனிதமாய காவிரி" என்று, ஆழ்வார்கள் முதலிய மகான்களாலும், வேத புராணேதிகாசங்களாலும், புகழப்பெற்ற காவேரி நதியும், சிவபெருமானுடைய பஞ்சாக்கர வடிவமெனத்தக்க மணிமுத்தா நதியும், சங்கமமாகி, வயல்கடோறும் எப்போதும் பாய்ந்துகொண்டே யிருப்பதனால், பல வளங்களும் பெருக, எக்காலமும் உயர்குலக் குடிமாந்தர் வாழுகின்ற நகரமொன்றுளது.

அத்தலந் தன்னிற் சோலை யனந்தமாம் வயல்கள் மிக்காம்
சத்திரம் பலவுண் டோடை தாமரைத் தடங்கள் மிக்காம்
மெத்தைக ளுயரமான வீடுக ளனந்த முண்டாம்
பத்திரி மாரி ராமன் பசுபதி கோவி லுண்டாம்.

அந்நகரத்தின் புறங்களில் அனேகமான பூஞ்சோலைகளும், பலசத்திரஞ் சாவடிகளும், நீரோடைகளும், தாமரைத்தடாகங்களுஞ் சூழ்ந்திருப்பது மன்றி, அந்நகருக்குள் உயரமான அனேக மெத்தை வீடுகளும், காளி, மாரி, திருமால், சம்பு முதலியோருடைய ஆலயங்களு மிருக்கின்றன.

மேற்கூறிய வீடுகளிலெல்லாம் வசிப்பவர் யார்?
அவைகள் எவ்வாறிருக்கின்றன வெனில்:—

பன்னருஞ் சிறப்புண்டாய பார்ப்பன ரகங்க ளோர்சார்
வன்னிய ரகங்க ளோர்சார் வைசிய ரகங்க ளோர்சார்
தொன்னெறி தவறிலாத சூத்திர ரகங்க ளோர்சார்
இன்னும்பல் குலத்தி னோர்க ளிருப்பதங் கோர்சார்மன்னோ.

சொல்லுதற்கரிய சிறப்பமைந்த அந்தணர்கள் வாழு மாளிகைக ளொருபக்கமும், வன்னிகுலத்தரச பரம்பரையார் வாழும் மாளிகைக ளொருபக்கமும், வைசியர் வாழும் மாளிகைகளொருபக்கமும், பழைய நெறியினின்றுந் தவறாத சூத்திரர் மேவும் வீடுக ளொருபக்கமு மிருப்பதேயன்றி. இக்குலங்களுக்குப் புறம்பான பல குலத்தினர் வசிக்கு மில்லங்க ளொருபக்கத்திலு மிருக்கின்றன.

அன்றியும் அந்நகரினது நில வளப்பத்தினால் அங்கு விளையும் பொருள்களெவ்வாறிருக்கிறன வெனில்:—

செந்நெலைக் கன்னலென்றே செப்பிடலாகு மாங்கேய்
கன்னலைக் கமுகமென்றே கழறலாங் கமுகந்தன்னைத்
தென்னையென் றுரைக்கலாந் தெங்கொடு வாழைதம்மை
என்னவென் றுரைக்கலாமென் றின்னமும் யோசிப்போமால்

செந்நெற் பயிரை நோக்க, அது செழிப்பொடு உயரமும்பருமனும் மிகுதியா யிருப்பதனால், அதனைக் கன்னலென்றே சொல்லக்கூடும். கன்னலை நோக்க, அதுவும் மேற்கூறியபடி தனது பிரமாணத்திற்கு மிகவும் மீறியிருப்பதால், அதைக் கமுகமென்றே சொல்லக்கூடும். கமுகை நோக்க, அதுவும் அவ்வாறே யிருப்பதால் அதைத் தெங்கென்றே சொல்லக்கூடும். இவை இங்ஙனமிருப்ப, அங்குள்ள தெங்கும் வாழையும், மேற்கூறியபடி தத்தம் பிரமாணங்களுக்கு அதிகப்பட்டே யிருப்பதால், இவைகளை எந்த மரங்களுக்கொப்பெனச் சொல்லக்கூடுமென்று, இன்னமும் யோசிக்கின்றோம். இஃதன்றி,

### கலி விருத்தம்.

எஞ்சுதலங் கின்றிவரு மிரண்டுநதி பொழிவால்
புஞ்செய்களங் கேதுபல பொருள்களுமங் கெழலால்
பஞ்சமதங் கேதுபல பருத்தகுடி யுளவோர்
நஞ்செயிடை யாறதெனு நகரமது வாமால்.



குறைவின்றிப் பெருகிவருகின்ற மேற்கூறிய இரண்டு நதிகளும், வயல்களுக்கு எந்நாளும் பாய்வதனால், அங்குப் புஞ்செயென்கிற அற்ப நிலங்களே யில்லை. பலதானியங்களும் மிகுதியாக விளைந்து கொண்டே யிருப்பதால், அவ்விடத்தி லெப்பொழுதும், பஞ்சமென்பதேயில்லை. அத்தகைய சிறப்பமைந்த நகரம் யாதெனில், அது அநேகமான உயர்குலக் குடிமாந்தர் வாழுகின்ற நஞ்செயிடையாறென்கிற நகரமேயாம்.

## சபா முயற்சி.

### ஆறுசீராசிரிய விருத்தம்.

அன்னமா நகரந்தன்னு ளன்னியர் சிலரேயாவர்
வன்னிய ரனேகராங்கே வளப்பெருங் குடியுமன்னோர்
இன்னவர் தம்மையெல்லா மியம்பிடற் கிடமிங்கின்றால்
பன்னுவேஞ்சபைசேர்த்தோர் தம்பகுப்பினிற்றலைமையோரை

அந்நகரத்தி லன்னியகுடிகள் சிலரேயுள்ளார். வன்னியகுடிகளோ அநேகராவார். அன்றியும் மதிக்கத்தக்க வளப்பம் பொருந்திய பாரிய குடிகளும் இவ்வன்னியரே. இவர்களனைவரையுங் கூறவீண்டு இடமில்லாமையால், இச்சபையைச் சேர்ப்பதற்குக் காரணபூதர்களாயும், வேண்டிய பொருளுதவி செய்தவர்களாயும், தேகசிரமம் பாராமல், அல்லும் பகலும் உழைத்தவர்களாயு முள்ளவர்களின் பகுப்பினிற் றலைமையாகிய சிலர் பெயரை மாத்திரம், ஈண்டுக் கூறுவாம்.

பொங்கர வரசனாலும் புகலுதற் கரியகீர்த்திச்
சங்கர கண்டனீன்ற தவச்சுத ரிருவர்மேன்மை
எங்கரத் தெழுதற்காகா வெனச்சில ருரைப்பரேனும்
நங்கரத் தவர்களீகை நாமமு மெழுதற்காமால்.

அந்நகரத்தின்கண் ஆதிசேடனாலுஞ்சொல்லுதற்கரிய கீர்த்திவாய்ந்த சங்கரகண்ட ரென்பவரொருவ ரிருந்தனர். அவருடைய தவப்புதல்வ ரிருவருளர். அவர்களுடைய செல்வம் கல்வி ஒழுக்கம் முதலிய பெருமையை, எங்கள் கரங்களா லெழுதலாகாவெனச் சிலருரைப்பர். ஆயினும் அவர்களுடைய ஈகையையும், பெயரையு மாத்திரம் எம்மால் எழுதக்கூடுமாகையால், அவற்றைச் சொல்லுவோம்.

கன்னனை நிகர்ப்பன் முன்னோன் கந்தசாமிப் பேர்கொண்டோன்
பின்னவன் முத்துவீரப் பெயரவன் குமுண னொப்பான்

இன்னரே யன்னோன் மைந்த ரிருவர்க ளிவர்தம்மோடு
பன்னுமவ் வூரிலுள்ள பலருமங் கொருங்கதாகி

அவ்விருவரில் மூத்தகுமாரர் கந்தசாமி கண்டரெனப்படுவார். இவர், ஈகையிற் கர்னனை யொப்பார். இளையகுமரர் முத்துவீர கண்டரெனப் படுவார். இவர் ஈகையிற் குமணனை யொப்பார். இவ் விருவரே, மேற்கூறிய சங்கர கண்டருடைய தவப்புதல்வராவார். அத்தகைய இவரோடு இப்புத்தகம் கடைசியில் சேர்த்துள்ள வரவு செலவு கணக்கிற் கூறப்பட்டுள்ளவர்களிற் றலைமையாகிய சிலரும் ஒருங்கு சேர்ந்து ஒரு கூட்டங்கூடி,

ஐயைந்தா மாண்டின் காட்சி யதனையா மீண்டு செய்வம்
வையந்தான் மதிக்குஞ் சென்னை மாச்சபைத் தலைவர்க்கின்றே
பெய்யொரு நிருபமென்னப் பெரிதுவந் தெழுதயாருங்
கையெழுத்திட்டதான கடிதமாச் சபைஞர் நோக்கி.

இம்மஹாசங்க இருபத்தைந்தாவது வருஷமகோற்சவத்தை நமது நகரத்தில், நாமே செய்து முடிக்கவேண்டுமென்கிற தீர்மானஞ் செய்துகொண்டு, அச்சபையிலெழுத வல்லாரொருவரை நோக்கி, உலகபிரசித்தமான, சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மஹாசங்க நிருவாக சபையாரிடத்தில் உத்தரவு பெறுவதற்காக ஒரு நிருபமெழுது மென்ன. அவர் அதுபோலெழுதி முடித்து, அவர்களனைவருங் கையெழுத்திட் டனுப்பப்பட்டதான, அந்நிருபத்தை ஷை நிருவாக சபையார் பார்த்து,

உத்தரவளித்தல் நோக்கி யூர்களுக்கெல்லாஞ் சங்க
முத்திரைக்கடிதம் போக்கி முதிரையோ டரிசிக் குன்றம்
அத்தினப் பணிக்கங் கான வனைத்துநெய் தயிரின் கேணி
கத்தரி கதலி யாதி கறிவகைக் குன்றுஞ் சேர்த்தார்.

அம்மஹாசங்க நிருவாக சபையாரொரு கூட்டங்கூடி, அச் சபையினின்றும் அவர்களுவப்போடனுப்பிய, உத்தரவு கடிதத்தை நோக்கியநாள்முதலாக, மஹாசங்கமுத்திரையிட்டு அழகாக அச்சிடப் பட்ட விளம்பரப்பத்திரங்கள், பதினாயிரக் கணக்காக எண்டிசை களுக்கும் அனுப்பப்பட்டன. இஃதன்றி, பெரிய விளம்பரப்பத்திரங் களும் சில கிராமவீதிகள் தோறும் ஒட்டப்பட்டன. இதன் பிறகு இடையிடையே சென்னை மஹாசங்கநிருவாக சபையாருக்கும், மற்ற நகரங்களிலுள்ள முக்கிய கனவான்களுக்கும், தந்திகளும், தபால்



களும், பறந்து கொண்டே யிருந்தன. சபாமண்டபத்திற்கு வேண்டியதம்பங்களும், மூங்கில்களும், தென்னங்கீற்றுமுதலியவைகளும், வண்டி வண்டியாகக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. பற்பல கொடிகளுந் தோரணங்களுந் தைக்கப்பட்டன. சமயலுக்கு வேண்டிய மிகப்பெரிய பித்தளை செப்பு, அண்டா முதலிய பாத்திர வகைகளும், விதவிதமான தூக்குச்சட்டி, மூக்குச்சட்டி, அடுக்குச்சட்டி கொத்துக்கிண்ணம் முதலிய பித்தளைப் பாத்திரங்களுஞ், சேகரிக்கப்பட்டன. விதவிதமான நாற்காலி, மேஜை யென்கிற கால்நீண்ட பெட்டி, காலரி என்கிற அடுக்குப்பலகை, ஜமுக்காள முதலியவைகளும், சேகரிக்கப்பட்டன. உணவுக்கு வேண்டிய அரிசி வகைகள், மலைகள்போலவும், பருப்புவகைகளும், காய் கிழங்கு வகைகளும், பலவித நிறமுள்ள குன்றுகளைப்போலவும், குவிக்கப்பட்டன. நெய், தயிர், பால், எண்ணெய் முதலியவைகள் கிணறுகளைப்போல, அண்டா, செப்புக்குடம் முதலியவற்றில் நிரப்பப்பட்டன.

## சபாமண்டபச் சிறப்பு.

### வேறு ஆறுசீராசிரிய விருத்தம்.

இந்தவிதமதற்குரிய பொருளனைத்தும், விதவிதமா யிவர்கடங்கள்
சொந்தநிதிதனிலமைத்தாங் குறுகாட்சி தமைநோக்கித்துலக்கமாக
வந்தவர்களுளமகிழ்ந்தஞ் சபைகூடுதற்கெனவே வனைந்த தான
அந்தரத்தி லுயர்பெரிய சபாமண்டபப் பெருமை யறைகுவாமால்.

இவ்விதமாக, இம்மஹோற்சவத்திற்குரிய எல்லாப் பொருள்களும், விதவிதமாக, இவர்கள் சொந்த நிதியினாற் சேகரிக்கப்பட்டதை, மேற்கூறினும். இனி, பற்பல நாடுநகரங்களினின்றும் வந்தவர்கள், இக்காட்சியை மனமகிழ்ச்சியோடு நோக்கி சபை கூடுவதற்காகவே அலங்கரிக்கப்பட்டதான, சபாமண்டபத்தின் பெருமையைப் பேசத்தொடங்குவாம்.

### பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பூஞ்சோலை சூழ்கின்ற மிதிலைமா நகரேசன்
புதல்விதன் மணமதற்கே
புரிந்ததோர் மண்டப மீதென்ன லாம்படி.
புகழ்தர்ம கர்த்தனை
வாஞ்சையாஞ் சிதம்பர மாகாளி கண்டனது
வானோங்கு தோட்ட நாப்பண்

வாயினாற் பேசரிய பெரிய கொட்டகையிட்டு
வண்ணவெண்டுகில்கள் கட்டி
ஆஞ்சால ரிடையிட்டுக் கண்ணாடி விளக்குக
ளனந்தமா யெங்குமிட்டு
ஆங்குமதி போற்காந்த விளக்கெங்குமே வைத்து
அழகான கொடிகள் நட்டு
மாஞ்சோலை பூஞ்சோலை யசோகநற் சோலைகள்
வாழைமா மரங்கள் கட்டி
வளமாகவே யெங்கு மலங்கார மாஞ்சபா
மண்டபந் தன்னிலின்னும்.

பூங்காவனங்களாற் சூழப்பெற்ற மிதிலாபுரிக்கரசனாகிய சனக மகாராசனுடைய புதல்வியான சீதாதேவியினுடைய திருமணத்தின் பொருட்டு, அம்மிதிலா நகரத்தின்கண் அலங்கரிக்கப்பட்ட திருமண மண்டபமே யிதுவென்று யாவரும் புகழத்தக்கதாக, அந்த நஞ்செயிடையாறு கிராம வாசியாகிய தருமகர்த்தர் சிதம்பர மாகாளிகண்டருடைய, வானளாவிய மரங்களோங்குகின்ற தோட்டத்தின்கண்ணே, வாயினாற் சொல்லுதற்கரிய பிரம்மாண்டமான கொட்டகை யொன்றிடப்பட்டது. அதற்கு மேல் வெண்மையான வஸ்திரங்கள் கட்டப்பட்டன. அதன் சுற்றுப் பக்கங்களிலேயும் இடையிடையேயும் சரிகை ஜாலர்கள் கட்டப்பட்டன. அன்றியும் அம்மேலிடங்களின் மத்தியிலும் சுற்றுப்பக்கங்களிலும் விசித்திரமான பூவேலைகள் செய்யப்பட்டன. லஸ்தர் குளோப்புகளென்கிற கண்ணாடி விளக்குகள் இடையிடையே தொங்கவிடப்பட்டன. சுற்றுப்பக்கங்களிலெல்லாம் அனேகஞ் சந்திரர்க ளுதயமானாற்போல, அனேகங் காந்தவிளக்கு ஸ்தம்பங்கள் நடப்பட்டன. அப்பந்தலைச் சுற்றிப் பல விசித்திரமான கொடிகள் கட்டப்பட்டன. அப்பந்தலின் ஸ்தம்பங்களிலும் பந்தலைச் சுற்றிலும் மாஞ்சோலைகளும், பூஞ்சோலைகளும், அசோகஞ்சோலைகளும், கட்டப்பட்டன. அத்தம்பங்கள்தோறும் வாழை மரங்கள் கட்டப்பட்டு அவ்வாழைக் குலைகளோடுகூடத் தென்னங்குலைகளும், பனங்குலைகளும், கமுகந்தாறுகளும், ஈச்சங்குலைகளும், கூந்தற்பனைத்தாறுகளும், பலாக்காய்களும், கட்டப்பட்டன. இத்தகைய அலங்காரத்தோடமிருக்கின்ற இச்சபாமண்டபத்தின்கண் இன்னும் என்னென்ன பொருள்கள் அமைக்கப்பட்டுள்ளன வென்றால் :—



காற்பட்டு காலரிகள் சேர்பிளேட்ப் பாரமெனக்
கழறு சமுக்காள மேல் மேல்
காண்பலகை நாற்காலி மேலுயரு மேடையிவை
கணக்கிலா தெங்குமிட்டு
ஏற்கவே சபைநாத ரிருக்கவுய ராசன
மெழிற்பட்டு மேலிடுவதாம்
இணையிலா மேசையெனுங் கால்நீண்ட பெட்டிகளும்
இயம்பந்த மேடைமீதில்
ஏற்றமிகு குருக்கள்நிரு வாகசபை யோரெவரு
மிருக்கபல வாசனங்கள்
இட்டுகடி காரமொடு பெல்லென்னு மொலிக்கருவி
யெழுதுநற் கருவியான
தேற்றமுறு மைக்கூடு பென்சல் பேனாவென்னுந்
திறமான வெழுதுகோல்கள்
தெள்ளியவெண் கடிதங்கள் புத்தகமாதியன
சிறப்பாக வைத்துளாரால்.

சபாநாயகர் முதலியவர்கள் வீற்றிருப்பதற்காக, அச்சபாமண்டபத்தின் உள்ளிடத்தில் உன்னதமான மேடை செய்யப்பட்டு, அதற்குமேல் விமானம்போற்செய்து அதற்குமுன் இருபுறமும் உன்னதமான பெண்பிரதிமைகளமைக்கப்பட்டு, மேலிடங்களில் அழகிய பூவேலைகளும், சரிகை வேலைகளுஞ், செய்யப்பட்டிருந்தன. இம்மேடைக்கு இருபக்கங்களிலும் காற்பட்டுகளென்கிற சமுக்காளங்கள் விரிக்கப்பட்டன. கடைசி எதிர் பாரிசத்தில் காலரிகளென்கிற படிப்படியான அடுக்குப் பலகைகள் அமைக்கப்பட்டன. இதற்கு மத்தியில் சபாமேடையின் எதிரினின்றும் முறையே ரிஜர்வட் அன்ரிஜர்வட் சேர் என்கிற நாற்காலிக ளிடப்பட்டன. அன்றியும் அச்சபா மேடைமீது சபா நாயகரும், குருநாதரும், மஹாசங்க நிருவாக சபையாரும் மற்ற அதிகாரிகளும் வீற்றிருப்பதற்காகப் பற்பல உன்னதமான நாற்காலிக ளிடப்பட்டு; அவ்வாசனங்களுக்கு முன் பாரிசத்தில் உன்னதமான மேஜைகளென்கிற கால்நீண்ட பெட்டிக ளிடப்பட்டு, அவற்றின் மீது பட்டுத்துணிகள் விரிக்கப்பட்டிருந்தன. அவற்றின்மீது உன்னதமான கடிகாரமும், சேவகர்களைக் கூப்பிடுகிற, பெல் என்னும் ஒலிக்கருவியும், இங்கிபாட்ட லென்கிற மைக்கூடும், பென்சல் பேனா வென்கிற எழுது

கோல்களும், அழகிய வெண்கடிதங்களும், அங்கு வேண்டிய சிற்சில புத்தகங்களும், வைக்கப்பட்டிருந்தன. சபாமண்டபத்தின் காட்சி இங்ஙனமிருக்க, அச்சபாமண்டபத்திற் கடுத்த சுற்றுப்பக்கங்களி லென்னென்ன அறைகளுஞ் சாலைகளு மியற்றப் பட்டுள்ளன வென்றால் :—

திக்கெட்டி னுள்ளார்க ளிக்கட்டில் லாமனுறத்
திக்கெட்டென் றோது சீட்டைத்
திறமையாய் விற்கின்ற வறையோடு தந்திகள்
தினம்வரும் நிருபமெல்லாம்
பக்குவம தாய்வைத்துப் பார்க்கின்ற வறையினொடு
பலதேயத் தோர்க டந்த
பற்பல சாமானோ டரிசிமுத லானவை
பாலித்தங் கியுமறைகள்
மிக்கவுப சாரத்தோ டன்னமிடுஞ் சாலையெனும்
மேலான பெரிய வறைகள்
வெவ்வேற தாகபல வேலைக்கா மறையெலாம்
வேய்ந்துள்ள தன்றி யாங்கே
தக்கபெருங் கேட்டென்னும் வாயில்க டோறுநனி
தகைமையாம் போர்ட்டதெனச்
சாற்றவரு விலாசமாப் பலகையொடு தோரணஞ்
சகலநற் கொடியாடுமால்.

எட்டுத் திக்குகளினின்றும் வந்தவர்களாகிய யாவரும், ஏக காலத்தில் யாதொரு நிபந்தனையுமின்றி, அச்சபாமண்டபத்தில், இலவசமாக நுழைவதா யிருந்தால், ஒருவருக்கொருவர், நான்முன் நான் முன்னென்று மேல் வீழ்வர். அதனால் பற்பல இக்கட்டுகளுண் டாகு மெனக் கருதி, அவ்விக்கட்டுகளுக் கிடமில்லாமல், அவரவர் அவ்வவ்வாசனங்களிற் சுகமாய் வீற்றிருப்பார்களென்றே, ஏற்படுத்தப்பட்ட, டிக்கட்டுகளென்கிற ஆசனவாடகைச் சீட்டுகளை விற்கின்ற அறைகளும், அப்போதைக்கப்போது வருகின்ற, தபால், தந்தி முதலியவற்றை வைத்துப் பார்க்கின்ற அறைகளும், பல தேசத்தார் கொண்டு வருகிற மூட்டை முதலியவற்றைப் பாதுகாத்துக் கொடுக்கின்ற அறையும், புத்தகசாலையும், உணவுக்கு வேண்டிய அரிசிபருப்பு முதலிய யாவற்றையும் பாலித்துக் கொடுக்கின்ற ஸ்டோர்என்கிற உக்கிராண சாலையும், அன்னவகைகளும், பற்பல



கறிவகைகளும், சமைக்கின்ற பெரிய அன்னசாலையும், ஆஸ்பிடலென்கிற வைத்தியசாலையும், இன்னும் மஹா சங்க நிருவாக சபையார் வீற்றிருந்து, ஆலோசிப்பதற்குரிய அறைமுதலிய பற்பல அறைகளும், ஆங்காங்கு இயற்றப்பட்டிருந்தன. இவையன்றி, அச்சபாமண்டபத்தோட்டத்தின் கேட்டுகளென்கிற வாயில்கள்தோறும் பந்தலிட்டு, வாழைமர முதலிய மேற்கூறிய அலங்காரங்கள் செய்யப் பட்டு, அவ்வாயில்களின் முன்புறங்களில் "சென்னை வன்னிகுலக்ஷத்திரிய மஹாசங்க25-வது வருஷ மஹோற்சவம்" என்றெழுதப்பட்ட போர்டு என்கிற பெரியவிலாசப் பலகைகள் கட்டப்பட்டு, அவற்றின் கீழ், நல்வரவு என்கிற அருத்தமாகிற "வெல்கம்" என்கிறபதங்கள் ஆங்கிலேய பாஷையிலெழுதப்பட்டிருந்தன. இவையன்றி, மேற் புறங்களில், நவநவமான தோரணங்களுங் கொடிகளுங் கட்டப்பட்டு, அவைகள் ஆங்காங்கு அசைந்தாடிக் கொண்டிருந்தன. இவையிங் ஙன மிருக்க,

ஆறுசீராசிரிய விருத்தம்.

பணியின ரவனுற்றேகப் பகலொடு காலைமாலை
மணியடித் திடுவரென்றால் மற்றவர் தொகையுமாங்காம்
பணிகளி னளவும் யாவும் பார்த்தவர் திறனுநீரே [னே
உணர்ந்துகொண்டிடலாம் யாமிங் குரைத்திட வேண்டா மன்

அச்சபாமண்டப முதலியவற்றின் வேலைகளைச் செய்த வேலைக் காரர், குறித்த காலத்தில் அவ்விடத்தில் வருவதற்கும் போவதற்கும் அவ்விடத்திலொரு பெரியகண்டாமணியைத் தினமும் அடித்துக் கொண்டிருந்தார்களென்றால், அவ்வேலைக்காரர் எத்தனைபேரிருந் திருக்கலாமென்றும், அவ்விடத்தில் எவ்வளவு வேலை முடிந்திருக்க லாமென்றும், இப்பணிகளையெல்லாம் இன்னின்ன விதமாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டுக்காட்டி, மேற்பார்வை பார்த்துக் கொண்டுவந்தவர் எவ்வளவு திறமைசாலியா யிருக்கவேண்டுமென் றும், நீங்களே தெரிந்துகொள்ளலாம். யாங்கூறவேண்டியதில்லை. இது நிற்க.

எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

இந்தநிலக் குதவிசெய விரதமேறி
யிரவியெனு மொரு பெரியன் கடலைத்தாண்டி
வந்துதின மறைந்தெழுவ னதனைப் போலே
வளமிகுமக் நகரினூறு காட்சிக்கான

பந்தல் முதலானபணி முடித்தற் கென்றே
பலகாலம் புகையிரத மேறி யாரும்
அந்தமிலாக் கடல்கடந்தாங் கேகி வந்தா
னவன் யாவ னெனில்யாமிங் கறையக் கேண்மின்

சூரியனென்கிற ஒப்பற்ற பெரியோனானவன், இவ்வுலகத்திற்கு நன்மை செய்வதற்காகத், தினந்தோறும் ஒரு இரதத்தின் மீதேறிக் கடலைத்தாண்டி இவ்வுலகத்தின்கண் தோன்றி மறைவது போல, அந்த வளப்பமிருந்த நந்தெசியிடையாறு என்கிற நகரத்தில் நடந்த மேற்கூறிய காட்சிக்கு வேண்டிய நாற்காலி முதலிய பற்பல சாமான்களைச் சென்னையினின்றுஞ் சேகரித்தனுப்பிக் கொண்டிருந்ததுமன்றியில், பந்தல் முதலாகிய சகல வேலைகளுங் குறைவின்றி நடந்தேறுவதற்காக, மேற்கூறிய கனவான்களுக் குதவியாயிருந்து, மேற்பார்வை பார்ப்பதற்காகத், தாம் அடிக்கடி புகைவண்டியாகிய இரதத்திலேறி, நதியாகிய கடலைக்கடந்து, அங்ஙனம் போய் வந்து கொண்டேயிருந்தார். அவர் யாரென்னிற் கூறுவாம்.

சந்தக்கலித்துறை.

நல்லவ குலமே விடுமவர் கட்குறு நட்டமுறச்
செல்லவ குலமா மலைதுகள் பட்டெழச் செய்திடுவோய்
வில்லவ குலசே கரன்வரு நற்குல மேவிநிதம்
பல்லவ குலசே கரபல பத்திரப் பார்த்திபனே.

வஞ்சித்துறை.

என்றிவ்விதமா-நின்றெவருஞ் சொல
குன்றொளிர் தீப-மென்றொளிர் வோனே.

யாவர்க்கும் நன்மையைச் செய்பவரே! நங்குலத்தினருக்கு மிருந்த நஷ்டத்தைச் செய்யப் புகுகின்ற துன்பக் கூட்டமாகிய மலையானது பொடிபடச் செய்பவரே! வில்லவனாகிய குலசேகராழ்வாருடைய பரிசுத்தமான குலத்திலுதித்தவரே! நம்முடைய பல்லவ குலசேகர பலபத்திர நாயகரே! என்று யாவருங் கொண்டாட, இச்சென்னைமா நகரின்கண்ணின்றும் மலைமேலிட்ட தீபம்போலப் பிரகாசித்துக் கொண்டிருப்பவரேயாவர்.

எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

இன்னமொரு பெரியனுளன் மூன்றுமாத
மிந்நகரி லிருந்தெல்லாப் பணியும் பார்த்தான்



அன்னவன்யா ரெனிற்றினமுஞ் சங்கவேலை
யன்றியொரு வேலையுமே பார்த்திலா தான்
வன்னதருப் பணநூலி லனந்தமாக
வன்னியர்கட் காதிக்கங் காட்டித் தந்தான்
இன்னவன்பே ராறுமுக னெனச்சொல் வார்க
ளிவனொருநூ றாண்டிருக்கில் நமக்கே நன்றும்.

இவரேயன்றி இப்பணிகளை மேற்படி கனவான்களுக் குதவியாயிருந்து நடத்தியவராகிய, இன்னொரு பெரியவருமுளர். அவர் அம் மகோற்சவம் நடப்பதற்கு மூன்று மாதத்திற்கு முந்தியே, அவ்விடமிருந்து எல்லாவேலையும் பார்த்தவர். எக்காலமும் நமது மஹாசங்க வேலையும், நமது குல நன்மைக்குரிய வேலையுமேயன்றி, மற்றெந்த வேலையும், பார்த்தவரல்லர். அன்றியும் அவர், நமது, குன்றம் முனிசாமிப்பிள்ளையவர்களைப்போல, பல நூல்களினின்றும், செப்பேடு சிலாசாசன முதலியவற்றினின்றும், ஆராய்ந்தெழுதப்பட்ட, வருண தருப்பணமென்னும் நூலால், வன்னியராகிய நமக்கு அனேக ஆதிக்கங்களைக் காட்டிக்கொடுத்தவர். அவர் யாரெனில், ஆறுமுகநாயகரெனப்படுவார். அவர் இவ்வுலகின்கண் நூறாண்டிருக்கில் இன்னும் நமது சங்கத்திற்கும், நங்குலத்திற்கும், மிகுந்த உதவியாயிருக்குமென்பதற் கையமுண்டோ? இது நிற்க. மேற்கூறிய சபாமண்டபத் தோட்ட முதலிய விடங்களிற் கட்டப்பட்டுள்ள பலகொடிகளின் தோற்றமுஞ் சிறிது கூறுவாம்.

ஆறுசீராசிரிய விருத்தம்.

பையவே யசைந்து தாழ்ந்து பறந்திடுங் கொடியின் தோற்றம்
ஐயன்மீர் நுங்கள் முன்னோ ரானைமேற் றிரிவர் நீவிர்
வையமேல் நடந்தீ ரந்தோ! வருந்துநும் பதமென் றவ்வூர்த்
தெய்வநாயகி தன்செய்ய திருக்கரத் தழைத்தல் போலும்.

மெல்ல அசைந்து தாழ்ந்து ஆடிய கொடியின்தோற்ற மெங்ஙனமிருந்த தென்னில்:—அக்கிராமதேவியானவள், அங்குவந்த வன்னியர்களைப் பார்த்து, உங்கள் முதாதைகளெல்லாம் பூமண்டலாதிபதிகளானதையால், யானைகளின் மீது பவனி வருவார்கள், நீங்களவ்வமிசத்திற் பிறந்தும், இக்கலிகாலக் கொடுமையாலும், உங்கள் துர்ப்பாக்கியத்தினாலும், இப்போது அவ்வரச சம்பத்து உங்கட்கில்லாமையால், நீங்கள் பாதசாரியாக வருகின்றீர்கள், ஆதலால் அந்தோ!

உங்கள் பாதம் வருந்துமல்லவா? அங்ஙனம் வருந்தா வண்ணம், இங்ஙனம் வாருங்கள். சற்று இளைப்பாறுங்கள். இச்சபா மண்டபத்தைப் பாருங்கள். உங்கள் குறைகளைத் தீருங்கள். களிகூருங்கள். என்று தன்னுடைய செந்தாமரைக் கைகளா லழைப்பதுபோலு மிருந்தது.

படபடென் றுதறி யாங்கே பவனன்றன் வேகத்தாடுங்
கொடியதன் தோற்றஞ் சங்கக் கொடியிடை நங்கை தற்கோர்
இடமது வருமிவ் வாண்டி லெனமகிழ்ந் தானந்தக்கூத்
திடுவது போலுமென்றே யியம்புவர் புலவர் மாதோ.

காற்று வலுவா யடித்ததனல், படபடவென்று உதறிக்கொண்டு ஓயாமலாடிய கொடியின் தோற்றமெங்ஙன மிருந்த தென்றால்:— வன்னிகுல க்ஷத்திரிய மஹாசங்கமென்கிற, கொடிபோலு மிடையினையுடைய நங்கையானவள், தனக்கு இருபத்தைந்தாவதுவயதில் ஒரு தனவானல் கட்டாயமாக ஒரு பெரிய மாளிகை யுண்டாகப் போகிற தென்று, சில சோதிடர்களுறுதியாய்ச் சொல்லக்கேட்டுக் கொண்டவளாய், அதனலாய மகிழ்ச்சியினல் ஆனந்தக்கூத்தாடி ளுள் போலு மிருந்ததென்று புலவர் கூறுவர்.

இன்னொரு கொடியுமாங்கே யிருபுறத்தசையுந் தோற்றம்
வன்னிய குலமென் மாதென் வயினுறு மக்காள் நீவிர்
என்னிலண் நடந்து வந்தீ ரென்றவர் களையைப்போக்கத்
தன்னெழிற் கலைமுன்றானை தான்கொடு வீசல் போலும்.

இன்னொரு கொடியும் அவ்விடத்தினின்று இருபுறத்திலும் அசைந்தசைந்தாடிய தோற்றமெங்ஙன மிருந்ததென்னில்:— வன்னிகுல மென்கிற நமது தாயானவள், அங்ஙனம் வந்த நங்குலத்தினரைப் பார்த்து, நித்தியமாயிருக்கின்ற என்னுடைய வயிற்றிலுதித்த நுங்கள் முன்னோர் யாவரும், பூர்வம் முடிமன்னராகிச் சிவிகை முதலிய வாகனரூடராய் வந்து கொண்டிருந்தனர். நீங்களோ உங்களைப் பெற்ற என்வயிறு பற்றும்படி, நடந்து வருகின்றீர்களென்று வருந்திப், பரிவோடு தன்னுடைய ஆடையின் முன்றானையைப் பற்றி அவர்களுடைய இளைப்பு தீரும்படி வீசுதலைப்போலு மிருந்தது.

இன்னண மிருக்க முன்னா ளெனுஞ்சனி வாரங்காலை
தன்னில்வந் திடுவ மந்தச் சபைக்கிறை யுடன்யாமென்று
வன்னிய குலமாச்சங்க பகிபர்தா மடித்த தந்தி
தன்னையங் குணர்ந்து சென்ற தனிகர்தம் பேர்சொல்வாமால்.



இச்சபாமண்டபத்தின் காட்சி யிங்ஙன மிருக்க, இம்மஹோற்சவம் நடப்பதற்கு முன்னாளாகிய சனிவாரங்காலையில், அச்சபைக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட சபாநாயகரோடு நாங்களும் புகலூரில் வந்திறங்குவோமென்று, சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மஹாசங்க நிருவாக சபையா ரடித்த தந்தியைப் பார்த்தவுடன், அங்ஙனம் எதிர்கொண்டழைக்கச் சென்ற தனவந்தர்களின் பெயர்களைச் சொல்லுவாம்.

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

நங்கந்த சாமியோடு வரவேற்புச் சபைநாதர்
நற்பழனி யப்ப கண்டன்
நாவினாற் பேசரிய புகழோங்கு கோபால
நாயகன் றவத்தில் வந்த
பொங்குமெழிற் பலபத்ர நாயகப் பிரபலன்
பூபதி சகந்நாதனும்
புகலுமவ் வரவேற்புச் சபைக்கார்ய தரிசிபர்
பொக்கிஷதார னென்பான்
அங்குறுஞ் சிதம்பர மாகாளி கண்டனே
யாதியாயுள்ள மற்றோர்
அன்றியுஞ் சேவகர் காப்டன் வாலண்டியரென்
றறைபவர் புடை சூழவே
தங்குமெழிற் பீட்டின்கோச் மோடர்கா ரெனும் வண்டி
சைகிலென் றோதும் வண்டி
தமிலேறி வேலூரு தனில் நின்றும் படகேறித்
தாம்புகலி நகர் சேர்ந்தனர்.

தென்னாட்டுச் சீமான்களிற் சிறந்தவராகிய, நமது, ச. கந்தசாமி கண்டரவர்கள், வரவேற்புச் சபாநாயகரிருவர்க்குள் பிரதமசபாநாயக ராகிய மிட்டாதாரர் நாட்டரப்பள்ளி தாயப்பகண்டரவர்கள் உதவி சபாநாயகராகிய ஆ. கு. சிதம்பர கண்டரவர்கள், சென்னை வன்னி குலோத்தாரண, கா. கோபால நாயகருடைய தவப்புதல்வராகிய பல்லவகுலசேகரரென்கிற பலபத்திர நாயகரவர்கள், காவேரிப்பாக்கம் பூபதி ஜெகந்நாதராஜா அவர்கள், மூன்றுவரவேற்புக்காரியதரிசிகள், பொக்கிஷதாரர், அன்றியும் வரவேற்புச் சபையாரில் தருமகர்த்தராகிய சிதம்பரமாகாளி கண்டர் முதலிய யாவரும், சேவகரோடு

காப்டன், வாலண்டியரென்கிற சேனாதிபதியும், சேனைகளும், தம்மைச் சூழ்ந்துவர, பீட்டின் கோச்சு, மோடார்கார், சைகில், என்கிற வண்டிகளின் மேலேறிக்கொண்டு, அடுத்த வேலூரென்கிற கிராமத்தி லிறங்கிப் படகிலேறிப், புகலூரில் புகைவண்டி நிற்குமிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

இன்னவித மாகவே வருகையை யெதிர் நோக்கி
யிருக்கின்ற தருணத்தினில்
இணையிலா டெபிரைவுஸ் துவிபாஷி யானவன்
எங்கணும் பெயர் பெற்றவன்
பன்னரிய வுருகாத்ரன் நளினமல ரிருநேத்ரன்
பகர்சம்பு குலகோத்திரன்
பணிவுடைய திருவேங்கடசாமி நாயகன்
பண்ணுமச் சபை நாயகன்
இன்னவன் றன்னுடன் மாச்சங்க நாயகன்
இருகார்ய தரிசி மற்றோர்
இரவினிற் புகைவண்டி முதல்வகுப் பேறினர்
யாவருங் கொண்டாடினர்
முன்னாளி னிரவெலாம் வழிதனி லேகுமுன்
மொழிந்ததாம் புகலூரினில்
முகமுகென வருகின்ற புகைவண்டி நின்றதம்
முதல்வர்க ளிறங்கினாரால்

இவ்விதமாக சபாநாயகர் முதலியோருடைய வருகையை யெதிர்நோக்கியிருக்கின்றசமயத்தில், ஒப்பிலாத மெஸர்ஸ் T. A. டெயிலரண்டு கம்பெனி துவிபாஷியும் மேற் செய்யுளிற்கூறிய பிரபலஸ்தரும் இம்மஹோற்சவ சபாநாயகராக நியமிக்கப்பட்டவருமாகிய, நா. திருவேங்கடசாமி நாயகரவர்களுடன், சென்னை மஹாசங்க அக்கிராசனாதிபதியும் லாண்டிங் கன்ட்ராக்ட்டருமாகிய, அ. சொக்கலிங்க நாயகரவர்கள் ஷை மஹாசங்க பிரதமகாரியதரிசியும் ஐகோர்ட்டுவகீலுமாகிய, T. வரதப்பநாயகர் B. A. B. L. அவர்கள், அக்கவுண்ட்டாண்டு ஜனரலாபீசு உத்தியோகஸ்தரும் பொக்கிஷ காரியதரிசியுமாகிய, ச. இரத்தினசபாபதி நாயகரவர்கள். இவர்களோடு இம்மஹாசங்க நிருவாக சபையினது அங்கத்தினர்களில் வித்துவசிரோன்மணிகளும், பிரபலவர்த்தகர்களும், உத்தியோகஸ்



தர்களுமாகிய பலரும், இன்னுஞ்சிலரும், ஒருங்குசேர்ந்து 13-6-13 வெள்ளிக்கிழமை மாலையில். சென்னை இருப்புப்பாதை பஸ்ட்டு கிளாஸ், சக்கின்டு கிளாஸ் தர்டுகிளாஸ், என்கிற முதல்வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு, வண்டிகளிலேறி. மறுநாள் சனிவாரங்காலை 9 மணிக்குப் புகலூரில் வந்திறங்கினார்கள்.

## ஆறுசீராசிரிய விருத்தம்.

புகைவண்டி யுறலுமன்னோர் புதையல்கண் டெழுவரென்ன
அகமகிழ்ந் தெதிர்கொண் டேகி யனைவர்க்கு முகமன்கூறி
வகைவகை யாகக் கோத்த மலர்த்தொடை கழுத்திலிட்டு
தகதகென் றொளிசெய் வண்டி தமிலேற்றிக் கொடுசென்றாரால்.

ஷை புகைவண்டி வந்ததும், அன்னோர் யாவரும்; ஒருநிதிப் புதையலைக்கண்டு ஆவலோடு எடுக்க ஓடுகின்றவரைப்போல, விரைந்துசென்று மனமகிழ்ச்சியோடு சபாநாயகர்முதலிய யாவருக்கும் முறையே உபசாரஞ்செய்து, பற்பல நவநவமான பூமாலைகளைக் கழுத்திலிட்டு, அழகாகிய பற்பல வண்டிகளி லேற்றிக்கொண்டு போயினர்.

## நதிக்காட்சி.

## ஷை விருத்தம்.

அன்னகர் தன்னி லோர்சா ராயசிற் றுணவு கொண்டு
பொன்னியாற் றருகிற் சென்றார் புணைபல கொணர்ந்துநிற்க
அன்னதி லேறிக்கொண்டாங் கனைவருஞ் சென்ற காட்சி
தன்னையாஞ் சிறிது சொல்வஞ் சகலருங் கேட்க மாதோ,

பிறகு அப்புகலூரின்கண் (மருதகண்டரவர்கள் வீட்டில் நமது சீமான், ச. கந்தசாமி கண்டரவர்களாற் செய்விக்கப்பட்ட,) சிற்றுணவுகளையுண்டு, தாம்பூலங்கொண்டு உடனே காவேரியாற்றங்கரையிற் சென்று, அவ்விடம் வருவித்துள்ள ஓடங்களிலேறிக்கொண்டு, அவர்கள்யாவருஞ் சென்றகாட்சியைச் சிறிது சொல்வாம்.

சென்னைமாச் சங்கத்தாரத் தினச்சபா நாதன் மற்றோர்
பன்னரும் பரிசிலென்னும் படகினி லேறியந்த
பொன்னியி லேகுகின்ற போதவர் மகிழ்ச்சி யாலே
பின்னையுஞ் சிரிப்போடாங்கே பேரொலிசெய்த தோற்றம்.

சென்னை மஹாசங்கத்தாரும், அம்மஹோற்சவ சபாநாயகரும், மற்றவர்களும், மேற்கூறிய விடத்திற் சிற்றுண்டியருந்திய பிறகு படகுகளிலேறி ஆற்றிற்போகும்போது, தங்களுக்குள் மகிழ்ச்சியினாலே யாவருஞ் சிரிப்போடு இரைச்சலிட்டுக்கொண்டுசென்ற தோற்ற மெங்ஙன மிருந்ததெனில் :—

ஐவர் நூற்றுவர் மற்றோர்க ளவணொரு சோலைமேவி
நெய்புண் வருந்தியாங்கே நேர்த்தியாய் விளையாட்டாகப்
பையவே கங்கையேகிப் பட குற வோட்டுகிற்போன்
எய்யெனச் செலுத்தும்போதாங் கிரைச்சலிட் டேகல்போலும்.

பஞ்சபாண்டவர்களும், துரியோதனனாதி நூற்றுவரும், தம்முடைய நகரத்திலுள்ள சினேகராகிய மற்றோரும், உல்லாசமாக ஒரு சோலையிற்சென்று, அங்குள்ளதாகிய ஓர்மாளிகையின்கண் கொணர்ந்த சிற்றுண்டிகளை யருந்தியபின்னர், விளையாட்டாக அருகிலுள்ள கங்காநதிக்கரைக்கு மெல்லச்சென்று, அங்ஙனமுள்ள ஓடங்களிலேற, அவ்வோடங்களை, அவ்வோடக்காரர் விரைவாகச்செலுத்தும்போது, மகிழ்ச்சியால் சிரித்துங், கைகொட்டியும், இரைச்சலிட்டுக்கொண்டு செல்லுவதுபோலும்.

பெரியதோ ரலைகள் வீசப் பிதிர்ந்தநீர்த் துளிகளாங்கே
வருமவர் சிரமந்தீர மாரிபோ லுதிர்ந்த தோற்றம்
அரியதன் மகன்றன்பேர ராங்குற மகிழ்ந்து கங்கை
வரியுடைத் தனது கையால் வாசநீர்தெளித்தல் போலும்

அவ்வாற்றின்கண் பெரிய அலைகள்வீச, அதனாற் சிதரிய நீர்த்துளிகள், அவ்வாற்றிற் படகேறிவருகின்ற இவர்களுடைய சிரமந்தீரும்படி மழைத்துளிகள் போலுதிர்ந்த தோற்றமெங்ஙன மிருந்ததெனில் :—கங்காதேவியானவள், தன்னுடைய அருமைப் புத்திரனாகிய பீஷ்மாசாரியருடைய பேரர்களாகிய பாண்டவரும் நூற்றுவரும் அங்குறக்கண்டு, அலையாகிய கையினால் அவர்கள் சிரமந்தீரப் பனிநீர் தெளித்தல்போலும்.

அன்னவர் முகங்கள்போலு அலர்பல வெள்ளத்தேகும்
அன்னவருந்திபோலு மதன் கண்ணீர்ச் சுழிகள்காணும்
அன்னவசடுபோலு மலைகளின்மடிப்பு தோன்றும்
அன்னவர் துகிலைப்போலு மாங்காங்கு நுரைகள்காணும்.



அங்ஙனஞ்செல்லுகின்ற அவர்களுடைய முகங்களைப்போலும், அவ்வெள்ளத்திலே அனேக மலர்ந்த தாமரைகள் அடித்துக்கொண்டோடின. அவர்களுடைய உந்தியைப்போலும்,அவ்வாற்றில் அனேகம் நீர்ச்சுழிகள் காணப்பட்டன. அவர்களுடைய வயிற்றுமடிப்புகளைப்போலும், அனேகம் அலைகள் காணப்பட்டன. அவர்கள் ஆடைகளைப்போலும், அவ்வாற்றிடங்கள் தோறும், நுரைகள் காணப்பட்டன.

ஷை விருத்தம்.

வன்னிய ரிவர்தம் வில்போல் மலங்குகள் வளைந்துகாணும்
இன்னவ ரம்பு போலு மெழுந்துபல் மீன்கள் துள்ளும்
அன்னவர் வேலைப்போலு மவண்பல மீன்களோடும்
பன்னவர் வாளைப்போலும் பாய்ந்திடும் வாளைமீன்கள்.

வன்னியராகிய இவர்களுடைய வில்லுகளைப்போலும் அனேக விலாங்கு மீன்கள், அவ்வாற்றில் வளைந்துகாணப்பட்டன. இருவர்களுடைய அம்புகளைப்போலும் அனேகமீன்கள், மேலே துள்ளித்துள்ளி வீழ்ந்தன. இவர்களுடைய வேல்களைப்போலும் அனேக மீன்கள், விரைந்தோடின. இவர்களுடைய வாள்களைப்போலும் அனேகவாளைமீன்கள், பாய்ந்துகொண்டிருந்தன.

ஷை விருத்தம்

கையினைப் புனலி விட்டுக் கலக்கிக்கொண் டேகுவாரும்
ஐயைய பயமென்பாரும் ஆகாயீ தென்னென்பாரும்
பையவே செலுத்தச் சொல்க படகினை யெனச்சொல்வாரும்
தையல ரிதன்மே லுற்றாற் சகிக்கிலா ரெனச்சொல்வாரும்.

அவ்வோடங்களிற் செல்லுகின்றவர்களிற் சிலர், அவ்வோடத்தின் ஓரத்திலுட்கார்ந்துகொண்டு அவ்வாற்று நீரில், கையையிட்டு வேடிக்கையாகக் கலக்கிக்கொண்டுசென்றார்கள். சிலர், அவ்வோடம் விரைவாகப்போனதாலும். வெள்ளநீர் மிகுதியாயிருந்ததாலும், அச்சங்கொண்டு, ஐயைய பயங்கரமாயிருக்கிறதென்றார்கள். சிலர், ஆஹா இதென்ன ஆச்சரியமென்றார்கள். சிலர், படகுகளை மெள்ள விடச்சொல்லுங்கோ ளென்றார்கள். சிலர், இந்த ஆற்றில் விடப்பட்ட இவ்வோடத்தி லேறினால், மெல்லிய தேகத்தினையுடைய வஞ்சியர்க ளஞ்சுவார்க ளென்றார்கள்.

# புனல் விளையாட்டு.

## ஷை விருத்தம்

இன்னவா றாற்றைத் தாண்டி யீசனுங் காசி நாதன்
மன்னிய தலத்துள் மேய மண்டப நாப்ப ணுற்றார்
பன்னரு வுரைகளாடிப் பண்ணுவோம் நான மென்றே
பொன்னியாற் றமிழ்தமென்னும் புனலிடை யிழிந்த பின்னர்,

இவ்விதமாக ஆற்றைக்கடந்து, அக்கரையைச்சார்ந்த பின், அவ்விடத்திருக்குங் காசி விஸ்வநாத ராலயத்திலுள்ள மகாமண்டபத்தின்கண் விரிக்கப்பட்டுள்ள இரத்தினக் கம்பளங்களின்மீதே, யாவரும் வீற்றிருந்தனர். அங்ஙனம் வீற்றிருந்து ஒருவருக்கொருவர் பற்பல வேடிக்கை வார்த்தைகளாடிக்கொண்டிருந்தபிறகு மத்தியான காலஞ் சமீபித்தபடியால், நாமனைவரும் ஸ்நானஞ் செய்வோமென்று காவேரியாற்றருகிற் சென்று, அவ்வாற்றி னமிழ்தம் போன்ற நீரிலிறங்கியபின் என்னசெய்தார்களென்றால்:—

ஒருவர்மே லொருவர் நீரை போட்டினர் சமர்த்தைக் காட்ட
இருவர்க ளிருவராக வேகினர் நீந்திக்கொண்டே
திரையெழப் பயத்தினாலே திரும்பினர் சிலர் மூழ்காமற்
கரைதனி லிருப்போர் தங்கட் கைபிடித்திழுத்துச்சென்றார்.

அங்ஙனஞ் சென்றவர்களில், வாலிபராயுள்ள சிலர், ஒருவர்மேலொருவர் நீரைக் கையாலிறைத்து விளையாடினர். சில வாலிபர், இருவரிருவராகத் தங்கள் தங்கள் சமர்த்தைக் காட்டுவதற்காக நான் முன் நான்முன்னென்று நீந்திச் சென்றனர். இவர்களிற் சிலர், நீந்திக்கொண்டே போகும்போது, அலைமோதிக் கொண்டு வந்த வெள்ளத்தைப் பார்த்துப் பயந்து, திரும்பி வந்து விட்டனர். சிலர், அவ்வாற்றிலிறங்க அச்சங்கொண்டு, கரையில் நின்றுகொண்டிருந்தவர்களுடையகைகளைப் பிடித்திழுத்துச் சென்றனர்.

நீருளே மூழ்கியாங்கே நெடுந்தொலை யேகிக் காண்பார்
பாரள வாழ்ந்து பின்னும் பாய்ந்து மேலெழும்பி நிற்பார்
மாரினைக் காட்டி நீரில் மல்லாந்து நீந்திச்செல்வார்
ஓரிடத் திருந்தனேக ருகப்பொடு நானஞ் செய்வார்.

சிலர், ஓரிடத்தில் நீருக்குள் மூழ்கி வெளிப்படாமல் நெடுந்தூரம் சென்று கிளம்பினர். சிலர், அவ்வாற்றின் பூமி மட்டம் வரை



யில் ஆழ்ந்து, பிறகு மேலே பாய்ந்து எழும்பினர். சிலர், நீரின் மேல் மாரைக்காட்டி மல்லாந்து படுத்துக்கொண்டு நீந்திச் சென்றனர். அநேக வைதீகப் பெரிய பண்டிதர்களும், ஏனைய வாலிபர் முதலியோர்களும், ஓரிடத்திலேயிருந்து வேத விதிப்படி ஸ்நானஞ்செய்தார்கள்.

## ஷை விருத்தம்.

இன்னணம் புனலில் மூழ்கி யாவருங் கரையில் வந்து
அன்னவர் மடிகளான ஆடைக ளிடையிற் கொண்டு
பன்னரு மனுட்டானங்கள் பண்ணினர் குறிகளிட்டார்
முன்னிருந் திட்ட கோவில் முகத்தருகேகி நின்றார்.

இவ்விதமாக அவர்கள், அவ்வாற்று நீரிலாடி யாவருங் கரையில் வந்து அவரவர், ஸ்நானஞ் செய்த பிறகு உடுத்திக்கொள்ளக்கூடிய மடிகளாகிய ஆடைகளை யுடுத்திக்கொண்டு, மத்தியான கால வந்தனாதிகளைமுடித்துத், தத்தமக்குரியபடி நெற்றிக்குறியாகிய திருமண், பூவிதி,சந்தன முதலியவற்றை யிட்டுக்கொண்டு, அங்கிருந்து முன்பு வீற்றிருந்த அச்சிவாலயத்தின் மகாமண்டபத்தின்கண் போய்ச்சேர்ந்தனர்.

## ஷை விருத்தம்

காமசுந் தரனிற்கந்த சாமியக் காவலோர்க்குச்
சோமசுந்தரன் முன்னோரைச் சோறிடற் காகக் கூவி
நேமனஞ் செயலு மன்னோர் நேர்த்தியாய்ப் படைக்க வுண்டார்
வீமனும் நளனும் வெட்க விரைந்து செய்வித்த வுண்டி.

காமசுந்தரனாகிய மன்மதனுக் கொப்பான நமது கந்தசாமிகண்டரவர்கள், அவ்வரச பரம்பரையாருக்கு விருந்து செய்வதற்காகச் சோமசுந்தர கண்டர் முதலியவர்களை யழைத்து நேமிக்க, அவர்கள், சமைப்பதில் வல்லவர்களாகிய வீமனும் நளனும் வெட்கும்படியான பாகத்தோடு மிகவும் விரைவிற் செய்யக்கூடிய சுயம்பாகிகளைக் கொண்டு செய்வித்த உணவை, மிக்க உபசாரத்தோடு சிலர் பரிமாற அன்னோர் யாவரும் புசித்தெழுந்தனர்.

தக்கோல முதல வேய்ந்த தாம்புலந்தரித்தங்காரும்
நக்கார் பல்லுரைகளாடி நண்ணுமவ் வமையந் தன்னில்
புக்கானங் குருக்களந்தப் புகலியி லென்றங்குற்ற
தக்கார்சென் றழைத்து வந்த சரித்திரஞ் சிறிது சொல்வாம்.

அங்ஙனம் புசித்த பிறகு வாசனை திரவியங்களோடு சேர்ந்த தாம்பூலந் தரித்துக்கொண்டு, யாவரும், ஓரிடத்திலிருந்து சிரிப் போடு பற்பல வேடிக்கை வார்த்தைகளாடிக் கொண்டிருக்கிற சமயத்தில், ஸ்ரீமத், பாஸ்கர சுவாமிகள், அன்றைய பகல் வண்டியில் வந்திறங்குவதாக முன்னாள் கொடுத்திருந்த தந்தியின்படி புகலூரில்வந்திறங்குவாரென்று அங்குள்ளாரில்தகுதியானவர்கள் அவரையெதிர் கொண்டழைத்து வந்த சரித்திரமுஞ் சிறிது சொல்வாம்.

### பதினான்குசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

அந்தியூர் தனில்மேவும் பிரம்ம வன்னியர் மடத்
ததிபன்மா கலைதேர்ந்தவன்
அலகிலா தொளிர்கின்ற ரத்ன சிம்மாசனத்
தமர்ந்தோங்கி நின்றபானு
தந்திமுத லாயவாஞ் சதுரங்க மேவுறச்
சகல விருதேந்தி யேகத்
தபனியச் சிவிகையிற் பவனிவந்திடுபவன்
சகந்தனிற் பெயர்பெற்றவன்
அந்தமில் ஞானியாங் குழந்தையா னந்தனோ
ராதினக் கொழுந்தாயவன்
அரியதோ ரற்புதப் பாஸ்கரப் போதக
னாங்குறும் புகலூரினிற்
சந்ததம் பிற்பகல் வந்திடும் புகைவண்டி
தனிலேவ லாளரோடுந்
தழைக்க வந்திறங்கின னெதிர் கொண்டழைப்பவர்
சரசரவென வேகினர்.

அந்தியூரின்கண்ணுள்ள பிரம்மவன்னிய மடாதிபரும், மகத்தாகிய கலைகளையாராய்ந்தவரும், அளவில்லாமலொளிசெய்கின்ற இரத்தினசிம்மாசனத்தில்வீற்றிருப்பவரும், சூரியனையொத்தகாந்திபுடையவரும், கஜரததுரகபதாதிகளென்கிற, நால்வகைச்சேனைகள், தம்மைப்புடைசூழச், சகலவிருதுகளுமேந்திவரப், பொற் சிவிகையில் நகர்வலம் வருபவரும், உலகபிரசித்தமானவருமாகிய, முடிவில்லாதஞானமுடைய குழந்தையானந்த சுவாமிகளுடைய பூர்வ ஆதீனமாகிய, கற்பக விருக்ஷத்திற் செழிப்புற்றெழுந்த தளிரைப்போன்றவராகிய அருமையும், அற்புதமுமுடைய ஞானபாஸ்கரசுவாமிகள், அன்றைய



யத்தினம் பிற்பகல் வண்டியில், தமது பரிவாரத்தோடும், புகலூரில் வந்திறங்கினர். உடனே மேற்கூறிய கனவான்கள் எதிர்கொண் டழைப்பதற்காக அருகிற் சென்றார்கள்.

### ஆறுசீ ராசிரிய விருத்தம்.

வந்தனை வழிபாடாற்றி மலர்த்தொடை மொய்ம்பிலிட்டு
எந்தமைக் காக்கவந்த விறைவ ! வந்தருள்க வென்றார்
அந்தமா முனியன்னோர்க்கங் காசிசெய்தவர்களோடு
வந்தமா விரதத்தேறி மாநதிச் சென்றதோற்றம்.

அங்ஙனம் அருகிற் சென்ற அவர்கள், மேற்படி சுவாமிகளுக்கு வந்தனோபசாரஞ்செய்து, மலர்மாலையை அவர் புயத்திலிட்டு, எங்களை யாட்கொள்ளும் பொருட்டாக இவ்விட மெழுந்தருளிய தேவரீர் மஹா சபாமண்டபத்திற்கு எழுந்தருளவேண்டு மென்று விண்ணப் பஞ்செய்துகொண்ட பின்னர், அச்சுவாமிகள், அனைவர்க்கும் ஆசிர் வாதஞ்செய்து, அவர்களோடு அவ்விடங்கொணர்ந்துள்ள உன்னத மான குதிரைபூண்ட வண்டியிலேறிக்கொண்டு, நதிக்கரைக்குச் சென்ற காட்சி எங்ஙன மிருந்ததென்னில் :—

### ஷை விருத்தம்.

நூற்றுவ ரைவ ரென்ன நுவன்றிடுஞ் சீடராவார்
நேற்றுவந் திட்டா ரின்னும் நேர்ந்தில ரென்ன வாங்கே
தோற்றிய சிலரைக்கொண்டு துரோணமா முனிவ னந்த
நாற்றிசை முகமுந்தேடி நதிக்கரை வந்தான் போலும்.

துரியோதனனாதிய நூற்றுவரும், தருமனாதிய ஐவருமாகிய தனது சீடர்கள், சோலைகளிலும், நதியிலும், விளையாடவேண்டு மென்று, நேற்று விடுமுறைகேட்டுக்கொண்டு சென்றனரே, அவர் கள், இன்றைக்குங் காண்கிலரே யென்று, அவர்களில்லத்தில் வந்து நோக்கியும் அவர்கள் காணப்படாமையால், அங்குள்ள சிலரைத்துணை யாக அழைத்துக்கொண்டு, அவர்கள்சிலைக்குருவாகிய, துரோணாசா ரியரானவர், நாற்றிசையுந் தேடிக்காணாமல் கங்காநதிக்கரையில்வந் ததுபோலு மிருந்தது.

### ஷை விருத்தம்.

அன்னவன் முன்னதாக வலைவளைந்தடிக்குந் தோற்றம்
உன்னுடைச் சீடர்யாரு மொருங்குசேர்ந் தோட மேறி
இன்னதோர் திசையிற்காலை யேகினரென்று கூறத்
தன்னொரு கையாற் கங்கை தானழைத்திட்டாள் போலும்.

அங்ஙனம் நின்ற குருநாதருக்கெதிரே, அந்நதியின்கண் அலையானது, வளைந்து வளைந்து அடித்துக்கொண்டிருக்கிற தோற்றமெங்ஙனமிருந்ததென்னில்:—கங்காதேவியானவள், அக்குருநாதரைநோக்கித் தங்களுடைய சீடர்கள்யாவரும் இன்று காலையில் படகேறி, இந்தத் திசையிற் போயிருக்கிறார்களென்று சொல்லுவதற்காகத் தன்னுடைய கையினால் அவரை யழைத்தது போலுமிருந்தது.

ஷை விருத்தம்.

இன்னதை யுணர்ந்து மற்றோ ரொடுமவ ணைகல்போலும்
முன்னர்வந் திருந்த தான முழுப்புணை யதனிலேறிப்
பன்னுமந் நதியின் காட்சி பார்த்துப் பார்த் துவகையோடு
பொன்னியாறதனைத்தாண்டிப் புணையினின் றிறங்கிப்போந்தான்.

அத்துரோணாசாரியரானவர், அக்கங்காதேவிசொல்லிய வார்த்தையைக் கேட்டுத், தம்முடன் வந்தவர்களோடு அச்சீடர்களிருக்கிற விடத்தை நோக்கிச் செல்வது போல, இப்பாஸ்கர சுவாமிகள் புகலூரில் தம்மையெதிர் கொண்டழைக்க வந்தவர்களோடு படகேறி, அந்நதியின் காட்சியைப் பார்த்துப் பார்த்துச் சந்தோஷித்தவராய் அந்நதியைத்தாண்டி அக்கரைசேர்ந்து, அச்சபாநாயகர் முதலியோர் வீற்றிருக்கிற அம்மண்டபத்தை நோக்கிச் சென்றனர்.

இன்னவன் வருகைதன்னை யிவர்தமிற் சிலர் வந்தோத
முன்னர்சொல் லவராதி மொய்ம்பர்தங் குருவினோடு
சொன்னநாள் தவறியீண்டு சூழ்ந்திருந்தன்னோற்கஞ்சி
முன்னர்போய்வணக்கமாக முகமன்செய்தழைத்தல்போலும்.

வஞ்சித்துறை.

சென்றனரவர்யா-ரென்றுரைப்பவர்கட்
கென்றுரைத்திடுவர்-நன்றெனக்கேண்மின்,

இவ்விதம் நமது குருநாதர் வருகையை அவரோடு வந்தவரிற் சிலர் தெரிவிக்க, முன்னம்யாம் உவமித்துச் சொல்லிய குருகுலக் குமாராதியோர் தமது சிலைக்குருவாகிய துரோணாசாரியரோடு ஒருநாள் விடுமுறை கேட்டுக் கொண்டு, மறுநாள் வழக்கப்படி ஆயுதப்பயிற்சிக்காக வருகிறோமென்று சொல்லியபடி போகாமல், அங்ஙனம் உல்லாசமாக இருக்க அவர்களைத் தேடிக்கொண்டு வருகிற மேற்படி துரோணாசாரியருக்குப் பயந்து, அவர் தம்மீது



கோபிக்காமலிருப்பதற்காகப், பயபத்தியோடு அவரை யெதிர்கொண்டு வணங்கியுபசரிப்பதற்காக, அவர்கள் சென்றது போல, அவ்வாலயமகா மண்டபத்தில் விருந்துண்டு, களித்திருந்த நம்மவர், நமது குருநாதரை யெதிர்கொண்டு சென்றார்கள். அங்ஙனம் எதிர்கொண்டு சென்றவர்கள், சாமானியர்களோ அல்லது பிரபலஸ்தர்களோ அன்றியும் அவர்கள் எவ்வித மரியாதையோடு எதிர்கொண்டனர், என்றுகேட்பவர் உணரும் பொருட்டு, அவற்றையுஞ் சிறிது கூறுவாம்.

சந்தம், பதினான்குசீ ராசிரிய விருத்தம்.

சங்கநாதன் விரைவிலேகச் சபையினாதனேகினான்
தலைவரேக வரவையேற்குஞ் சபைஞர்தாமுமேகினார்
சிங்கமென்னக் கந்தசாமி சிலர்களோடு மேகினான்
தீரமான வரதனேக யாருங் கூடவேகினார்
சங்கம்பூரி தாரை பேரி சகல வாத்தியங்களும்
தண்தண்ணென்ன பொம்பொம்மென்ன தழைத்தொலித்ததன்றியும்
சிங்கம்யாளி தனுசோடின்னுந் தினுசுவாரி கொடிகளும்
திங்களென்ன குடையுங்கொண்டு தேசிகேசன் முன்சென்றார்.

நமது மஹாசங்க அக்கிராசனாதிபதியாகிய, அ. சொக்கலிங்க நாயகரவர்கள், விரைந்து செல்ல, அதைநோக்கி, இவ்வருஷ மஹாசபாநாயகராகிய. நா திருவேங்கடசாமி நாயகரவர்கள், அவர்பின் சென்றனர். வரவேற்புச்சபைக்குத் தலைவர்களாகிய மிட்டாதாரர் தாயப்பகண்டரவர்களும், ஆ. கு. சிதம்பரகண்டரவர்களுஞ்செல்ல, அவர்களோடு அவ்வரவேற்புச் சபாங்கர்களாகிய மற்றவர்களும் பின்தொடர்ந்து சென்றனர். நமது சீமான் நஞ்செயிடையாறு, ச. கந்தசாமி கண்டரவர்கள், சிங்கம்போன்ற கெம்பீரமான நடையுடன் அவ்வூரிலுள்ள சில கனவான்களோடு சென்றனர். இந்து ஆங்கிலேய மகமதிய சட்டங்களை நியாய சபையில் தீரமாகப் பேச வல்லவராகிய, த. வரதப்ப நாயகர் B. A. B. L. அவர்கள் செல்லவும், அவர்களோடு அவ்விடத்தில் வந்திருந்த மற்றயாவருஞ் சென்றனர். அன்றியும். அச்சுவாமிகளுக்காக, இவர்களோடு, சங்கம், பூரி, தாரை, பேரிகை, முதலிய சகலமான வாத்தியங்களும் கோஷித்துவந்ததன்றி, சிங்கக்கொடி, யாளிக்கொடி, விற்கொடி, புலிக்கொடி, முதலிய பலவகை விருதுக்கொடிகளும், சாமரைகளும், சந்திரவட்டக் குடைகளுங்கொண்டு, அச்சுவாமிகளை யெதிர்கொண்டனர்.

### சந்தம், ஆறுசீராசிரிய விருத்தம்.

வந்தார் குருவைக் கண்டு வணங்கிப் பூசை செய்தார்
கொந்தார் மாலை பொன்று கொணர்ந்து தோளி விட்டார்
செந்தா மரைபோல் பாதஞ் சிவக்கத் தாங்கள் வரவிங்
கெந்தாய் தவமென் செய்தோ மெனத்தா மேத்தி நின்றார்.

இங்ஙனம் எதிர்கொண்டு வந்தவர்களாகிய அனைவரும், அத்தேசிகேசரைக்கண்டு வணங்கிச் சோடசோபசாரங்களுஞ் செய்து மலர்மாலை புயத்திலிட்டு, எமது பிதாவுக்கொப்பானவரே! தேவரீர் தங்கள் நகரினின்றும், புகைபிரதமேறி, இத்தனைதூரம் வந்தேயன்றித், தங்கள் பாததாமரைகள் அதிகமாகச்செவக்க, இக்காவேரிக்கரையினின்றும் நடந்துவந்தீர்கள், அங்ஙனம் வந்து தரிசனங் கொடுக்க அடியேங்கள் என்ன தவத்தைச் செய்தோமென்று தோத்திரஞ்செய்து நின்றனர்.

### ஷை சந்த விருத்தம்.

குருவும் வருக மன்னீர் குறைவில் லாத செல்வம்
பெருக பெருக நுங்கள் பெரியோர்க் காய சம்பத்
தருக மாகுங் கால மணுகிற் றுங்கள் சங்கம்
பெருக வீடங் கொன்று பெரிதாய் வருமென் றுரைத்தான்.

நமது சுவாமிகள், இங்ஙனம் தோத்திரஞ்செய்து நின்ற தமது சீடர்களாகிய இம்மன்னர்களை நோக்கி, ஏமன்னர்காள்! உங்களுக்குச் செல்வமானது, பெருகக்கடவது பெருகக்கடவது. அன்றியும் உங்களுடையமுதாதைகளுக் குரித்தாகிய அந்தச்சம்பத்தானது, உங்கட்குரிமையாகுங் காலம் சமீபித்து விட்டது. இதுநிற்க (நமது மஹாசங்கந் தோன்றி யிருபத்தைந்துவருடமாகியும், அதற்குநிதியாக சுமார் இருபத்திரண்டாயிரம் வெள்ளியிருந்தும், அப்போதே ஒரு மாளிகைவாங்காமற் சிலரால் தடுக்கப்பட்டுப் பிறகு அந்நிதியும் ஆர்பத்னட்டவுசில் போய்விட்டதேயென்றும், இப்போது அச்சங்கத்திற்கு உலகெங்கும் பேர்பிரசித்தமாயிருந்தாலும், மடத்துப் பெருமையேயன்றி, நீராகாரத்திற்கு வழியில்லையென்பதுபோல, நிற்கநிழலில்லையேயென்றும், நினைக்கவேண்டாம். அதற்குப்பிறகு கொஞ்சம் நிதியுஞ்சேர்ந்திருக்கிறது, அதாவது, சுமார் ஒன்பதினாயிரம் வெள்ளியேயாம். இதுவொருபெரிதல்ல) இப்போது உங்கள் மஹாசங்கந்



தழைத்தோங்குவதற்காகப் பெரிய மாளிகை யொன்று வரப்போகிறதென்று ஆசீர்வதித்தனர்.

## நகர் வலக்காட்சி.

### ஆறுசீராசிரிய விருத்தம்.

அங்கிருந் தனைவரோடு மாலய முகத்தி னுற்றார்
நங்கடங் குருக்களோடு நண்ணியாங் கிருந்த தோற்றம்
பங்கயன் கொலுவின் மேவப் பண்ணவர் பலருஞ் சேர்ந்து
சங்கமா யிருத்தல் போலுந் தகமையுற் றுள்ள தாமால்

அத்தலைவர்கள் அவ்விடத்தினின்றுந் தம்மைச் சூழ்ந்து வந்த அனைவரோடும் அக்குருநாதரை யெதிர்கொண் டழைத்துக்கொண்டு வந்து, அவ்வாலய மஹா மண்டபத்தி லிட்டிருந்த உன்னதமான ஆசனத்தில் நடுநாயகமாக வீற்றிருக்கச் செய்து, ஒரு புறத்தில் சபாநாயகரும், மற்றொரு புறத்தில் மஹாசங்க அக்கிராசனாதிபதியும், இவர்கள் பக்கலில் மஹாசங்க அங்கத்தினரும், சைவேற்புச் சபையாரும், இன்னுமனேக பிரபலஸ்தரும், வித்வான்களும், ஏனையோர்களும் வீற்றிருந்த தோற்ற மெங்ஙன மிருந்ததெனில்: பிரமதேவர் தமது கொலுமண்டபத்தில் வீற்றிருக்க, அவரைச் சூழ்ந்து அனேக தேவர்கள் கூடியிருக்குந் தகைமையைப் போன்றது.

### ஷை விருத்தம்.

மதுரமா மொழிக ளாடி மற்றும்பல் விதங்களான
கதைசில ருரைப்ப வோர்ந்து களித்தவ ரிருந்த காலை
கொதிமிகுந் தனது காந்தி குன்றிட் மாலை யாகக்
கதிரவன் மேற்கு நோக்கிக் கழறிலான் செல்லுந் தோற்றம்.

இவர்கள் அவ்விடத்தில் ஒருவருக்கொருவர் இனிமையான வார்த்தைகளாடிக் கொண்டும், பற்பல கதைகளை வித்துவான்கள் முதலியவர்கள் சொல்லக் கேட்டும், மனமகிழ்ச்சியோடு மிருந்த சமயத்தில், சூரியனானவன் தனது வெப்பமிகுந்த ஒளிகுன்றிடவும், தனக்கு மதிமயக்க முண்டாகவும், (அதாவது மாலைக்கால மேற்பட) மேற்குத் திசையை நோக்கி, யாரிடத்திலுஞ் சொல்லாமல் மெல்லச் செல்லுகின்ற தோற்ற மெங்ஙன மிருந்ததென்னில்.

### ஷை விருத்தம்.

வானபாஸ் கரனென்றுரு மதித்திட வுலவுகின்றோம்.
ஞானபாஸ் கரனென்றீண்டு நண்ணின னென்னென் றஞ்சிப்

போனது போதுமென்பர் புலவர்மற் றந்த வேளை
ஆனது மணியென் னென்னி லைந்தெனப் புகலுமேவமால்.

வானபாஸ்கரனென்று யாவருமதிக்கக்கவுரவத்தோடு இவ்விடத்தில் சஞ்சரிக்கின்றோம், இங்ஙனமிருக்க நம்முடைய கவுரவத்தைக் குறைப்பதற்காக இவ்விடத்தில் நமக்குமேல், ஞானபாஸ்கரனென்று ஒருவன் வந்திருக்கிறான், மேலும் அவன் நமக்குத் தாழ்ந்தவனோ உயர்ந்தவனோ வென்று யோசிக்கில் நமக்கு ஒருகாலத்திலழிவுண்டு. அவனோ ஞானமே வடிவாயுள்ளவனாகையால் அவனுக்கு எப்போதும் அழிவில்லை. இது பற்றிப் பேச நமக்கு எந்த விதத்திலும் வழியில்லை யென்று அச்சங்கொண்டு, தன்னுடைய வெப்பமான ஒளிகள் குன்றி மதிமயங்கி, ஒருகால் விரைந்தோடிப் போனால் இச்சபையார் பரிகாசம்பண்ணப்போகிறார்களென்று நினைத்துக் கவுரவம் விடாமல், ஒரு வேலையாக மேற்குத் திசை நோக்கிச், செல்லுகிறவனைப் போல அச்சூரியன் மெல்ல மெல்லச் சென்றாற் போலிருந்தது. அன்றியும் அச்சமயத்தில் மணியென்ன வென்றால் ஐந்துமணி யெனக் கூறுவோம்.

ஷை விருத்தம்.

வந்தது சிவிகை யொன்று மணிமயமாக வாங்கண்
வந்தது குதிரை யின்றி வந்துவின் கதியிற் சென்று
வந்திடு மிரதமொன்று வகைவகை யாயவண்டி
வந்தன வனந்தமாக வழியெலா நின்றமாதோ

இச்சமயத்தில் அவ்விடத்தில் நவமணி மயமான சிவிகை யொன்று வந்தது. குதிரைபூணாமலே வாயுவேகமாசப் போய் வரத்தக்க மோடார்கார் என்கிற எந்திர இரதமொன்று வந்தது. இன்னும் வகை வகையான அநேக குதிரை வண்டிகளும் சைகில், ரிக்ஷா, என்கிற வண்டிகளும் வந்தன. இவ்வண்டிகளெல்லாம் ஒரே விடத்தில் நிற்க இடம் போதாமையால் வீதி யெல்லாம் நெடுக நின்றன.

ஷை விருத்தம்.

சிவிகையிற் றேசிகேசன் றிகழவந்தேறினால்
அவைக்கிறை யசுவமில்லா தாங்கெழு மிரதமுற்றான்
நவநவ மானவண்டி நண்ணினர் ஏனை யோர்கள்
தவவெடி களப்பிற் றங்குத் தம்தம்மென்றொலித்து மன்னோ.



மேற்கூறிய உன்னதமான பல்லக்கில் தேசிகேசரேறினார். மோடார்கார் என்கிற எந்திர இரதத்தில் சபாநாயகரேறினார். பற்பல வண்டிகளில் மஹாசங்க அக்கிராசனாதிபதி முதலிய தலைவர்களேறினார்கள். உடனே அங்கு அநேக அதிர்வெடிகள் தம்தம்தம் மென்று ஒலித்தன.

சந்தப்பதினான்கு சீராசிரிய விருத்தம்.

பாம்பாமென்னப் பாண்டு வாத்தியம் பண்ணோடங் கொலித்தன
பண்ணின்மிக்க பொன்னின்நாக சுரங்கள் நின்றங் கொலித்தன
பூம்பூம்மென்னச் சங்கவாத்யம் பூரித்தங்க ணொலித்தன
பூரிதாரை பேரிடங்கா புடையில் நின்றங் கொலித்தன
காம்பு போல நீண்டதாரை கணக்கிலாதங் கொலித்தன
கலகலென்னச் சிலம்பொலிக்கக் கணிகை மாத ராடினார்
ஓம்பலாகச் சேனைநாத னோகையோடு தன்னுடன்
ஓடிவந்த சேனைதன்னை யொருபுறத் திருத்தினான்

அங்குப் பாண்டு வாத்திய மென்கிற நவீன ஆங்கிலேய வாத்தியங்கள் பாம்பாம் என்று ஒலித்தன. இசையில் மிகுந்த தங்க நாகசுரங்கள் செவிக்கினிமையாக வாசிக்கப்பட்டன. தவளச் சங்க வாத்தியங்கள் பூம்பூம் என்று ஊதப்பட்டன. பூரி, தாரை யென்கிற சிறுதாரைகளும் மூங்கில் போல நீண்டிருக்கிற கொடி கட்டிய பெருந்தாரைகளும் அளவில்லாமல் ஊதப்பட்டன. பேரி, டங்கா, டவுல், தப்பட்டை, முதலிய மேளவாத்தியங்கள் அடிக்கப்பட்டன அன்றியும் கணிகைமாதர் தங்கள் காற்சிலம்புகள் கலகலவென்றொலிக்க அபிநயித்தாடினார்கள். அத்தருணத்தில் யாவர்க்கும் பாதுகாப்பு செய்யும் பொருட்டுக் காப்ட்டன் என்கிற சேனாதிபதியானவர் அக்கறையோடு தமது பின்னாலோடி வந்த வாலண்டியர்களென்கிற கவுரவசேனையை நோக்கி இன்னின்ன விடங்களில் இன்னின்னாரிருந்து பாதுகாக்கக் கடவீர்களென்று ஆங்காங்கு அவர்களை நிறுத்தினார்.

ஷை சந்த விருத்தம்.

அவையினார்க ளனைவரோடு மளவிலார்கள் சூழ்தர
அசுவமீதிற் சிலர்களேறி யருசுறாமல் வழிவிடக்
கவளயானை முதுகில்பாகன் காணவங்கு மணிகளும்
கணகணென்ன முன்புசெல்லக் களங்கமொன்று மின்மையாம்

தவளமேனிக் குடைகளேந்திச் சவரியங்கு வீசினார்
சகலமான விருதுமங்குச் சதுரதாகவேந்தினார்
பவளமேனிக் கொடிகள்நன்கு பளபளென்னத் தூக்கினார்
பண்பினோடு குருவும் வேந்தும் முன்பினாகச் சென்றனர்

மஹாசபைக்காக வந்தவர்களோடு அடுத்த கிராமங்கள் தோறுமுள்ள அனேக சனங்கள் அவ்வைபவத்தைப் பார்க்க வந்து சூழ்ந்தனர். இவர்களெல்லாம் ஒருவர்மேலொருவர் விழவே அவர்களைச் சிலர் குதிரை மீதில் ஏறி விலக்கிக்கொண்டு வந்தனர். யானையானது தன் முதுகில் பாகன் விளங்கவும் கணகணவென்று மணிகள் சத்திக்கவும் முன்பு சென்றது. அச்சுவாமிகளுக் கருகில் களங்கமில்லாத வெண்பட்டுக் குடைகள் பிடிக்கப்பட்டன. இருபுறங்களிலும் வெண்சாமரைகள் வீசப்பட்டன. வன்னியருக்குரிய சகல விருதுகளும் பிடிக்கப்பட்டன. பவள நிறமுள்ள புலிக்கொடி விற்கொடி மச்சக்கொடி பஞ்சவர்னக்கொடி அக்கினிக்கொடி முதலிய பற்பல கொடிகள் பளபளவென்று தூக்கப்பட்டன. இவ்வித விபவத்தோடும் ஷை சுவாமிகள் முன்பும் சபாநாயகர் பின்புமாகச் சென்றனர்.

## ஷை விருத்தம்.

காக்கவந்த தேசிகேச கருணை மிக்க பாஸ்கரா !
கவினுமிந்த சபைக்கு நாத ! கனமிகுந்த வன்னியா !
பாக்கியத்தில் மிக்க சேர பரம்பரைக்குளாய நீர்
பவனியாக வருகை நன்று பழுதிலீர் பராக்கென
வீக்கமுள்ள வுடையினோடு மிளிரு நீள அங்கியும்
வேய்ந்த வண்டிப் பாகையோடும் விளங்க வந்து தோன்றிய
நோக்கரென்றும் நவுக்கரென்றும் நுவலுகின்ற பேர்சிலர்
நூபுரங்கள் காலொலிக்க நுவன்று கொண்டங் கேகினார்.

எம்மை யிரட்சிக்கும் பொருட்டாக வந்த தேசிகரே ! கருணை மிகுந்த பாஸ்கர சுவாமிகளே ! விளங்குகின்ற இம்மஹா சபைக்கு நாயகரே ! கனமிகுந்த திருவேங்கடசாமி வன்னியரே ! நீங்களிருவரும் பாக்கியத்தில் மிகுந்த சேரவமிசத்தில் வந்துளீர் அத்தகைய நீங்கள் பவனிவருங் காட்சி நன்று நன்று. ஏ பழுதில்லாப் பார்த்திபர்காள்! பராக் என்று, பருத்த ஆடையோடும் நீண்ட அங்கியோடும் அலங்கரிக்கப்பட்ட வண்டிப் பாகையோடும் விளங்குகின்ற நவுக்க



ரென்றும் நோக்கரென்றுஞ் சொல்லப்படுகிற சிலர் தங்கள் காற்சிலம்பொலிக்கக் கட்டியங் கூறிக்கொண்டு வந்தனர்.

## ஆறுசீராசிரிய விருத்தம்.

மன்னியங் குடைகளாதி மற்றுள விருது சேனை
வன்னிய சங்கத்துள்ளார் மற்றவர் சூழ்ந்து போதப்
பன்னருஞ் சிவிகைதன்னிற் பாஸ்கரக் குருக்களேகப்
பின்னரச் சபைக்கு நாதன் பிறங்குமவ் விரதத் தேகல்

நிலைபெற்ற பற்பல வாத்தியங்கள் கோஷிக்கவும் சத்திரம் சாமரம் ஆலவட்டம் தாலவட்ட முதலியவைகளும் சகல விருதுகளும் ஏந்திச் சதுரங்கசேனைகளும், சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மஹா சங்கத்தாரும் மற்ற யாவரும் புடைசூழ, நமது சுவாமிகள் சொல்லுதற்கரிய பல்லக்கில் முன்பு செல்ல, நமது சபாநாயகர் அவருக்குப் பின்னால் எந்திர இரதத்திலேறிச் சென்ற தோற்ற மெங்ஙனமிருந்ததென்னில்,

## ஷை விருத்தம்.

நம்முடைப் போர்கட்கே நன்குவில் வித்தை சொற்றான்
செம்மனத் துரோண னென்னச் சேனை மற்றியாவும் போத
அம்முனிசிவிகை யேற்றி யாங்கு முன் செல்லப்பின்னர்
எம்முடைக் கங்கை'மைந்த னிரதத்தி லேகல் போலும்,

எமது கங்கா புத்திரராகிய தேவ விரத மகாராஜாவானவர்' தமது பவுத்திரர்களாகிய நூற்றைவர்களுக்குப், சிலைக் குருவாகிய துரோணாசாரியர், பகைவர்களை யெளிதில் வெல்லத்தக்க வில்வித்தைகளை நன்கு பயிற்றுவித்தன ரென மகிழ்வுண்டாகி அம்முனிவரைத் தமது அரண்மனையிற் கொடுபோய்ச் சிறப்புச் செய்வதற்காக அம்முனிவ ரில்லத்தினின்றும் சத்திரசாமராதிகளும் சகல விருதுகளும் ஏந்திவரச் சதுரங்க சேனைகளும் புடைசூழ அவரை பொருநவமணிமயமான பல்லக்கிலேற்றி அவர் முன்பு செல்ல. அவருக்குப் பின்னர்த் தாம் ஒரு உன்னதமான எந்திர இரதத்திலேறிச் செல்வது போலுமிருந்தது.

## ஷை விருத்தம்.

உலகத்தி னுள்ளோ ரெல்லா மொருங்குசேர்ந் தவனுற் றென்ன
அலகிலாச் சனங்கள்சூழ வரம்பையர் தொடை வேய்த் தோள்கள்

கலைவிழி பிறைநன்னெற்றி கனியிதழ் மலர்க்கை தங்க
மலையிரண் டன்ன கொங்கை மங்கையர் பலரும் வந்தார்

அவ்விடத்தில் உலகத்திலுள்ளவர்களெல்லாம் ஒன்று கூடியிருந்தார்களென்று சொல்லும்படி அளவில்லாத ஆடவர்கள் சூழ்ந்து நின்றதேயன்றி வாழைத்தண்டைப் போன்ற தொடைகளையும் இள மூங்கிலைப்போன்ற தோள்களையும் மானின் விழியைப்போன்ற, கண்களையும் அர்த்த சந்திரனை யொத்த நெற்றியையும் கொவ்வைக் கனியை யொத்த அதரத்தையும் தாமரை மலரைப்போன்ற கைகளையும் இரண்டு தங்கமலைகளையொத்த கொங்கைகளையு முடைய அனேக மாதர்களும் அக்காட்சியைக் காணவந்தார்கள்.

ஷை விருத்தம்.

வந்ததுஞ் சனங்களாலே வழிகளில் நெருக்குண்டேனும்
சிந்தையங் கிருத்தலாலே சிரமங்கண் டிலர்களாகிச்
சந்து பார்த்தேகி யந்தச் சபைக்கிறை தன்னைக் கண்டார்
இந்தமான் வயதில் மிக்கோ னெனப்பணிந் தப்பாற் சென்றார்.

அங்ஙனம் அம்மங்கையர் அங்கு வந்தபோது, சனங்களாலே மிகவும் நெருக்க முண்டாயிருப்பினும் அவர்களுடைய சிந்தை அக்காட்சியைப் பார்க்கவேண்டு மென்கிற திடங்கொண்டிருந்ததால் சிரமப்பட்டுச் சமயம்பார்த்து அங்ஙனம் பிரவேசித்து அச்சபாநாயகரைப் பார்த்தனர். சற்றுநேரமிருந்தபிறகு இந்த மஹான் வயதில் மிகுந்தவரென்று அவரைப் பணிந்து அதற்கப்புறஞ் சென்றனர்.

ஷை விருத்தம்.

அதிகமாச் சனங்களெல்லா மடர்ந்தவண் ணெருக்கலென்னே
இதையும்பார்த்திடுவ மென்றங் கிடுக்கண்மிக் காகிச் சென்று
மதிமுகன் நெடியதோளன் மதனனும் வெட்குந்தேகன்
சதுரன்பாஸ் கரனு மந்தத் தசமிசைத் தோன்றக் கண்டார்.

அங்ஙனஞ் சென்றபோது அவ்விடத்தில் முன்பார்த்ததை விட அதிகமான சனங்கள் கூடி ஒருவரையொருவர் நெருக்கிக் கொண்டிருக்க இவ்விடத்திலும் ஏதோவொரு பெரிய காட்சி யிருப்பது போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டவர்களாய் மிகவுஞ் சிரமப்பட்டு, அங்கு நுழைந்து சந்திரனையொத்த முகத்தையும், முழங்கால் வரையில் நீண்ட தோள்களையும் மன்மதனை வென்ற



தேககாந்தியையுமுடைய பாஸ்கரசுவாமிகள் உன்னதமான சிவிகையில் விளங்குவதைக் கண்டனர்.

ஷை விருத்தம்.

தன்னொரு வெற்றிச் சின்னந் தானெனுங் குயில்கள்கூவ
மன்மதன் நமக்கு வெற்றி வருமிதே சமயமென்றப்
பின்புறச் சோலை காணி பிறங்கிடும் பகழிவில்லைத்
தன்னொரு புறத்திற் கையிற் றாங்கியம் பவர்மே லெய்தான்.

அச்சமயத்தில் மன்மதனுடைய வெற்றிச் சின்னமென்கிற குயில்கள் இனிமையான கூவென்னும் ஓசையோடு கூவ, அதைக் கேட்டு அங்ஙனம் நின்ற மன்மதனானவன், இப்போது இப்பெண்கள் மீது நாம் பாணப் பிரயோகஞ் செய்தால் நமக்கே வெற்றியுண்டாகும், அதற்கு இதுதான் சமயமென்று அவனுக்குப் பின்புறத்திலேயே சமீபத்திலிருக்கின்ற சோலையிலுள்ள புஷ்பபாணங்களைத் தன்னுடைய முதுகிலுள்ள அம்பறாத் தூணியிலடைத்து அடுத்த வயலிலுள்ள கரும்பு வில்லைத் தன்னுடைய கையிலே கொண்டு உடனே பாணப்பிரயோகஞ் செய்தான்.

ஷை விருந்தம்.

பாணமங்கேய்ந்த போதே பாவையர்க் குரியவான
நாணமு மூன்றும் விட்டார் நங்கையர் தூயர்தம்மை
ஆணவந் தன்னலிவ்வா றுக்கலேனென்னலாமோ
வேணியவ்வரனை யெற்றோன் விண்டுவின் மைந்தன்காண்மின்

அம்மாதர்கள் மீது அவன் விட்ட புஷ்ப பாணங்கள் வீழ்ந்ததும் அம்மங்கையர் தமக்குரிய மடம் அச்சம் பயிர்ப்பு நாணம் என்கிற நான்கையும் ஒருங்கே விட்டு நின்றனர். அந்தோ அந்நங்கையர் தமது நாயகரை யன்றி மற்றொருவரையுங் கருதாத பரிசுத்தமானவர் அத்தகையோரை ஏ மன்மதா உன்னுடைய அகங்காரத்தால் இவ்விதஞ் செய்யத்தகுமோ வென்று கண்டிக்கக் கூடாது. ஏனெனில், அவன் கைலாயபதியாகிய சடாமகுடத்தினையுடைய சிவபெருமானையே எதிர்த்துப் பாணப்பிரயோகஞ் செய்தவன். அன்றியும் இவ்வுலகத்தில் ஒரு செல்வந்தனுடைய பிள்ளை யேதேனுமொரு குற்றஞ் செய்தால் அவனைக் கண்டிப்பதற்கு அஞ்சுகிறார்கள். இவனோ சாதாரணமானவனுடைய பிள்ளையல்ல. ஈரேழு பதினாலு லோகங்களையுங்

கண்டு உண்டு உமிழ்ந்தவனும், அஷ்ட அயிஸ்வரியத்திற்குமுரிய அஷ்ட லக்ஷ்மிகளையும் பட்ட மகிஷிகளாகக் கொண்டவனும் இதனால் சர்வ சம்பன்னனுமான திருமாலினுடைய புத்திரனாகையால் எங்ஙனங் கண்டிக்கக்கூடும்.

கலி விருத்தம்.

இச்சைகொண் டவன்றன் றாய வெழில்முகப் பூவிற் கண்ணும்
மைச்செறி வண்டுமொய்க்க மங்கையர் நகில் பூரித்தங்
கச்சங்க ளிரிந்து தோன்றக் கண்டவர் குருவென்றேத
அச்சங்கொண் டேகினாரென் னவாந் தனத்தின் தோற்றம்.

இம்மன்மதனாலேற்பட்ட மயக்கால் அச்சுவாமிகள்மீது இச்சை கொண்டவர்களாகி, அவருடைய முகமாகிய தாமரையில் இவர்கள் மைதீட்டிய கண்களாகிய வண்டுகள் மொய்த்தன (அதாவது அவருடைய முகத்தை உற்றுப் பார்த்தனர்) அங்ஙனம் பார்த்ததினால் மிகுந்த வேட்கையுண்டாக அதனால் அவர்கள் தனங்கள் பூரித்துப் பருத்ததினால் அவர்கள் அணிந்து கொண்டிருந்த கச்சங்கள் கிழிபட்டு அத்தனங்கள் காணப்பட்டன. அங்ஙனம் விரகங் கொண்டிருந்த அவர்களை அங்குள்ள சில பெரியோர் நோக்கி, ஏமங்கைகாள்! இதென்ன அந்நியாயம்? க்ஷத்திரியகுல குருஇவர் மதனங்காயிருத்தலால் இவரை யொரு ராஜகுமாரரென்று நினைத்துக் கொண்டு, நீங்கள் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டாற்போல இவ்விதகோலமானீர்கள் இவர் உங்களுக்குத் தகாது, அவர் உங்களுக்குக் கிட்டு வாரல்லரென்றுரைத்ததும் இடிக்கென்று அச்சங்கொண்டு வெட்கிச் சென்றார்கள். அங்ஙனமாகிய அம்மங்கையர்களுடைய கச்சங்கள் கிழிபட்டுத் தோன்றிய நகிலங்களின் தோற்றமெங்ஙனமிருந்ததென்னில்.

கலி விருத்தம்.

அகத்தினிற் பகைவற் பூட்ட வவனுகைத் தெழுதல் போலப்
பகைத்தெழு நகிலக்குன்றைப் பதியக்கச் சறையிற்பூட்ட
உகைத்ததைப்பிளந்து தோன்றியுன்னதத் தொங்கலன்னோன்
தகைப்புயமலையை நோக்கிச் சண்டைக்கங் கெழுதல்போலும்



இவ்வுலகத்தில் ஒருவனைப்பார்த்து அவனுக்குத் தீங்கு செய்ய வரும் மற்றொருவனை, அத்தீங்குறுவண்ணம் ஒரு அறையின்கண் அப்பகைவனைத் தள்ளிப் பூட்டி வைப்பானன்றோ? அங்ஙனம் பூட்டப்பட்டவன், தனது கோபாவேசத்தால், அவ்வறையின் கதவை யுதைத்துப் பிளந்து வெளிப்படுவதுமுண்டு. அதுபோல ஆடவர் புயக்குன்றுகளின் மீது பகைத்தெழுகின்ற அன்னவர் தனங்களாகிய குன்றுகளைக் கச்சங்களாகிய அறைகளிற் பூட்டி வைக்க, அவை அந்தக் கச்சங்களாகிய அறைக்கதவுகளைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டு, இச்சுவாமிகளின் புயக்குன்றுகளின் மீது பகை கொண்டு, சண்டையிடுவதற்காகப் புறப்பட்டவை போன்றன.

கலி விருத்தம்.

மேகமாங் கூந்தல் தன்னில் மீனெனு மலர்கள் சூடி
ஏகமா மதிய மென்னு மெழின்முகத் திலகமிட்டு
ஆகமா மிருள்மிக் காகி யவர்செலு மார்க்கந்தன்னில்
வேகமா யிரவென் றோது மெல்லிய லெதிர்த்து நின்றாள்.

இங்ஙனம் அவர்கள் செல்லு மார்க்கத்தில் இரவென்று சொல்லப்படுகிற பெண்ணானவள், மேகமாகிய தனது கூந்தலின்மேல் வான் மீன்களாகிய மலர்களைச் சூடிக்கொண்டு, அழகிய தனது முகத்திலே சந்திரனாகிய திலகமிட்டுக்கொண்டு, இருளாகிய தனது தேகம் பாரித்து, அவர்கள் பவனி வருகிற மார்க்கத்தில் வந்து எதிர்த்து நின்றாள்.

(அதாவது இரவேற்பட இருள் சூழ்ந்தது.)

கலி விருத்தம்.

சித்திரக் காந்தத் தீபந் தீவர்த்தி மத்தாப் பாதி
பத்தியாங் கெரிந்து நிற்கப் பாணங்க ளனந்தம் விட்டார்
அத்தகை யொளிக ளோங்க வரங்கிருள் நில்லாதேகிற்
றித்தகைக் காட்சி யாய தெங்ஙன மிருந்த தென்னில்.

அச்சமயத்தில் அழகிய காந்தத் தீபங்கள், தீவர்த்திகள், மத்தாப்புக்கள் முதலியன வரிசையாகப் பிரகாசித்து நிற்க, ஆகாய பாண முதலிய பற்பல பாணங்கள் விடப்பட்டன. இவற்றின் ஒளி மிகுதியால் அவ்விருளொழிந்துவிட்டது. அக்காட்சி யெங்ஙனமிருந்ததென்னில்:—

ஷை விருத்தம்.

காகுத்தன் றனைக்கொண் டேய்ந்த கவுசிகன் றன்னை யேற்ற
மேகத்திற் கரிய மேனித் தாடகை வீய வன்னாள்
ஆகத்தவ் விறைவ னெய்த வளவில்பல் பாண மேவச்
சோகத்தி லிறந்தங் கன்னாள் தொலைந்தது போலுமன்றே.

இராமபிரானை யழைத்துக்கொண்டு சென்ற, விசுமாமித்திர முனிவரை யெதிர்த்து வந்த கரியவுருவத்தினையுடைய தாடகையானவள், அவ்விராம பிரானால் விடப்பட்ட பாணங்களாலடிப்பட்டு இறந்தொழிந்தது போலுமிருந்தது.

ஷை விருத்தம்.

பெட்டிநற் பாணமென்றே பேசிடுஞ் சைனபாணந்
தொட்டன ரவற்றி னின்றுந் தோன்றுபல் பாவை தோற்றம்
பட்டவவ் வரக்கி மைந்தர் பகைத்துவந் திட்டாற் போலும்
விட்டன ரினும்பல் பாணம் வீழ்ந்தன பாவை தோற்றம்.

அன்றியும் பெட்டிப் பாணமென்கிற சைனபெட்டிகளைக் கொளுத்தினார்கள். அப்பெட்டிகளினின்றும், அநேகம் பாவைகளெழுந்த தோற்றமெங்ஙன மிருந்ததென்னில், மேற்கூறிய இருளினுருவமாகிய தாடகையை வதைத்தவுடன் அந்தத் தாடகையினுடைய குமாரர்கள், தமது சைனியத்தோடும் அவ்விராம பிரானுதியரை யெதிர்த்து வந்தது போலுமிருந்தது. அச்சமயத்தில் இன்னும் பல பாணங்கள் விட்டனர், அதே சமயத்தில் அந்தச் சைனபெட்டியினின்றும் தோன்றிய பிரதிமைகள் கீழே வீழ்ந்து விட்டன. அந்தத் தோற்ற மெங்ஙனமிருந்த தென்னில்:—

ஷை விருத்தம்.

நாரணற் குரிய வான நாமமோ ராயிரத்துள்
தாரக நாம னென்றே தவர்கடம் முளத்தி லேந்தும்
பூரண ராமன் சீற்றம் பொங்கியாங் கிறைத்த பாணஞ்
சேரலு மன்னோர் வீழ்ந்து செத்தது போலு மன்றே.

ஸ்ரீமந் நாராயணனுக்குரிய ஆயிரந் திருநாமங்களுக்குள்ளே சிறந்ததான தாரக நாமத்தையுடையவனென்று தவச்சிரேட்டர்களாகிய இருடிகள், தங்களிருதய கமலத்திலேந்தி நிற்கின்ற பூரணனாகிய, இராமபிரான், தனது கோபாவேசத்தால் பொழிந்த பாணங்கள் பட்டதும், அன்னோர் கீழே வீழ்ந்து இறந்து கிடப்பதைப் போலுமிருந்தது.



ஷை விருத்தம்.

இன்னமாக் காட்சி யோடு மெள்ளிட விடமங் கின்றிப்
பின்னுறுஞ் சனங்க ளோடு பிரபல மாகப் பாங்கர்
மன்னுறும் வேலூர் மேய வன்னிய ரெதிர்கொண் டேக
அந்நகர் வேய்ந்த பந்த லமர்ந்தெழுந் திட்டார் மன்னோ.

இத்தகைய காட்சியோடும் எள்ளிட விடமில்லாமல் தம்மைச் சூழ்ந்து வருகிற சனங்களோடு, சமீபத்திலுள்ள வேலூரென்கிற கிராமத்திற் பிரபலமாயுள்ள வன்னியர்க ளெதிர்கொண்டழைக்க, அவ்வூரில் அவர்களாலலங்கரிக்கப்பட்ட பந்தலி லிறங்கி அவர்களால் உபசரிக்கப்பட்டு, அங்கிருந்து நஞ்செயிடையாற்றுக்குச் செல்லப் புறப்பட்டனர்.

கலிவிருத்தம்:

நஞ்செயிடை யாறதனுள் நண்ணினர்க ளாங்கே
மஞ்சுமுழக் கென்னவெடி வந்தொலித்த தாமால்
அஞ்சுவித வாத்தியங்க ளன்றிபல தாரை
விஞ்சுமொலி யின்னவித மென்றுசொல லாமோ.

உடனே அந்த நஞ்செயிடை யாறென்கிற நகரத்திற் பிரவேசித்தனர். அங்ஙனம் பிரவேசித்ததும், மேகங்க ளொன்றோ டொன்று தாக்குவதினா லுண்டாகும் இடி முழக்கத்தைப்போல, அதிர்வெடிகள், ஓயாமல் சத்தித்தன. நாகசுரம், பாண்டு, தவளச்சங்கம், முதலாகிய ஐந்து வித வாத்தியங்களும், பற்பல தாரைகளுமாகிய துளைக் கருவிகளும், நிற்காமல் ஊதப்பட்டன. தப்பட்டை, டோல், டங்கா, பேரி, முரசு, முதலிய தோற் கருவிகளும், விடாமல் அடிக்கப்பட்டன. ஆக இந்த ஒலிகளெல்லாம் ஒன்று சேர்ந்த பேரொலி யின்னவிதமானதென்று வாயினாற் சொல்லமுடியுமோ ?

ஆறுசீராசிரிய விருத்தம்.

மகுட தோ ரணங்க ளாங்கே வளியினா லசையுந் தோற்றம்
மகிழ்வினாற் கந்தசாமி மாச்சபைக் குற்ற பேர்க்குத்
தகைமையா யிழுப்போ ரின்றித் தானசைந் தாடிக் காற்றை
மிகத்தரும் கருவிமிக்க வேய்ந்தது போலு மாதோ.

அந்நகர் வீதியில், பல மகுடதோரணங்கள், காற்றினால் அசையுந் தோற்றமெங்ஙன மிருந்தென்னில், நமது சிமான் கந்தசாமி கண்டாரவர்கள், இம்மஹாசபை கூடப்போகிறதைப் பற்றி மனமகிழ்ச்சி கொண்டவராய், யாவரும் ஆரோக்யமாகக் காற்றினுலாவுவதற் கென்றே ஆளிழுக்காமல் தானே அசைந்தாடி மிகுதியாகக் காற்றைத் தரத்தக்க மிஷின்பங்காவென்கிற எந்திரவளிக்கருவிகளமைக்க, அவைகளாடுவதுபோ லு மிருந்தது.

### ஷை விருத்தம்.

வந்தன ரலங்கரித்த மாச்சபைத் தோட்டப் பாங்கர்.
அந்தமில் தீபம் வேய்ந்த ஆலத்தி சுற்றலானார்.
வந்தவிவ் விருவர் தாமும் வகுத்த தம் விடுதி புக்கார்
கந்தனை யனைய மற்றோர் கவின்பல வகங்கள் புக்கார்.

சபா மண்டபத் தோட்டத் தருகாமையில் வந்தனர். உடனே இவ்விருவருக்கும், தீபமயமான பற்பல ஆலாத்திகள் சுற்றப்பட்டன. பிறகு இவ்விருவரும் தங்கட்கென்று வெவ்வேறாக வகுக்கப்பட்ட விடுதிகளிலமர்ந்தனர். சுப்பிரமணியக் கடவுளை யொத்த தேககாந்தியினையுடைய மஹாசங்க நிருவாக சபையார் முதலிய யாவரும், அவரவர்கட்கு வகுத்த விடுதிகளிலமர்ந்தனர்.

### ஷை விருத்தம்.

பின்னரங் கேய்ந்த தான பெரியதோ ரன்ன சாலை
தன்னிலங் காக்கலான தசவிதஞ் சுவையாறுள
அன்னங்க ளுபசரித்தாங் களிக்குமக் கூட்டத்தார்கள்
நன்னய மாகவூட்ட நனியுண்டு துயில்கொண் டாரால்.

உடனே அவ்விடத்தில் வகுக்கப்பட்டுள்ள பெரியதாகிய அன்னசாலையில் சமைக்கப்பட்ட அறுசுவைகளமையப் பெற்றனவாகிய பத்துவிதக் கறிவகைகளோடு கூடிய உணவை, அவ்வுபசரணைக் கூட்டத்தார், பரிவோடு உண்பிக்க உண்டு, தாம்பூலங்கொண்டு, துயின்றனர்.

### ஷை விருத்தம்.

ஓரிடத் தேக வேட்கை யுற்றவற் காங்குத் துன்பே
நேரிடு மெனினு மஞ்சான் நின்றிலான் செல்வான் போலும்
பாரிடத் திலாத காட்சி பார்க்கமுன் னஞ்சிச் சென்ற
தேரிடத் தலரி யுள்ளந் திடங்கொண்டாங் குதய மானான்.



ஒருவன், (தான்களவில் நேசித்தபெண்ணினது) ஒரு மாளிகையிற் சென்றால், அங்குள்ளாரால் தனக்குத் தீங்குண்டென்பதை நன்குணர்ந்தவனாயினும், அப்பெண்பாலுள்ள வேட்கையால் அத்தீங்குறு மெனச்சிறிது மஞ்சாமல், திடச்சித்தனாய்ச் செல்வது முண்டன்றோ? அதைப்போல அம்மகோற்சவம் நடப்பதற்கு முன்னாள் மாலையில் அந்தப் பாஸ்கர சுவாமிகளுக்கஞ்சிப்போன சூரியனானவன், இவ்வுலகத்தில் யாரும் பார்த்திராத அம்மகோற்சவக் காட்சியைப்பார்க்க வேண்டு மென்னும் வெட்கை மிகுதியால், அவ்வச்சஞ் சிறிது மின்றி மனோ திடங்கொண்டு அங்கு உதய மானான்.

### ஷை விருத்தம்.

யாவரு மெழுந்து காலை யியன்றநோற் கடனை தாததுக
காவிரி மூழ்கிச் செய்யுங் காலைவந் தனங்க ளாற்றிக்
காவொடு வயல்கள் நோக்கிக் காட்சிசெய் தோட்ட நாப்பண்
மேவினர் குழுமி யாங்கே மிகமகிழ்ந் திருந்திட் டாரால்.

யாவரு மெழுந்து அங்குள்ள கொல்லைகளிலேகிக் காலைக் கடனைக்கழித்துக் காவேரி நதியில் மூழ்கிக் காலைச் சந்திபா வந்தனாதிகளை முடித்துக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு மார்க்கங்களிலுள்ள பற்பல சோலைகளையும், மிகப் பச்சென்று செழிப்புற்றோங்கியுள்ள நெல் வயல்களையும், நோக்கிக்கொண்டே சபாமண்டபத் தோட்டத்துள் மேவி, யாவருமொருங்கு கூடி, மிகவு மகிழ்வுற்றிருந்தனர்.

### ஷை விருத்தம்.

இத்தகு தனிற்சிற் றுண்டி யெலாமவ ரளிக்க வுண்டச்
சித்திரத் தோட்டத் துள்ளே திரிந்தன ராகி நிற்கப்
பத்தரை மணிகட் கெல்லாம் பரிந்தவ ரளித்த பற்பல்
புத்தமு தன்ன வுண்டி புசித்தடைக் காயுங் கொண்டார்.

இச்சமயத்தில் பற்பல சிற்றுண்டிகளை அவ்வுபசரணைக் கூட்டத்தா ரளிக்கவுண்டு, அத்தோட்டத்தின்கண்ணே உல்லாசமாக உலாவிக் கொண்டிருந்தனர். பிறகு சுமார் பத்தரை மணிக்கெல்லாம் அறுசுவை யமைந்த பற்பல கறிவகைகளோடு கூடிய உணவை அவர்கள் பரிமாற உண்டு தாம்பூலங் கொண்டனர்.

பாகமங் நளன்போற்செய்வார் படிவமவ் வீமற்போல்வார்
ஏகமா யனேகராங்கே யின்னுணாச் செய்தாரொன்றால்

ஓகையோ டவர்கள் செய்த வுணுக்களி னளவுமாங்கே
ஏகியே யருந்தி னோர்தம் மிலக்கமு மியம்பற் காமோ?

பாகமாக உணவு செய்வதில் நளனுக்கொப்பானவர்களும், தேக பலத்தில் வீமசேனனுக்கொப்பானவர்களுமாகிய, அனேக பார்ப்பன சுயம்பாகிகள், அன்ன வகைகளையுங், கறிவகைகளையுஞ் சமைத்தார்களென்றால், உகப்போடு அவர்களாக்கிய உணவுகளின் அளவையும், அம்மகோற்சவத்திற்காக வந்திருந்து உண்டவர்களாகிய சனத்தொகையையும், இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லக்கூடுமோ?

## சபைக் காட்சி.

### ஷை விருத்தம்.

பனுமவ வாங்கி லேயப் பதினேந்தா றொருபான் மூன்றில்
மன்னிய பிரமாதீச வற்சர மானி மாதந்
துன்னிய விரண்டாந் தேதி சூரிய வாரந் தன்னில்
பின்னையு மணியொன் றான பிற்பகலாயிற்றாமால்.

யாவராலுஞ் சுருக்கமாகக் கூறப்பட்ட ஆங்கிலேயப் பதினைந்தாந்தேதி, ஆறாவது மாதம், பதின்மூன்றாவது வருடத்திற்குச் சரியான, நிலைபெற்ற பிரமாதீச௵ ஆனி௴ 2௳ ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணி யாயிற்று.

### ஷை விருத்தம்.

நன்றெனச் சேனைநாதன் நாற்புறங் களினு நோக்கி
நின்றதன் சேனை தன்னை நின்மினீ ராங்காங் கென்னச்
சென்றனர் விரைந்தங் கெட்டுத் திசையினுஞ் சூழ்ந்துநின்றார்
அன்றவர் செயலுக்கொப்ப வாரிவண் செய்யவல்லார்.

உடனே இதுதான் சபைகூடும் நற்சமயமென்று காப்டனென்கிற சேனாதிபதியானவர், நாற்றிசைகளினும் நோக்கமாக நின்ற வாலண்டியரென்கிற கவுரவசேனையை நோக்கி, இன்னின்னார் இன்னின்ன விடங்களினின்று பாதுகாக்கக் கடவீர்களென்று நியமிக்க, அதுபோல அவர்கள் எண்டிசைகளிலும் பாதுகாப்பாக நின்றனர். அன்று அவர்கள் அச்சனங்களையுபசரித்துப் பாதுகாத்தது போல இங்குயார் செய்யவல்லார்.

### ஷை விருத்தம்.

வரவினை யோர்ப்போர் நாதர் மற்றவர் தம்மை யேவ
அரங்கினுக் குறுவோர் தம்மை யழைத்தன ருபசரித்தே



தருநிதிக் கேற்றவாறு தானங்கடோறு மன்னோர்
சரசர வென்றே யேகிச் சபைதனி லிருந்த தோற்றம்.

அச்சமயத்தில் வரவேற்புச் சபாநாயகர்களிருவரும், தமது சபாங்கத்தினரையேவ, அவர்கள், அம்மஹா சபைக்கு வந்தவர்கள் யாவரையும், உபசரித்தழைத்தனர். உடனே எவரெவர்கள் எவ்வெவ்வளவு பணங்கொடுத்து எந்தெந்த ஆசனங்களுக்கு டிக்கட்டென்கிற ஆசனவாடகைச் சீட்டுகள் வாங்கினார்களோ அந்தந்தச் சீட்டுகளுக்குரிய ஆசனங்களி லவரவர்க ளமர்ந்து, காத்துக்கொண்டிருந்த தோற்ற மெவ்வணமிருந்ததென்னில்.

### ஷை விருத்தம்.

இந்திரன் சபைக்கங் கேய்வ னென்றவண் தேவரெல்லாம்
வந்துகாத் திருத்தல் போலும் மற்றந்தச் சமயந் தன்னில்
இந்திரன் வியாழனோடு மெழிற்சபைக் கெழுதல் போல
வந்தனன் குருவினோடு மாச்சபா நாதன் கேண்மின்.

தேவேந்திரனானவன் தனது கொலுமண்டபத்திற்கு வரப்போகிறானென்று அச்சுவர்க்க லோகத்திலுள்ள தேவர்களெல்லாம் அக்கொலு மண்டபத்தில் அவன் வருகையை யெதிர் நோக்கிக் கொண்டிருத்தல் போலு மிருந்தது. அந்தச் சமயத்தில் அவ்விந்திரனானவன், தனது குலகுருவாகிய வியாழ பகவானோடு அச்சபைக்காகப் புறப்பட்டு வருவதைப் போல, சபாநாயகர் தாமிருந்த விடுதியினின்றும், தமது குலகுருவாகிய ஸ்ரீமத் பாஸ்கர சுவாமிகள் சகிதராய், மஹாசபைக்காக வந்துகொண்டிருந்தனர். அவ்வைபவத்தையுஞ் சிறிது சொல்லக் கேட்பீர்களாக.

### சந்தம் ஏழுசீராசிரிய விருத்தம்.

அதிரும் வெடிகள்நன் கவணின் றேலிட
அலகில் வாத்திய வொலிமேவக்
குதிரை கரிகளா ளிரத மேவுரக்
குடைக ளோடுபல் கொடியேகப்
புதிய சவரிகள் புடையில் வீசிடப்
புனிதன் பாஸ்கரன் முனமேக
அதிப னவைதனக் கெனநன் கேய்ந்தவன்
அவையுள் மேவின னுணர்வீரே.

அதிர்வெடிகள் சத்திக்கவும், அளவில்லாத வாத்தியங்கள் கோஷிக்கவும், கஜரததுரகபதாதிகள் சூழ்ந்து வரவும், சந்திரவட்டக் குடைகள் பிடிக்கவும், பற்பல கொடிகள் பிடித்து வரவும், இருபுறங்களிலும் வெண்சாமரங்களை விரட்டவும், நமது பாஸ்கர சுவாமிகள் முன்பு செல்ல. அவரோடு சபாநாயகர், மஹாசபைக்கு வந்தனர்.

ஆறுசீராசிரிய விருத்தம்.

இன்னவ[illegible] டைக யாவரு மெழுந்தங் குற்றார்
பொன்னனோ டரியங் குற்றால் புலவாயா லெழுந்தி ராதார்
அன்னபாஸ் கரனும் பாங்க ராசனத் திருக்கத்தானுஞ்
சொன்னமாத்தவிசின்கண்ணே துலக்கமாயமர்ந்தான்மன்னோ.

இச்சபா நாயகர்; (அவ்விந்திரன் வியாழ பகவானோடு கொலு மண்டபத்தில் வந்தது போல) தமது குலகுருவோடு வந்தனர். உடனே அச்சபையில் வீற்றிருந்த யாவரும் எழுந்து உட்கார்ந்தனர். ஏனெனில், இந்திரன் மாத்திரம் தனியே வந்தாலும் அங்குள்ள தேவர்கள், எழுந்திருப்பது கடமை, அத்தகையோன், தேவர்களனைவர்க்குங் குருவாகிய வியாழ பகவானோடு வந்தால் அவர்கள், எழுந்திருக்கக் கேட்க வேண்டுமா? அது போல நமது சபா நாயகர் மாத்திரம் தனியே வந்தாலும் எழுந்திருக்கவேண்டியது முறைமையாக, அவரோடு தமது குலகுருவும் வந்தால் எழுந்திருக்கச் சொல்ல வேண்டுமா? அங்ஙனம் வந்தவுடன் மேற்படி சுவாமிகள், தம்பக்கலில் உன்னதமான ஆசனத்தில் வீற்றிருக்கத் தாமும் ஓர் உன்னதமான ஆசனத்தில் வீற்றிருந்தனர்.

கலி விருத்தம்.

ஆகாயீ தென்னவென் றுரும் புகழ்ந்திட
ஏகாம்ப ரப்பெய ரேற்றமெய்ஞ் ஞானியவ்
வோகார மவ்வுளங் கோங்கிய நாதனைப்
பாகோயீ தென்னவும் பாடினின் றனரோ.

முதலாவது:—இச்சபையின்கண் விரிஞ்சிபுரம் ஸ்ரீமத் ஏகாம்பர சுவாமிகள், யாவரும், ஆஹா இதென்னவென்று ஆச்சரியப் படவும், இவ்விசையின் தன்மை, வெல்லப்பாகினுக் கொப்போவெனவும், மிகவும் உருக்கமாக பிரணவத்துளோங்குகின்ற பரம்பொருளாகிய கடவுள் வாழ்த்துப் பாடினர்.



ஆறுசீ ராசிரிய விருத்தம்.

வருகையை யேற்குஞ் சங்க மகிபர்க ளிருவர்க் குள்ளே
யொருவன்தா யப்ப கண்ட னுவப்புடன் சபைக்கங் கான
நிருபனே யாதி யோர்க்கு நெறியினன் முகமன் கூறுந்
திருமுகம் படித்துப் பின்னர்ச் சிறப்பொடங் கிருந்தான் மன்னோ.

இரண்டாவது:— வரவேற்புச்சபாநாயகரிருவர்க்குள், பிரதம சபா நாயகராகிய, நாட்டரம்பள்ளி. மிட்டாதாரர். தாயப்ப கண்டரவர்களெழுந்து, சபாநாயகர் முதலிய யாவர்க்கும், தமது, வந்தனோபசாரப்பத்திரிகையைப் படித்து, யாவரையும் உவப்பித்து, அங்ஙனம் வீற்றிருந்தனர்.

அவ்வந்தனோபசாரப்பத்திரிகை, விரிவாகவும், நயமாகவும், எழுதியச்சிட்டு, அச்சபையில், யாவர்க்கும் வினியோகிக்கப்பட்டுள்ளதால், அவ்விபரங்களை மீண்டுக்கூறிலோம்.

அந்தியூர் குருக்களிந்த அவைக்கிறை யாக வென்றே
வந்துளா னவனே யாக மனக்கருத் துமக்கென் னென்றான்
நந்தமாச் சங்க நாதன் நன்றுநன் றஃதே யென்றான்
வந்துளா ரஃதே யென்றார் மன்னினு னவனே மன்னோ.

மூன்றாவது:— நமது, அந்தியூர் குரு சுவாமிகளெழுந்து, இம்மஹா சபைக்கு நாயகராகவென்றே; முன்னமே நிருவாக சபையாரால் நியமிக்கப்பட்டு, ஈண்டுவீற்றிருக்கும், மெஸர்ஸ் டெயிலரண்டு கம்பெனி துவிபாஷியாகிய, நா. திருவேங்கடசாமி நாயகரவர்களே, சபாநாயகராக வீற்றிருக்கக் கடவர். ஆயினும், மஹாசபையாரே! உங்கள் கருத்தென்னவென்று, தமது, பிரேரேபணையைத் தெரிவித்தனர். உடனே, நமது மஹாசங்க அக்கிராசனாதிபதியும், லாண்டிங் கண்ட்ராக்ட்டருமாகிய, அ. சொக்கலிங்க நாயகரவர்களெழுந்து, அதேசரிசரியென்று, ஆமோதித்தனர். சபையார்யாவரும், அங்கீகரித்தனர். உடனே, ஷை நாயகரவர்களும், அக்கிராசனம் வகித்தனர்.

அன்னவ னுபன்னி யாச மாயிற்றீண் டிடம தின்றால்
பன்னிலம் நிருவா கத்தர் பார்வையில் நடந்த யாவுந்
துன்னிய வர்த்த மானச் சுவடியைப் படித்தா ராங்கேப்
வன்னிய ரங்கீ கார மாற்றமு முரைத்தார் மன்னோ

நாலாவது:—அச்சபாநாயகருடைய உபன்னியாசப் பத்திரிகை வாசிக்கப்பட்டது. அது, குலாபிமானம், ஒற்றுமை, ஒழுக்கம், கல்வி, முத

லியவற்றைப்பற்றிச், சிற்சில மேற்கோள்களோடும், வெகு நயமாகவும், விரிவாகவும் அச்சிடப்பட்டுள்ளதால், அதையும் ஈண்டுக்கூறில், விரியுமென்றே, நிறுத்தினோம்.

ஐந்தாவது:—சென்றவருடத்தில் மஹாசங்க நிருவாக சபையார் பார்வையில், நடந்தேறிய, விவகாரங்கள் வரையப்பட்டுள்ள, ரிபோர்ட்டென்கிற, வர்த்தமானப் புத்தகம், வாசிக்கப்பட்டது. அதை, மஹா சபையார் யாவரும், அங்கீகரித்தனர்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

நங்குலத்தி லுதித்தவரெங் கிருந்திட் டாலும்
நண்ணியவர்க் கருநெறியை நவிலா நிற்போன்
பொங்குமபி மானிதிரு மயிலை வாழும்
புகழ்ராச ரத்தினப்பே ருடைய சீலன்
நங்குலமாச் சங்கமதற் குதவி சங்கம்
நண்ணினவாற் சிற்சிலநாட் டவையே போதா
எங்கேமுறல் நலமென்றான் குப்பு சாமி
யிதையாமோ திக்கவவை யோரு மேற்றார்.

ஆறாவது:—(தாம் உத்தியோக முகாந்திரமாக மாறுகிறவூர்களோடும்) நங்குலத்தினர் எவ்விடத்திலிருந்த போதிலும், அவர்கள், பூர்வாசாரங்களுக்கு விரோதமாக நடப்பார்களேயாகில், அவர்களுக்குப் பூர்வாசார முதலிய, சன்மார்க்கங்களைப் போதிப்பவரும், மிகுந்த, குலாபிமானியும், சென்னைத் திருமயிலை வாசியுமாகிய, பென்ஷன் எட்டிராப்ஸ்மேன், இராஜரத்தின நாயகரவர்களெழுந்து, நமது மஹாசங்கத்தைச் சார்ந்த உபசங்கங்கள், ஏகதேசம், சிற்சில ஜில்லா, தாலுக்கா முதலிய ஊர்களில் மாத்திரமிருக்கின்றன. அவையே போதா. ஆகையால், நம்மவர், எந்தெந்த ஜில்லா, தாலூக்கா, கிராமங்களிலிருக்கின்றனரோ, அந்தந்த ஊர்களோடும், தலைமையாயுள்ள நங்குல கனவான்கள், ஆங்காங்கு ஒவ்வோர் உபசங்கங்களை யேற்படுத்தினால், ஆங்காங்குள்ள நங்குலத்தினருக்கு, நங்குலவொழுக்கம், பூர்வாசாரம், கல்வி, முதலிய குலதருமங்களைப் போதிப்பதற்காதாரமாயிருக்குமென்றும், அங்ஙனஞ் செய்யுப்படி, ஈண்டுவிஜயஞ் செய்திருக்கும், நங்குல கனதனவான்களை, மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறோமென்றும், பிரேரேபித்தனர். உடனே ஷை திருமயிலை வாசியும், ஆங்கிலேய உத்தியோகஸ்தருமாகிய, நமது, குப்பு



சாமி நாயகரவர்களெழுந்து, அதையாமோதித்தனர். சபையார் யாவரும், அங்கீகரித்தனர்.

ஆறுசீ ராசிரிய விருத்தம்.

பாலால மரத்தடியிற் பரிந்தொருநால் வருக்குரைத்தபண்பின்மேலாந்
தாலால சுந்தரனைத் தனக்கினிய தையலின்பாற் றனித்தூதேவும்
மேலால சுந்தரன்வந் துதித்தனனோ வெனவெவரும் வியந்து கூறும்
ஆலாலசுந்தரனென் றொருவனுளன் தமிழ்க்கலைகளனைத்தும் வல்லான்

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அன்னவனங் கெழுந்திருந்திச் சங்கந் தோன்றி
யாண்டிருபத் தைந்தாயு மில்லொன் றின்றால்
வன்னியமாச் சங்கமதன் நிருவா கத்தர்
வாங்குதற்கோர் மாளிகையை யுன்னி யுள்ளார்
அன்னதற்கே நிதிபோதா திருக்கின் றாரால்
அதைவாங்கித் துரைகந்த சாமி தந்தால்
சென்னையெனும் பருப்பதமேய் தீப மென்னச்
சீர்த்தியவற் கென்றென்று மோங்கு மென்றான்.

ஏழாவது:—கல்லால விருக்ஷத்தின்கீழ் வீற்றிருந்து, சனகாதிமுனிவர்களுக்குப் பிரணவப்பொருளை யுபதேசித்தருளிய திருநாவினையுடைய, சிவபெருமானையே, தமக்குகந்த, பரவைநாச்சியார்பாற் றூது செல்லும்படியேவிய, சைவக்கொழுந்தாகிய, சுந்தர மூர்த்தி நாயனாரே, மறுபடியும் வந்து, அவதரித்தனரோ வென்று, பலர் வியந்து கூறும்படிச், சைவசித்தாந்த சாத்திரமுதலிய தமிழ்க்கலைகளனைத்திலும் வல்லாராகிய, நமது காஞ்சி, ஆலால சுந்தரம்பிள்ளையவர்களெழுந்து; இம்மஹாசங்கந் தோன்றி, இருபத்தைந்து வருடமாகியும், அதற்கெனச்சொந்தமாளிகை யொன்றில்லாமையால் ஷை மஹாசங்க நிருவாக சபையார், தற்காலம் அவ்விடத்திலொரு மாளிகையை, வாங்க உத்தேசித்திருக்கின்றனர். ஆயினும் அதன் கிரயத்தொகைக் கேற்ப, அவ்வளவு நிதி, தற்காலம், சங்கத்திற் கில்லாமையால், கொஞ்சம் பின்வாங்குகின்றனர். ஆகையால், அம்மாளிகையை, நமது துரை, நஞ்செயிடையாறு, ச. கந்தசாமி கண்டரவர்களே, வாங்கித் தருவாராகில், சென்னைமாநகரமென்கிற மேருமலையின்மேலிட்ட தீபத்தைப் போலே, அவருடைய, கீர்த்தியானது, சேதுசீதாசலபரியந்தம், என்றென்றைக்கும் பிரகாசிக்குமெனப் பிரேரேபித்தனர்.

## ஆறுசீ ராசிரிய விருத்தம்.

வேங்கட சாமி யென்றே விளம்புமுற் போத கார்யன்
ஆங்கிது நன்று நன்றென் றநுமோதித் திருக்கு முன்னர்
ஓங்குமாச் சபைஞ ரெல்லா மொருங்குள மகிழ்ந்தங் கம்மா
தாங்கடங் கரங்கள் கொட்டித் தவவொலி செய்தார் மன்னோ.

உடனே, (ஆங்காங்குள்ளார்க்குத் தக்கபடி, மிகச்சாதுர்யமாக, ஒழுக்கம், கல்வி, பூர்வாசார முதலியவற்றைப் போதிப்பதில் வல்லவரும், முன்பு இம்மஹாசங்கத்தாரால் போதகாசிரியராக நியமிக்கப்பட்டிருந்தவருமாகிய,) K. R. வேங்கடசாமி நாயகரவர்களெழுந்து, மிகவும் உவப்போடு அதையாமோதிக்க ஆரம்பித்தனர். அவ்வார்த்தைகள் முடியுமுன்னர், அச்செயல் அவரால் முற்றுப்பெறுமெனக்கருதியோ, மற்றுயாது காரணத்தினாலோ, அனைவரும், பெருமகிழ்ச்சி கொண்டு பேரொலியோடு, கரகோஷ்டஞ்செய்தனர்.

அருத்தநா ரீச னென்றே யறையுநம் புலவ னின்று
கருத்தோடு நமதுமுன்னோர் கட்டிய மடங்க ளாதி
சிரத்தையாப் பார்ப்பா ரின்றிச் சிதைவுறு மவற்றை நன்கு
திருத்தமாய்ப் புதுக்கல் நன்றே சீர்த்தியா மதனா லென்றான்

புகன்றதோ ருரைநன் றென்றான் பூபதி பழனியப்பன்
சகப்புகழ் சபைஞர் யாருஞ் சரிசரி யஃதே யென்றார்
நகுமொளி குன்றிப் பானு நண்ணினன் மேற்கி லம்ம
மிகுமொளி யனந்தந் தீபம் விதவித மாக வைத்தார்.

எட்டாவது :— (வன்னியவம்சப்பிரகாசிகை முதலிய சிலநூல்களியற்றிய) புலவராகிய, சேலம், அர்த்தநாரீச நாயகவர்மா அவர்களெழுந்து, பற்பல புண்ணிய க்ஷேத்திரங்களில், நமது முன்னோர்களால் கட்டப்பட்ட, சத்திரங்களும், மடங்களும், மண்டபங்களும், கோபுரமுதலியவைகளும், மேற்பார்வை பார்ப்பவரில்லாமையினாலோ, பணமின்மையினாலோ. பழுதுபட்டிருக்கின்றன. அவைகளைச் சீர்ணோத்தாரணஞ்செய்யவேண்டியது நங்குலச் சீமான்களின் முக்கிய கடமையேயாம். அங்ஙனஞ் செய்வார்களாகில், அதனால், நங்குலத்தினருக்கு, அழியாப்புகழும், புண்ணியமு முண்டாகு மெனப் பிரேரேபித்தனர். உடனே, நமது பூபதி பழனியப்பநாயகரவர்கள், அதையாமோதித்தனர். சபையாரனைவரும், அங்கீகரித்தனர்.



அச்சமயத்தில் சூரியனானவன், தன்னுடைய பிரகாசங்குன்றி, மேற்றிசையில் அஸ்தமயமாயினான். உடனே, ஆச்சரியப்படத்தக்க, பலவிதமான, அனேகந்தீபங்களேற்றப்பட்டன.

பொன்னெனுங் கந்த சாமிப் புகழெனத் தீபமெல்லாந்
துன்னியாங் கோங்கி நிற்குஞ் சுந்தரப் பந்தலாதி
இன்னெழிற் றோற்றங் கூறி யிந்துவின் காட்சி யோதி
அன்னமாச் சபையிற் பின்னு மாயவை யுரைசெய் வாமல்.

பொன்போலுங் குணமுடைய நமது, ச. கந்தசாமி கண்டரவர்களுடைய, கீர்த்தியைப்போலே, அங்கு ஏற்றப்பட்டுள்ள தீபங்களின் பிரகாசமோங்கிய பந்தல் முதலியவற்றின் காட்சியையும், சந்திரனது தோற்றத்தையுஞ் சிறிதுகூறி, அச்சபையில் அதன் பின்னர், நிகழ்ந்த உபந்நியாச முதலியவற்றைச் சொல்லுவாம்.

## எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பனிமதியின் வரிசையெனக் கந்தத் தீபம்
பரிதிபல வெனப்பெரிய வாடித் தீபம்
கனம்போலுங் ககனதனு வதனைப் போலுங்
கரியதுகில் பூப்பணிகள் தொங்கல் மற்றுஞ்
சனக்ககன மீன்போலும் நாள்கள் போலுஞ்
சகலவிதத் தீபங்கள் யாவுங் கொண்ட
இனியபெரு வெண்டுகில்கொள் பந்தல் தோற்ற
மிணையில்சுதை விசும்பொன்றங் கிருத்தல் போலும்,

அழகியவெண்மையான வஸ்திரங்கள் கட்டப்பட்டு ஆகாயத்தை யளாவிய சபாமண்டபமாகிய பிரமாண்டமான பந்தலானது, குளிர்ச்சிபொருந்திய பல சந்திரர்களின் வரிசையைப்போலும் அனேகக்காந்தத் தீபங்களைக் கொண்டும், பலசூரியர்களைப்போலும் சுற்றிலுங்காய்களைப்ந்த பெரிய பவர்லயிட்டுகளென்கிற பாரியகண்ணாடி விளக்குகளைக்கொண்டும், மேகத்தைப்போலும் சிற்சில நீலவஸ்திரங்களைக்கொண்டும், இந்திரதனுசைப்போலும் ஆங்காங்குச் சரிகைப் பூவேலைகளோடு, சரிகைஜாலர்முதலியவற்றைக் கொண்டும், கூட்டமாகிய, வான்மீன்களோடு இருபத்தேழு நக்ஷத்திரங்களைப்போலும் பலவகையான அனேகந் தீபங்களைக்கொண்டும், விளங்குவதால், அந்தப்பந்தலினுடைய தோற்ற மெவ்வாறிருந்த

தென்றால்:—நீலநிறம்வாய்ந்த ஆகாயமொன்றிருப்பதேயன்றி, வெண்ணிறமுடைய, ஆகாயமுமொன்று, அவ்விடத்திலிருத்தல் போலும்.

ஆறுசீ ராசிரிய விருத்தம்.

அரம்பையிற் றெங்கு கந்தி யம்பனை கூந்தற்பூக
மரமுத லாய வந்தின் வண்குலை யேய்ந்த தோற்றம்
சுரநகர் கற்ப கத்தின் றொல்விதை கொணர்ந்திங் காக்க
மரம்பல வாகிப் பற்பல் வகைக்கனி யளித்தல்போலும்.

அத்தோட்டத்தின் வாயில்கள் முதலிய விடங்களிலுள்ள தம்பங்கள் தோறுங் கட்டியுள்ள வாழைமரங்களிற்றொங்குகிற அவ்வாழைக்குலைகளோடுகூட தெங்கின் குலைகளும், பனங்குலைகளும், கமுகந்தாறுகளும், கூந்தற்பனைத்தாறுகளும், ஈச்சங்குலைகளும், பலாக்காய் முதலியவைகளும் கட்டப்பட்டுள்ள தோற்றமெங்ஙனமிருந்ததென்னில் :— தேவலோகத்திலுள்ள கற்பகவிருக்ஷத்தின் பழைமையான விதைகளைக் கொண்டுவந்து, அங்குப் பயிராக்க, அவைகள், பலமரங்களாகி ஒவ்வொன்றும் பலவிதமான கனிகளையளித்திருத்தல் போலும்.

இன்னுர்பல் மரங்க ளாங்கே யேகமா யிருக்குந் தோற்றம்
அன்னவா மரம்பை பற்ப லருங்கனி யளிக்குஞ் சேதி
தன்னையங் குணர்ந்து நோக்கத் தருவெலா மொன்று கூடி
அன்னமாத் தோட்டந் தன்னு ளமர்ந்தன போலு மேதோ.

அத்தோட்டத்தின்கண், இன்னும் பற்பல விருக்ஷங்களும், கூட்டமாயிருக்கிற தோற்ற மெவ்வாறிருந்ததென்னில்:— உலக இயற்கைக்கு மாறாக, மானிடப்பெண்கள், மிருகங்களையீன்றாலும், மிருகங்கள், வேறுமிருகங்களையாவது, மனிதர்களையாவது, ஈன்றாலும், அதிசயமாகையால் அவற்றை, அநேகர், ஒருங்குசேர்ந்து போய்ப் பார்ப்ப துண்டன்றோ? அதைப்போலே அவ்வாழைமரங்களிற் பற்பல கனிவகைகள் காணப்படுவதால் அச்செய்தியை அம்மரவினங்கள் கேள்வியுற்று, அதிசயித்து, ஒருங்குகூடி, அவற்றைப் பார்க்க அவ்விடத்தில் கூட்டமாக வந்திருப்பனபோலும்.

அந்தமாச் சபையைச் சுற்றி யார்ந்துள தம்பந் தோறும்
விந்தையாங் கொடிக ளெல்லாம் வீசிநன் காடுந் தோற்றம்
வந்தமாச் சபைஞர்க் கெல்லாம் வளியுற விசிறி கொண்டு
அந்தமில் பெயர்கள் நின்றே யவணவண் வீசல் போலும்



அந்தச் சபாமண்டபத்தைச் சுற்றிலும், அநேக ஸ்தம்பங்கள் நடப்பட்டு, அவற்றில், பல நிறங்கள் வாய்ந்த கொடிகள் வரிசையாக, ஆடிக்கொண்டிருந்த தோற்ற மெவ்வாறிருந்த தென்னில்:—அச்சபையின்கண் வீற்றிருந்த யாவர்க்கும், ஆரோக்கியமான காற்றுண்டாவதற்காக (நமது சங்காபிமானியாகிய, ச. கந்தசாமிகண்டரவர்களால் நியமிக்கப்பட்ட) ஆள்கள், அச்சபா மண்டபத்தைச்சுற்றி நின்றுகொண்டு, ஆலவட்டங்களால், விசிறிக்கொண்டிருந்தார்கள் போலும்.

பாவைகள் மேடை மீதிற் பதிந்தொளிர்ந் திருந்த தோற்றம்
கோவையங் கனிவாய் வல்லிக் கொடியிடை நீலவுண்கண்
ஆவியைக் கவருங் கொங்கை யரம்பையர் வலாரிமுன்னர்
மேவியங் காடற்கென்றே வேளைபார்த் திருத்தல் போலும்

அச்சபா மேடையின் இருபுறங்களிலும், மிகவும் உன்னதமான பெண்பிரதிமைகளிருந்த தோற்றமெங்ஙன மிருந்ததென்னில்:— கோவைக் கனியையொத்த அதரத்தையும், வல்லிக்கொடி போன்ற இடையையும், நீலோற்பலம் போன்ற மையுண்டகண்களையும், ஆடவருடைய ஆவியைக் கவரத்தக்கனவாகி, அதிரமணியமாக, திரண்டுள்ள கொங்கைகளையுமுடைய அரம்பாஸ்திரீகள் தேவேந்திரனுடைய கொலுமண்டபத்தில் வந்து, அத்தேவேந்திரனுக்கெதிரே பரதநாட்டியமாடுவதற்காகச் சமயம்பார்த்திருப்பது போலும்.

சந்திர னுதய மாகிச் சாற்றருங் காட்சி நோக்கி
இந்தநல் விடத்த னேக மிரவியு மதியு முண்டென்
விந்தையென் றழுங்கி வேர்த்தவ் வெளிர்முக மாசதாகி
முந்திய தோற்ற மின்றி முகஞ்சிறுத் தேகுவானல்

அச்சமயத்தில் சந்திரனுதயமாகி சொல்லுதற்கரிய அத்தீபங்களின் காட்சியை நோக்கி, என்னசெய்தானென்றால்:— ஆகாயத்தில் நாமும் ஒருவனே வசிக்கிறோம். சூரியனும் ஒருவனே வசிக்கிறான். அங்ஙன மிருக்க இவ்விடத்தில் பல சூரியர்களும், நம்மைப்போன்ற பல சந்திரர்களும், வசிக்கின்றார்களே, இதென்ன விந்தையென்றெண்ணி, அந்தப் பல சந்திரர்களும், பல சூரியர்களும், ஒன்றுகூடி, ஒருகால் அவர்கள் நம்மை யென்னசெய்வார்களோ வெனப் பயந்து, தேகம்வேர்த்து, வெளுத்த தனது முகத்தில் மாசுண்டாகி

தன்னுடைய முகஞ்சின்னதாகி. மெல்லச்சென்று கொண்டிருந்தான். அதாவது :— தம்மை வெல்லக்கூடிய பகைவரைக்கண்டால், பயத்தினால் வேர்த்துப் போவதும், முகத்திற் பிரகாச மின்றி மாசடைவதும், முகஞ்சின்னதாய்விடுவதும், அப்பகைவர்க்கெதிரே நிற்காமற் செல்லுவதும், உலக இயற்கையாகையால், அச்சந்திரனிடத்தில் பனியிருப்பதாலும், களங்கமிருத்தலாலும், அச்சமயம் பூர்வபக்ஷ துவாதசிச்சந்திரனாகையால் தனது பூரணமுகமின்றிக் குறைந்திருந்ததாலும், அச்சந்திரனுதயமாகி ஊர்ந்துகொண்டேயிருந்ததாலும், அச்சந்திரனுடைய தோற்றம், மேற்கூறிய தீபங்களாகிய பல சந்திர சூரியர்களைக் கண்டு பயந்து, வேர்த்து, மாசடைந்து முகஞ்சிறுத்துப், பின்வாங்கிச் சென்றதுபோலுமிருந்ததென்றுணர்ந்துகொள்க. இவை நிற்க மேற்கூறியவர்களின் உபன்னியாசங்கட்குப்பிறகு, யார் எதைப் பற்றி உபன்னியாசஞ்செய்தாரென்றால் :—

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வன்னியர்தஞ் சனத்தொகையைக் கணித்துநோக்கில்
மாச்சங்கத் தவர்வகுத்த கல்விச் சாலை
மன்னியதண் கடல்கரைத்த புளிபோ லாமால்
வைக்கநல மின்னமும்பல் கல்விச் சாலை
என்னுமுரை பூபதியாஞ் சக்ரவர்த்தி
யியம்பிடலு மோகனனங் காமோதிக்க
அன்னமாச் சபையினர்க டாமு மேற்ற
ராகுகமற் றுளவிடயம் நாளைக் கென்றார்.

ஒன்பதாவது :— காவேரிப்பாக்கம், நமது, பூபதி சக்ரவர்த்தி ராஜா அவர்களெழுந்து, நம்மிந்து தேசத்திலுள்ள, வன்னியர்களுடைய சனத்தொகையைக்கணக்கிட்டுப்பார்த்தால், அவ்வன்னியர்களுடைய, ஏழைப்பிள்ளைகள், வாசிப்பதற்காக, மஹாசங்கத்தாராலும். உபசங்கத்தாராலும், ஏற்படுத்தப்பட்டுள்ள கல்விச்சாலைகள், கடலிற்கரைத்த புளியின்சுவையைப் போன்று, பெரும்பயனைத் தரமாட்டா, ஆகையால், நமது மஹாசங்கத்தாரும், உபசங்கத்தவர்களும், இன்னும் ஆங்காங்குப் பற்பல கல்விச்சாலைகளை யேற்படுத்திக் கல்வியை யபிவிர்த்திசெய்வது, அத்தியாவசியமென்று, பிரேரேபித்தனர். உடனே நமது மோகன நாயகரவர்களெழுந்து, அதையாமோதித்தனர். சபையார் அனைவரும் அங்கீகரித்தனர். மற்றவிஷயங்கள் நாளைக்காகட்டுமென்று நிறுத்தினார்கள்.



கலி விருத்தம்.

சவையி னுதனஞ் சற்குரு நாதனோ
டவையுள் மேலவர்க் காங்கலர்த் தொங்கலிட்
டுவகை யோடவை யுற்றுள போர்க்கெலாம்
நவையிற் சந்தடைக் காய்மற்று நல்கினர்

உடனே, சபாநாயகர்க்கும், சற்குரு நாதர்க்கும், மாலையிட்டு அதன் பிறகு அச்சபையின்கண் வீற்றிருந்த இராஜாங்க உத்தியோகஸ்தர் முதலிய பிரபலஸ்தர்களுக்கு மாலையிட்டனர். அதன் பிறகு, சபாநாயகர் முதலிய யாவர்க்கும் முறையே தாம்பூலம், சந்தனம், புஷ்பம், முதலிய மரியாதை செய்தனர்.

ஆறுசீராசிரிய விருத்தம்.

வந்தபோ துற்றவான வாத்திய வொலிகள்விஞ்ச
அந்தரம் பிளக்குமென்ன வதிர்வெடி தம்தம்மென்ன
சுந்தரக் குடைகளாதி தொல்விரு தனைத்துமேந்த
முந்திய சனங்களோடு மும்மடிச் சனங்கள்சூழ
சபைகலைந் திட்டபின்னர் சற்குரு நாதனோடு
அவைக்கிறை தானும்போந்தவ் வணிநகர் வலமதாகி
இவர்கடம் விடுதிச்சென்று ரிவரொடு மற்றையோர்க்கும்
நவநவ மானவுண்டி நல்கவுண் டுறங்கினரால்

உடனே சபைகலைந் தெழுந்த பின்னர், முன் சபைக்கு வந்தபோது என்னென்ன வாத்தியங்கள் கோஷித்துவந்தனவோ அந்தந்த வாத்தியங்களெல்லாம் அதிகமாகக் கோஷித்து வரவும், அந்தரம் பிளவுபடுமோவென யாவருஞ் சொல்லும்படி, அதிர் வெடிகள் பேரொலிசெய்யவும், அழகிய குடை, கொடி க்ஷாமரம், ஆலவட்டம், தாலவட்டம், மகரதோரணம், அருகுதீவர்த்தி முதலிய விருதுகளேந்திவரவும், நமது சற்குருநாதரும் சபாநாயகரும் நகர்வலமாகித் தத்தமக்குரிய விடுதிகளி லமர்ந்தனர். இவ் விருவருக்கும், மற்றையோர்க்கும், ஆங்காங்கு, அறுசுவையோடு கூடிய புதுமையான உண்டிகளை அவ்வுபசரணைக் கூட்டத்தார் பரிமாற உண்டு, தாம்பூலங்கொண்டு துயின்றனர்.

முன்னநா ளாயகாட்சி முழுமையு நோக்கிலாமல்.
அன்னமேற் றிசையிலேகு மலரிமற் றுள்ளயாவும்
பின்னநாட் காலைசெய்யப் பேசுமாச் சபைஞர்சேதி
தன்னையாங் குரைக்கக்கேட்டுச் சார்தல்போ லுதயமானன்

முதல்நாளில் நடந்த, மஹாசபாக்காட்சியைப் பார்க்க, ஆவல்கொண்டுவந்து, தன்னுடைய உத்தியோக நிர்ப்பந்தத்தினால், அக்காட்சி முழுமையும் பார்ப்பதற்கில்லாமல், அரைகுறையாகப் பார்த்துவிட்டு, மேற்கிற்சென்ற சூரியனானவன், அம்மஹாசபையில் அன்று இரவு 8-மணிவரையில் நடந்தேறிய விஷயங்கள் போக மற்ற விஷயங்களை, நாளை காலையில் நடத்தவேண்டுமென்று தீர்மானித்த செய்தியைச் சிலருரைக்கக்கேட்டு, அக்காட்சியையும் நோக்க விருப்பங்கொண்டு வருபவன்போல உதயமானான்.

காவணத் தரும்பொ டின்னார் கண்ணரும் பலரக்கொல்லை
மேவினர் காலைபோக்க வேண்டிய கடனைப்போக்கி
வாவியி லேகித்தந்த மாசொழித் துடனீராடி
தேவமு தென்னச் செய்த சிற்றுணா வருந்தினாரால்

சோலைகளிலுள்ள பூவரும்புகளோடு, அக்கூட்டத்தினருடைய கண்ணரும்புகளும் மலர்ந்தன. உடனே அவர்கள், கொல்லைகளிலேகிக் காலைக்கடனைக் கழித்து விட்டுத் தடாகங்களிலேகித் தந்த தாவள்ளியஞ்செய்துகொண்டு, நீராடி, சந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு, சபாத்தோட்டத்தின்கண்வந்து, தேவாமுதமென்னும்படி செய்வித்த சிற்றுண்டிகளையருந்தினர். அதன் பிறகு என்ன செய்தார்களென்றால்:—

முன்னாட் கூட்டம்போலு முழுச்சபை கூடிநிற்க
அன்னமாச் சபையிநாத னந்தியூர்க் குருக்களோடு
துன்னினன் மணியோரெட்டு தொட்டவ ளையமேன்மை
என்னென விரும்பிக் கேட்போர்க் கெனச்சிறி துரைப்பன் மாதோ

முதலாவது:—முதல்நாள்கூட்டத்தைப் போலவே மறுநாள் காலை சுமார் 8-மணிக்குப் பெருஞ்சபை கூடியிருக்குஞ் சமயத்தில், மேற்கூறிய சபாநாயகர், அந்தியூர் குருசுவாமிகளோடும் அச்சபையில் வந்து வீற்றிருந்தனர். அச்சமயந்தொடங்கி, அவ்விடத்திலென்னென்ன விசேடங்கள் நடந்தேறினவென விரும்பிக் கேட்பவருணரும் பொருட்டு, அவற்றையுஞ் சிறிதுகூறுவாம்.

மன்னிய வைசிராயா மன்னவன் மனைவியான
அன்னை,தன் நாயகற்கங் காபத்து நீங்கலெண்ணி
இன்னவன் சனனநாளி விளஞ்சிறு மாணவர்க்கே
சின்னநல் லுணவு நல்கத் திட்டஞ்செய் நாளோன் றுண்டால்



179467

அன்னநா டன்னில் நங்கட் காங்கல்[illegible]
சின்னநம் மாணவர்க்கே சிற்றுணா வளித்த[illegible]
அன்னதை யன்பின்மிக்கவ் வன்னையர்க் குரைத்தல்வேண்டு
மென்னுமித் தீர்ப்பையந்த விருஞ்சபையவர் தாஞ் செய்தார்

வைசிராய் என்கிற நிலைபெற்றமாட்சிமை தங்கிய நமது இந்ததேச இராஜப்பிரதிநிதி யவர்கட்கு, டில்லிமாநகரிலேற்பட்ட விபத்தானது, சர்வேஸ்வரனுடைய கிருபையால், சூரியனைக்கண்ட பனிபோல நீங்கிப்போனதாலாகிய மகிழ்ச்சியினால், அவர்மனைவியாராகிய லேடி ஆர்டிஞ்ச் பெருமாட்டியார் இவ்விந்துதேசக் கல்விச்சாலைகளிற் பயிலுகின்ற, சிறுவர், சிறுமியர்கட்குச் சிற்றுணவுகளை, அவர் ஜனனதினத்திற்குச் சரியான 1914௵ ஜூன்மீ 13உயில் அளித்து மகிழ்ச்சிகொண்டாட வேண்டுமென்று உத்தரவு செய்திருப்பதை யனுசரித்து, நாமும் நமது மஹாசங்க ஜில்லாசங்க தாலுக்காசங்கங்களைச்சார்ந்த பாடசாலைகள்தோறுமுள்ள சிறுவர் சிறுமியர்களாகிய மாணவர்கட்குச் சிற்றுண்டிகளை யளிக்கக் கடவோமென்றும், இச்சேதியை மிகுந்த அன்புடைய அப்பெருமாட்டியாருக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றும், அச்சபையாரால் அவ்விடத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

Y592V
4116

சவைநாத னெழுந்தந்தப் புதுவைசில்லாத்
தனிச்சங்கப் பிரதிநிதி யாகிப் பின்னும்
அவனிபுகழ் மாச்சங்க நிருவாகத்தர்
அவைதனிலோ ரங்கத்த னாகின்றோன்
அவுகாவென் றொரு பெயரோன் சட்டப் பேச்சில்
அதிநிபுணன் நங்கள்சதா சிவப்பேர்த்தீரன்
புவியினர்நீத் தேசியதை பெண்ணினைந்து
புகன்றிடுவோ மவன்மனைக்கிச் சேதியென்றான்.

இரண்டாவது:— அச்சபாநாயகவர்களெழுந்து ஆதிமுதல் புதுவைஜில்லாச்சங்கப்பிரதிநிதியாயிருப்பதோடு இப்போது மஹாசங்க நிருவாக சபையாரிலொருவராயிருப்பவரும், பிரஞ்சிபாஷையில் அவுகாவென்கிற பட்டப்பெயர்பெற்று நீதிசபையில் சட்டங்களை யெடுத்துரைப்பதில் வல்லவருமாகிய, நமது சதாசிவ

நாயகரவர்கள், இப்பூலோக வாழ்க்கையை வெறுத்துச் சுவர்க்க
லோக வாழ்க்கையை நாடிச் சென்றதை யெண்ணி நாமனை
வரும் துக்கசாகரத்தி லாழ்ந்து, இவ்வனுதாபத்தை அவர்குடும்பத்
தாருக்குத் தெரியப் படுத்தக் கடவோமெனப் பிரேரேபித்தனர்.
உடனே சபையார் அனைவரும் அங்கீகரித்தனர்.

சொல்லரிய புகழரச முனிவனின்றே
　　சொந்தநிதி தனிலெல்லாப் பொருளுஞ் சேர்த்துச்
சில்வர்ஜூ பிலியென்றே யாங்கிலேயர்
　　செப்புகின்ற கால்நூற்றாண் டுற்சவத்தை
அல்லினொடு பகலுமுழைத் தருமையாக
　　அனுசனொடுந் தானுஞ்சேர்ந் தாக்கிவைத்த
செல்வினத்தின் குணக்கந்த சாமிக்கீவீர்
　　சீர்த்திமிகு மொருபட்டப் பெயரேயென்றான்.

மூன்றாவது:—சொல்லுதற்கரிய புகழ்வாய்ந்த அரசமுனிவ
ராகிய ஸ்ரீமத் பாஸ்கரசுவாமிகளெழுந்து:—தம்முடைய சொந்த
நிதியினால் அரிசி பருப்புமுதலிய உணவுப் பொருள்களையும், பந்தல்
முதலியவைகளுக்கு வேண்டிய சகலமான பொருள்களையுஞ் சேக
ரித்துத் தமது திருத்தம்பியொடு சேர்ந்து அல்லும் பகலுமாகப்
பாடுபட்டு, ஆங்கிலேயரால் சில்வர்ஜூபிலியென்று சொல்லப்
படுகிற நமது மஹாசங்க இருபத்தைந்தாவதுவருஷமகோற்ச
வத்தை மிகவுங் கெம்பீரமாகவும், புதுமையாகவுஞ் செய்வித்த
வரும், பிரதிபலனைக் கருதாத மேகத்தைப்போன்ற ஈகைக்குணத்
தினையுடையவருமாகிய நமது ஸ்ரீமான், ச. கந்தசாமி கண்டரவர்
களுக்குச் சிறப்பமைந்த ஓர் பட்டப்பெயரைக் கொடுக்கக்கடவீர்
களென்றார்.

## ஆறுசீராசிரிய விருத்தம்.

அம்புகுலத் தாற்பகையை யடக்கிடுநங் குலதிலகன்
　　அளவிலாமற்
பம்புகுலப் பேர்நிதியன் நஞ்செயிடை யாறுடையன்
　　பழுதிற் றன்சொல்
நம்புகுலத் தோர்க்குதவி புரிகந்த சாமிக்கோர்
　　நவையில் சீர்த்திச்
சம்புகுல சேகரப்பேர் வன்னியமாச் சங்கத்தார்
　　தந்திட்டாரால்,



நான்காவது:—உடனே நமது வன்னிகுலக்ஷத்திரிய மஹாசங்
கத்தார், அம்புக்கூட்டத்தினால் பகைவர்களை யடக்கி இப்பூமண்
டலத்தையாண்ட நமது வன்னிகுலத்திற்குத் திலகம்போன்ற
வரும், அளவில்லாமற்குவிக்கப்பட்ட பெருநிதியை யுடையவரும்,
நஞ்செயிடையாறென்கிற கிராமத்தைத் தமக்கு இருப்பிடமாக
வுடையவரும், தவறுதலில்லாத தமது சொல்லை நம்பித் தம்மிடம்
வருகிற நம்மினத்தினருக்கு வேண்டிய உதவிகளைப்புரிபவருமாகிய
நமது ச. கந்தசாமி கண்டரவர்களுக்குச் சம்புகுலசேகரன் என்
கிற ஓர் சிறந்த பட்டப் பெயரை யளித்தனர்.

## எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வன்னியமாச் சங்கமதற் ககந்தாவென்றார்
　　மனக்கருத்தை யுரைத்திடென முன்னாடன்னிற்
பன்னரிய திருத்தம்பி முத்துவீரப்
　　பார்த்திபன்பாற் றனித்தோத வதைக்கேட்டண்ணா
அன்னதற்கே பென்னதடை யுளதென்றோத
　　அகமகிழ்ந்தாங் குறைநங்கள் கந்தசாமி
இன்னதொரு பட்டமதை பேற்றென்சத்திக்
　　கியன்றளவு மாளிகையொன் றளிப்பனென்றான்.

முதல்நாள் மஹாசபையில் மேற்கூறிய பிரசங்கியார், மஹா
சங்கத்திற்கு ஓர் மாளிகை யளிக்கும்படி நமது ஸ்ரீமான கந்தசாமி
கண்டரவர்களைக் கேட்டுக் கொண்டாரன்றோ? அதைக்கேட்ட ஷை
கண்டரவர்கள் ஜேஷ்டராயிருப்பதேயன்றித் தமக்கு அம்மாளி
கையை வாங்கித் தரவேண்டுமென்கிற ஆவலிருந்தும், தமது சகோ
தரராகிய கனம், முத்துவீர கண்டரவர்கள் கனிட்டரானாலும் சம
பாகஸ்தராகையால் அவரிடம் யோசிக்காமல் தம்முடைய கருத்தை
அப்போதே வெளிப்படுத்தக் கூடாதவராய், அன்று இராத்திரி தனி
மையாக உனது கருத்தென்னவென்று அவரிடத்தில் யோசிக்க,
அவர், வாஞ்சையிலும் பிரியாநேச முதலிய வற்றிலும் இளையபெரு
மாளுக்கொப்பானவ ராகையால், அண்ணா! அதற்கென்னதடை
தங்களிஷ்டம்போலச் செய்யலாமென்று சொல்ல, அவ்வார்த்தை
யைக் கேட்டு மகிழ்ச்சியோடு மறுநாள் சபையில் வந்து அம்மாளி
கையை வாங்கித் தருவேமென்று சொல்லச்சித்தமாயிருந்தபோது
(தனது மடிநீரம்ப பாலையுற்று நின்றபசுவின் முன்னர் அதன்

கன்றை விட்டது போலவே) மஹாசங்கத்தார் தமக்குச் சம்பு குல சேகர ரென்னும் பட்டப்பெயரைக் கொடுத்தவுடன் மிக்கமகிழ்ச்சி கொண்டவராய் எமது சத்திக்கியன்றபடி (அதாவது எமது பெருமைக்குத் தக்கவாறு) மஹாசங்கத்திற்காக ஓர் மாளிகையை வாங்கித் தருகிறோமென்று அன்போடுரைத்தனர்.

### ஆறுசீராசிரிய விருத்தம்.

அன்னசொன் முடியுமுன்ன ரவையுளார் கரங்கள்கொட்டிப்
பன்னிய வொலிக ளெல்லாம் பயோதரத் தொலியே போலும்
அன்னவர் கண்ணிலாய வானந்த பாட்பமெல்லாம்
மின்னுறம் மேகந் தன்னில் வீழுநீர்த் துளிகள்போலும்

ஷை கண்டரவர்கள், எமது சத்திக் கேற்றபடி யொருமாளிகையைவாங்கித்தருகிறோமென்று சொன்ன சொல்லானது முடிவு பெறுதற்கு முன்பே அச்சபையார்யாவரும் கரகோஷமிட்டு மகிழ்ச்சியினால் பற்பல வார்த்தைகளைப் பேசிய பேரொலியானது, மேககர்ஜனையைப் போலவும், அச்சபையார் கண்களினின்றும் வீழ்ந்த ஆனந்தபாஷ்பங்களெல்லாம் அம்மேகத்தினின்றும் வீழுகின்ற நீர்த்துளிகளைப்போலவு மிருந்தன.

முழுமதி யதனைக்கண்ட மூன்றுநீர்ப் பெருக்க மென்கோ
பழுதுடைக் கண்ணரெல்லாம் பார்வையுற் றோங்கலென்கோ
தொழுதகு தேவரெல்லாஞ் சுதையுண்டங் கிருந்த தென்கோ
எழுதரு மவன்சொல் கேட்டாங் கிருஞ்சபை மகிழ்ந்த தோற்றம்

எழுதுதற்கரிய கீர்த்தி வாய்ந்த நமது சீமான் கந்தசாமி கண்டரவர்கள் மஹாசங்கத்திற்கு ஓர் மாளிகைவாங்கித்தருகிறோமென்று சொன்ன வார்த்தையைக் கேட்டுப் பேரானந்தங் கொண்டிருந்த மஹாசபையின் தோற்றமானது, பூரண சந்திரனைக்கண்டு பொங்குகின்ற கடலுக்கொப்பாயிருந்த தெனச் சொல்லலாமோ? கண்ணில்லாத பிறவிக் குருடர்களெல்லாம் தற்செயலாய்க் கண்களைப்பெற்று ஆனந்தசாகரத்தில் மூழ்கியிருப்பதற்கொப்பாயிருந்த தென்று சொல்லலாமோ? யாவராலுந் தொழத்தக்க தேவர்களெல்லாம் திருமாலினாலளிக்கப்பட்ட அமுதத்தையுண்டு அலகிலாக்களிப்புற்றிருந்ததைப் போன்றிருந்த தெனச் சொல்லலாமோ? மற்றெவ்விதமிருந்ததெனச் சொல்லலாமென்றபடி.



### கட்டளைக்கலித்துறை.

ஒண்டா மரைத்தேன் றடமேவி வாழ்வன வுண்டிலகாண்
வண்டேகி யுண்டிடும் நஞ்சங்கக் கோரகம் வாங்கித்தந்திங்
குண்டான பேர்புக ழுற்றன ரோதல மொன்றுதவிக்
கொண்டேய்ந்து ளான்புகழ் நங்கந்தசாமிக் குலவள்ளலே

ஒள்ளிய தாமரை மலரிலுள்ள தேனை அத்தாமரை மலருக்கிடமாயுள்ள தடாகத்திலேயே சதாவாழுகின்ற தவளை, மச்சமுதலிய செந்துக்கள் உண்ணமாட்டா. மற்றெவையுண்ணுமெனில், நெடுந்தூரத்திலுள்ள வண்டுகள் வந்து உண்டு போகும். அதைப்போலவே இம்மஹாசங்கத்திற்குப் பிரதான ஸ்தலமாகிய இச்சென்னை புரியிலேயே செல்வங் கல்வி பிரதாபமுதலிய வற்றால் மிக்கா ரனேகரிருந்தும், அவர்களிலொருவரேனும் நமது மஹாசங்கத்திற்கு ஓர் மாளிகையை வாங்கித்தந்து அதனாலாகிய பெருங்கீர்த்தியைப் பெற்றார்களில்லை. மற்று யார்பெற்றாரென்றால், நெடுந்தூரத்திலுள்ள நஞ்செயிடை யாறுகிராமத்தில் வசிக்கும் நங்குலவள்ளலாகிய ச. கந்தசாமிகண்டரவர்களே நமது மஹாசங்கத்திற்கு ஓர் மாளிகையை வாங்கித்தந்து என்றைக்கு மழியாத நற்கீர்த்தியைப் பெற்றாரென்க.

### ஆறுசீராசிரிய விருத்தம்.

இருநில மதனிலேனு மிமையவ ருலகிலேனுந்
தருவமென் றுரைத்த வெல்லாந் தந்ததாச் சாற்றலுண்டோ
வருமவை யதனி லன்னோன் மாளிகை தருவனென்ற
ஒருசொலைத் தந்ததாக வுரைத்தமேன் சாற்றுமென்னில்.

பெரிய இப்பூமண்டலத்திலேனும், சுவர்க்கலோகத்திலேனும், கொடுக்கிறோமென்று ஒருவர் சொன்ன பொருள்களையெல்லாங் கொடுத்து விட்டதாகவே சொல்லுவதுண்டோ? அங்ஙனமிருக்க நீவிர் அந்த மஹாசபையில் நமது சீமான் கந்தசாமி கண்டரவர்கள் நமது மஹாசங்கத்திற்கு வாங்கித் தருகிறோ மென்று சொன்ன மாளிகையை வாங்கித்தந்துவிட்டதாகவே சொன்னகாரணம் யாதெனில்:—

மைந்தனை மொருவன்றன்னை வருகவென் றுரைக்க வன்னோன்
வந்தன னெனச்சொல் வானால் வருதலங் குண்மையாலே.
அந்தமாச் சபையிற்சொன்ன தவன்றர லுண்மையாலே
தந்தன னெனச்சொன்னேமால் சாற்றுவ மினும்பல்நீதி

தந்தையானவன், சற்று தூரத்திலிருக்குந் தன்னுடைய மைந்தனை நோக்கி, மைந்தா! வருகவென்றபோது அவனங்கிருந்து கொண்டே தந்தாய்! வந்தேனென்கிறான். ஏனெனில், அவன் வருவது நிச்சயம் பற்றியன்றோ? அதைப்போலவே, நமது கந்தசாமி கண்டரவர்கள், மஹாசபையில் மஹாசங்கத்திற்காக வாங்கித்தருகிறோமென்று வாக்களித்த ஒரு மாளிகையை வாங்கித்தருவது நிச்சயமாதலால், இனி வாங்கித்தரப் போகிறதை வாங்கித் தந்துவிட்டதாகவே சொன்னோமென்க. அல்லது அவர் சொல்தவறாமல் கொடுப்பது நிச்சயமென்பது உமக்கு எப்படித் தெரியும்? நீராழங் கண்டாலும் நெஞ்சாழங்காண முடியுமா? என்பீராகில், இன்னமுஞ் சில நீதிவாக்கியங்களை யுரைப்பாம்.

சிலையின்மே லெழுத்தினோடு திருக்கையா லயனங்கிட்ட
தலையின்மே லெழுத்த தாகுஞ் சற்குணத் தவர்சொல்வாரி
அலையின்மே லெழுத்தினோடு மரிவையர்க் கழகுசெய்யும்
முலையின்மே லெழுத்ததாகு மூர்க்கர்வாய்ச் சொல்லிங்காமால்

சற்குண சீலர்களளித்த வாக்கானது சிலையின்மேற் பொறித்த எழுத்தையும், பிரமதேவரானவர் சேதனர்களின் தலையின் மேற் பொறித்த எழுத்தையு மொக்கும். (அதாவது என்றைக்கும் மாறாதென்றபடி) மூர்க்கர் வாய்ச் சொல்லானது, கடலின்கண் வீசுகின்ற அலையின்மே லெழுதப்பட்ட எழுத்தையும், பெண்களுக்கு அழகு செய்யும் முலைகளின்மீது சந்தனக்குழம்பினாலெழுதப்பட்ட தொய்யிலென்னு மெழுத்தையுமொக்கும். (அதாவது உடனே மறைந்து போகுமென்றபடி.)

ஆதலிற் கந்தசாமி யண்ணல்சற் குணத்தன் முன்னங்
கோதிய வார்த்தை மாறா துண்மைமற் றென்பன் சில்லோர்
ஏதுநா ளாயிற் றன்றோ னிருதய மாறலாமென்
றோதுவா ரவர்த மைய மொழிப்பமோர் கணத்தின்மாதோ

ஆகையால் நமது கந்தசாமி யண்ணல் சற்குண சீலராகையால் அன்று அம்மஹா சபையில் அளித்த வாக்குத்தவறமாட்டார். இது உண்மையே, ஆயினும் இவர்வாக்குத்தத்தஞ் செய்து சுமார் ஒருவருஷமாயினமையால் ஒருகால் அவர்மனம்வேறுபட்டிருக்கலா மல்லவா வென்றுரைப்பாருமுளர். ஆகையால் அத்தகையார்க்குள்ள



சந்தேகத்தையும் ஒருகணத்தி லொழிப்பேமென்க. எங்ஙனமெனில்:—

பித்தளை துலக்கும்போதே பிறங்கிப்பின் மாறிப்போமால்
எத்தனை யுகஞ்சென்றாலு மிணையில்பொன் மாறலுண்டோ?
புத்தியிற் கயவர்முன்னம் புகன்றசொல் மாறிப்போவர்
உத்தம குலத்திலுற்றோ ரொருசிறி தளவு மாறார்.

பித்தளையானது,துலக்கும்போது பிரகாசித்துப் பிறகு,சிறிது சிறிதாக அதன் ஒளிமாறிப் போகும். ஒப்பில்லாத பொன்னானது எத்தனை வருடமான போதிலும் மாறாது. இவற்றைப்போலவே அறிவில்லாத கீழ்மக்கள், முன்புசொன்னவார்த்தையை உடனே மாற்றிப் பேசுவர். உத்தமகுலத்தி லவதரித்த சற்குணசீலர்கள், எத்தனை வருடங்கடந்தபோதிலும் தாம் சொன்ன வார்த்தையைச் சிறிதும் மாற்றிப் பேசார்.

அன்னதை யுரைத்துப் பன்னா ளாயினுங் கந்தசாமி
பொன்னினற் குணத்து ளானல் புகன்றசொற் சிறிது மாறான்
அன்னவன் றனிலு நல்லா னனுசனற் றங்கம் போல்வான்
பொன்னினுந் தங்கமன்றே புரிந்திடு நலமிக்காமால்.

ஆகையால், நமது கந்தசாமி கண்டரவர்கள், உத்தமகுலத்தி லவதரித்த பொன்னைப்போன்ற குணத்தினராகையால், அவர் வாக்குத்தத்தஞ்செய்து நாள்பட்ட போதிலுஞ் சொல்தவறார். ஒருகால் அவர் திருத் தம்பியாரால் ஏதேனுந் தடை படுமோ வெனில், தமயனார் பொன்போன்றவரானால், இவர், (குந்தண வேலைக்குரிய) தங்கம் போன்றவராகையால், தமயனாராகிய அவரால் ஒருவாறுபோதுமான நன்மையே யேற்படுமாயினும், தம்பியாராகிய அவரால் அதினும் விசேஷமான நன்மையே யேற்படும். எப்படி யெனில், ஒரு இரத்தினகிரீட முடியவேண்டுமானால் பொன்னினாலே கூடியவரையிற் போதுமான விலைவாய்ந்த தும்முஸ் என்கிற உருவமே யேற்பட்டுப்,பின்பு(குந்தண வேலைக்குரிய) தங்கத்தினால் விலையுயர்ந்த நவ[illegible]களும்பதியப் பெற்றுத் தேவர்களும் சக்கரவர்த்திகளும் தரிக்[illegible]தக்க அவ்விரத்தின கிரீடம் ஏற்படுவது போலவேயாம். இதனால் தமயனாரால்சொற்ப பயன் ஏற்படக் கூடியதாயினும் தம்பியாரால் அதுவே விசேஷப்பயனாய் முடியுமெனப்படுவதால், அச்சந்தேகமும் நமக்கு வேண்டாமென்றபடி.

## கட்டளைக் கலித்துறை.

மதனாங்க னாங்கந்த சாமியங் கோதிய மாளிகையித்
த்தியீந்தி லானினுந் தாமதஞ் செய்வதென் சாற்றுமெனில்
பதினா றடியுடை வேங்கைபின் போய்நனி பாய்வதுபோல்
சதுராய நல்லிடத் தவ்வகம் வாங்கித் தருவதற்கே

அங்ஙனமிருக்க மதன ரூபராகிய அக்கந்தசாமி கண்டரவர்கள் அம்மஹாசபையில் வாக்களித்ததை உடனே நிறைவேற்றாமல் இது காறுந் தாமதஞ்செய்வதற்குக் காரண மென்ன வென்னில்:—பதினாறடிவேங்கை யென்கிற பெரும்புலியானது ஒன்றின்மீது பாயும்போது உடனே நேரேபாயாமல், பின்னுக்குப் போய்ப் பாய்கிறது வழக்கம். ஏனெனில் அது எவ்வளவு பின் வாங்குகிறதோ அவ்வளவும் தான் பாயக்கருதிய பொருளின்மீது அதிவேகமாய்த் தாக்குவதற்கேயாம். அதைப்போலவே நமது கண்டரவர்கள் இத்தனைநாள் தாமதிப்பதெல்லாம் அம்மாளிகையானது தகுந்த பகிரங்கமான விடத்திலிருப்பதாயும், சகல சௌகரியத்திற்குமுரியதாயும், பார்த்து வாங்கிக் கொடுப்பதற்காகவேயாம். அஃதெப்படி நமக்குத்தெரியுமெனில், அவர் ஷை மஹாசங்கத்திற்காகத் தகுதியான விடத்தில் தகுதியான கட்டடத்தோடு கூடிய நிலமாவது இனிக்கட்டடங்கட்டிக்கொள்ளக்கூடிய நிலமாவது பார்த்துச்சொல்லும்படி ஸ்ரீமான், கா. கோ. பலபத்திர நாயகர் முதலியவர்களுக்குக் கடித மூலமாகவும் தாம் இவ்விடம் வந்திருந்த காலங்களிலெல்லாம் நேராகவும் சொல்லி யிருப்பதினாலேயும் அதற்கிசைந்து ஷை பலபத்திர நாயகர் முதலியவர்கள் சிலவிடங்களிற் பார்த்த கட்டடங்களையும் கட்டுதற்குரிய நிலங்களையும் அவ்வவற்றின் விலைகளையுஞ் சொல்ல, அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குறைபாடு சொல்லிக்கொண்டு வந்ததாக மேற்கூறியவர்களாற் கேள்விப்பட்டுள்ளோ மென்க.

## ஆ[illegible]சீராசிரிய விருத்தம்.

கொடுத்திடமாட்டான் நோக்குங் கூத்தினைப்பழிப்பன் சற்றும்
நடித்திட மாட்டாள்முற்றம் நன்கிலை யெனச்சொல் வாளால்
அடுத்தவர்க் காசைகாட்டி யளிப்பனென் றுரைத்துப் பின்னும்
கெடுத்திடற் கெண்ணுகிற்போன் கிளப்பன்பல் சாக்குப்போக்கே



இன்னன போலு மின்னோ னியம்பலென் றெண்ணொ ணாதோ
என்னினெனற் காணியில்ல மிருநிதிக் களவிலானைக்
கன்னனி லீகையோற்குக் கழியற்ப மிஃதி தற்கோ
பன்னுவன் றகுதியற்ற பற்பல சாக்குப்போக்கே.

இங்ஙனஞ் சொல்லிக் கொண்டு வருவதனால்:—ஒன்றையுங் கொடுப்பதற்கிஷ்ட மில்லாதவன், தான் நோக்கியகூத்தை ஒன்றுமே நன்றாயில்லை யென்பான். நிர்த்தனஞ் செய்யத் தெரியாத [illegible]ரசியானவள், வாசல் கோண லென்பாள். இவற்றைப் போலவே [illegible]னையடுத்தவர்களுக்கு ஓர்பொருளைக்கொடுக்கிறேனென்று ஆசை காட்டிப் பிறகு அதைக் கெடுப்பதற்காக எண்ணங் கொண்டிரும்பவன், மேற்கூறியபடி பற்பல சாக்குப் போக்குகளைச் சொல்லுவான். இவற்றைப்போலவே நமது ச. கந்தசாமி கண்டரவர்கள் சொல்லிக் கொண்டுவந்த வார்த்தைகளு மிருக்கக் கூடாதோ வெனில்:—செந்நெற்பயிர் விளைகின்ற விலையுயர்ந்த காணிகளும் மாளிகைகளும் நிதி முதலியவைகளும் அளவில்லாமலுடைத்தான வராகி, ஈகையிற் கர்னனை யொத்தவராகிய இவருக்குத் தாம் தருகிறோமென்று சொன்ன மாளிகையை வாங்கித் தருவது தமக்கு ஒரு பெரிதோ? மிகவும் அற்பமேயாம். (அதாவது அதன் கிரயத் தொகை தமது இரண்டு மாதத்திய வரும்படிக்கிணையாகா தென்றபடி) இங்ஙன மிருக்க இதற்குத்தானா? தகாதவார்த்தையான பற்பல சாக்குப் போக்குகளைச் சொல்லுவார்? (அங்ஙனஞ் சொல்லார் என்றபடி)

## கலி விருத்தம்.

அந்த ரத்தினோ டவனி மாறினும்
இந்து தன்னொடுங் கிரவி மாறினும்
நந்தஞ் சங்கர பூபதி நல்கிய
கந்த சாமிமுன் கழறுசொன் மாறிலான்

என்று பற்பல ரியம்புகின் றாரிதே
நன்று வேறொன்று நண்ணலி ருள்ளத்தே
குன்றம் போலொரு மாளிகை கொஞ்சநாள்
சென்று காணுவீர் சித்தந்தண் ணென்னவே.

தேவலோகமும் பூலோகமும் தத்தமக்குரிய இயற்கைக்கு [illegible] சந்திரனுஞ்சூரியனும் தத்தம் நிலைமாறி உதையாஸ்த

மனமாயினும், நமது ஸ்ரீமான் நஞ்செயிடையாறு சங்கரகண்டரவர்கள் தவப்புதல்வராகிய கந்தசாமி கண்டரவர்கள், அந்த மஹாசபையில் நமது மஹாசங்கத்திற்காக ஓர்மாளிகை சன்மானிக்கிறோமென்றுரைத்த உறுதிவாக்கினின்றுந் தவறமாட்டாரென்று பலர் கூறுகின்றனர், ஆதலாலவ்வார்த்தையே சரியென்று யாமுறுதியா யெண்ணுகின்றனம். இன்னுங் கூடிய விரைவில் மலைபோலுமுயர்ந்ததாக நமது மஹாசங்க மாளிகையொன்று இச் சென்னைமாநகரின்கண் விளங்குவதை நீங்களனைவருங்கண்டு மனமகிழ்வீராக.

இன்னவா றிஃதிங் காக வியம்புமவ் விரண்டாநாளாம்
அன்னநா டன்னிற் பின்னு மாயவை விளம்பக் கேண்மின்
வன்னிதன் மரபோன்சேர வங்கிசத் துதித்ததாலே
மன்னியிப் புவியிலென்றும் வன்னியப் பெயர்கொண்டுள்ளீர்!

சோம சூரியாக்கினி யென்னும்முக்குலங்களில், மற்றையிரு குலங்களுக்குந் தாயகமாகிய அக்கினி குலமென்னும் வன்னிகுலத்தரசனாகிய சேரபரம்பரையிலுதித்ததனாலே, இப்பூமண்டலத்திலென்றைக்கும் நிலைபெற வன்னியரென்று வழங்கப்படுகிற நண்பர்காள்! இவ்விஷயம் இவ்வாறிருக்க இரண்டாவது நாள் மஹோற்சவதினமாகிய அத்தினத்தில் நடந்தேறிய விஷயங்களில் மேற்கூறியனபோக அவற்றின் பின்னடந்த விஷயங்களையுஞ் சிறிது சொல்லுகிறோங் கேட்பீர்களாக.

சேலமா நாட்டுளாய சிலதன வான்களொன்றி
மேலையாண் டுற்சவத்தை மேற்சொலு மிடத்திலெங்க
ளாலையா மியற்றுகிற்பே மிதற்குநீர் விடையே தம்மின்
கோலமாச் சபையீரென்று கூறுமோர் நிருபஞ்சொற்றார்.

ஐந்தாவது:—சேரலமென்பது மருவிச் சேலம் எ[illegible] வழங்கப்படுகிற சேலஞ் ஜில்லாவாசிகளாகிய சுமார் ஐம்[illegible] ன்மர், நமது மஹாசங்க இருபத்தாறுவது வருடமகோற்சவத்தை[illegible] சேலம் டவுனென்கிற அந்நாட்டுப் பிரதான நகரத்திலே எங்[illegible] ளால் சேகரிக்கப்பட்ட நிதியினால் நீங்கள் அப்போதைக்கப்போ[illegible] நியமிக்கிற நியமனத்தின்படி நாங்களே முன்னின்று நடத்திவை[illegible] கிறோமென்றும், இதற்காக உத்தரவு கொடுக்கவேண்டுமென்றும் மஹாசங்கத்தாருக்கு எழுதிக்கொண்ட பிரேரேபனைக் கடி[illegible] வாசிக்கப்பட்டது.



எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அன்னதயையாங் காறுமுகப் பெயரோ னோர்ந்தன்
றஃதேநன் றென்கருத்து மஃதே யென்றான்
இன்னதையே பின்னருமங் காமோதித்தா
னெழில்ராசரத்தினப்பே ருடையோ னாண்டு
மன்னியமாச் சபையினர்க ளங்கீகார
மாற்றமுங்கண் டுடன்தீர்ப்புச் செய்திட்டாரால்
வன்னியமாச் சங்கத்து நிருவாகத்தர்
மாச்சபையி னாதனொடுங் கலந்து மன்னோ.

ஆறாவது:—அந்நிருபத்தின் கருத்தைக் கேட்டுக்கொண்டிருந்த நமது, கா. ஆறுமுகநாயகரவர்கள், உடனே யெழுந்து, எம்முடைய கருத்தும் அதுவே ஆகையால், அவ்விடத்திலேயே நமது மஹாசங்க இருபத்தாறுவது வருஷ மஹோற்சவத்தை நடத்தவேண்டுமென்று அப்பிரேரேபனைக் கடிதத்தை யாமோதித்துப் பேசினார், மறுபடியும் அஃதே நன்றென்று நமது மயிலை இராசரத்தின நாயகரவர்களும் அதையே ஆமோதித்தனர். சபையார் அனைவரும் அங்கீகரித்தனர். உடனே நமது மஹாசங்க நிருவாக சபையார் ஷை சபாநாயகரோடு யோசித்து இருபத்தாறுவது வருஷமஹோற்சவத்தைச் சேலத்தில் நடத்தவேண்டுமென்று தீர்மானித்தனர்.

சிங்கத்தை யனையதிறல் கந்தசாமி
சீராம னாம்பெரிய பெருமாட் கொப்பான்
துங்கமிகுஞ் சில்வர்ஜூ பிலியென்றிந்நாள்
துரைத்தனத்து வார்த்தையினி லுரைக்கலான
எங்கெங்கும் புகழிருபத் தைந்தாமாண்டி
னிணையில்பே ருற்சவமீ தாகையாலே
இங்கிதனை மூன்றுநா ளியற்றலென்றா
னிதையேற்றுச் சபைகலைய லாயிற்றாமால்

அதன் பிறகு ஸ்ரீராம பிரானாகிய பெரிய பெருமாளுக்கு ஒப்பானவரும், சிங்கத்தைப்போன்ற பராக்கிரமத்தை யுடையவருமாகிய நமது கந்தசாமி கண்டரவர்களெழுந்து, இப்போது நம்மிந்து தேசத்தை யரசாளுகின்ற இராஜாங்கத்தாருடைய ஆங்கிலேய பாஷையில் சில்வர் ஜூபிலி யென்று சொல்லப்படுவதும் எங்கும் பிரசித்திபெற்று ஒப்பில்லாததுமாகிய நமது மஹாசங்க இருபத்தைந் [illegible] மஹோற்சவ மிதுவாகையால், இம்மஹோற்சவத்தை யிது [illegible]

காறும் இரண்டிரண்டு நாள்கொண்டாடியதுபோ லல்லாமல் மூன்று
நாள் கொண்டாட வேண்டுமென்றுரைத்தனர். இதைச்சபையார்யா
வரும் சந்தோஷத்தோடு ஒப்புக்கொண்டனர். உடனே சபைகலைந்
தது.

### ஆறுசீராசிரிய விருத்தம்.

பத்தெனும் வகையிலாறு பண்புறு முணவுதன்னை
அத்தினப் பகலினோடு மாங்குறு மிரவுமுண்டு
சுத்தநல் லடைக்காய் தன்னைச் சுகந்தத்தி னோடு கொண்டு
நித்திரை செய்திட்டாரால் நிசத்தம தாக வாங்கே.

அச்சபைக்கு வந்த யாவரும் ஆறு சுவையமைந்த பத்து
வகைக்கறிக ளோடுகூடிய உணவை அன்றைய பகலிலும்
இரவிலுமுண்டு வாசனைத்திரவியங்களோடு தாம்பூலங் கொண்டு
அந்நகர் நிசப்தமாய பின்னர் துயின்றனர்.

### எழுசீரா சிரியச் சந்த விருத்தம்.

இதுவே கடைநா ளுறுநா டகமென்
றியம்பிட வருமவர்போல்
கதிரா தவனுங் கடைநா ளவையே
கவின்மிகு மெனநினைந்தாங்
கதிவே கமொடேய்ந் துறல்போல் குணபா
லணுகினன் மறைமுகையோ
டிதமே வவையோ ரிருகண் முகையு
மெழில்கொள வலர்ந்தனகாண்.

இவ்வுலகத்திலுள்ள நகரங்கள் தோறும் பல நாடக சாலை
களுள்ளன வன்றோ? அந்நாடகசாலையினர், காசுபறிக்கு நிமித்தம்
என்னசெய்வார்களென்றால்:—தாங்கள் வெளியிடும் விளம்பரப்பத்
திரிகைகளில் இந்நாடக சபையார் இந்நகரத்தில் நடத்திவந்த
நாடகங்களில் இதுவே கடைசி நாடகம் ஆகையால், இச்சமயந்தவறி
னால் இனியெச்சமயம் வாய்க்குமோ அறிகிலோம். இன்றைக்கே
யாவரும் முந்துங்கள்! யாவரும் முந்துங்கள்! இன்றைய நடைநொடி
பாவனைகளும் ஆடைஆபரணாலங்காரங்களும் அதியற்புதமான திரை
களும் பார்க்கத் தக்கதே. கனவான்களே! தனவான்களே! நீங்கள்
தவறாமல் வாருங்கள்! வந்து பாருங்கள்! களிகூருங்கள்! என்று ஆர்
சிட்டு அப்பத்திரிகைகளைக் கைக்கொண்டு உன்னதமான [illegible]



லேறிக்கொண்டு வாத்திய கோஷத்தோடு வீதிகள் தோறுமுள்ள
வீடுகளிலெல்லாம்அப்பத்திரிகைகளைக்கொடுத்துக்கொண்டுபோவார்
கள். இப்பத்திரிகைகளைப்பார்த்த சில தான்தோன்றித் தம்பிரான்
மார்களும் சில அடங்காப்பிடாரி யம்மைமார்களும் தங்கள்கையிற்
பணமில்லாவிட்டாலும் கடனாகிலும் வாங்கிக் கொண்டு அதைத்
தவறாமற் போய்ப்பார்ப்பார்கள். இவர்களில் மேற்கூறிய ஆடவர்
களிற் சிலர், ஆஹா அந்தப்பாலாமணியின் எண்ணெய் தேய்க்கிற
பாகம் என்ன நேர்த்தி என்னசொகுசு என்றும், அந்த அரங்க
நாயகியினுடைய பாட்டும் அபிநயமும் நான் என்ன சொல்லுவேன்
பேஷ் பேஷ் என்றும், அவர்களை மெச்சி அவர்கள்மீது மையல்
கொண்டுதிரிவார்கள். மேற்கூறிய அம்மைமார்களிற் சிலர், அடி
யம்மா! அந்தமனமோகன அரங்கசாமி யினுடைய அழகும், அவன்
ஆட்டமும் அபிநயமும், நான் என்ன சொல்லப்போகிறேன். தேவடி
யாள்கூட கெட்டாள். அவள் இவன் காலெழுத்தும் பெறாள். என்று
அவனை மெச்சி மெச்சி மையல் கொண்டு திரிவார்கள். இங்ஙனந்திரி
வது முதலியன சற்குண சீலர்களுடைய ஒழுக்கமுமன்று நற்குல
மாதர்களுடைய ஒழுக்கமுமன்றென்க. இது நிற்க அவர்கள் மேற்
சொல்லியபடி இதுவே கடைசியாட்டமென்று அதைப்பார்க்கமிக்க
ஆவல்கொண்டு தவறாமற்போவது போலவே, சூரியனும் மூன்றா
நாளாகிய ஜூன்மீ 17உ மங்களவாரத்தில் நடக்குங் காட்சியே
கடைசிதினக் காட்சியென்று கேள்விப்பட்டு அதை நோக்க மிக்க
ஆவல்கொண்டுவருபவன் போலவே கீழ்த்திசையி லுதயமானான்.
உடனே தடாகங்களிலுள்ள தாமரை யரும்புகளும் இம்மஹாசபைக்
காக வந்திருந்தவர்களுடைய கண்ணரும்புகளும் மலர்ந்தன. அதா
வது அச்சூரியோதயத்தைக் கண்டு தடாகங்கள் தோறுமுள்ள
தாமரைகள் மலர்ந்து கொண்டிருக்க இவர்கள் யாவருங் கண்விழித்
தெழுந்தன ரென்றபடி.

### ஆறுசீராசிரிய விருத்தம்.

காலைக்காங் கடனைப் போக்கிக் கயத்துள்நீர் குடைந்துபூசை
வேலைகள் யாவுமுற்றி விரைந்துசிற் றுணவு முண்டார்
காலட்சே பங்களோடு கவிப்பிர சங்கங்கீதஞ்
சாலவாத் தியக்கச்சேரி தமதிட்டம் போலக்கண்டார்

உடனே அவர்கள், வயல்களிலேகிக் காலைக்கடனைக் கழித்துத்
தடாகங்களில் நீராடிச் சந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு

அச்சபாத்தோட்டத்தின்கண் வந்து அவ்விடத்தில் மிக்க வுபசாரத்தோடு பரிமாறிய சிற்றுணவுகளைப் பிரியத்தோடுண்டனர். அதன் பிறகு அவ்விடத்தில் ஒரு பக்கத்தில் ஹரிகதாகாலட்சேபமும், ஒரு பக்கத்தில் சிவகதாப் பிரசங்கமும் ஒரு பக்கத்தில் சங்கீதக்கச்சேரியும், ஒருபக்கத்தில் பாண்டுவாத்தியக் கச்சேரியும் ஒருபக்கத்தில் நாகசுரவாத்தியக்கச்சேரியும் நடந்தேறியன. இவைகளில் யார்யாருக்கு எது எது இஷ்டமோ அதையதையே அவரவர்கள் போய்ப்பார்த்துக் களித்துக் கொண்டிருந்தனர்.

சென்றனர் மேல் பாங்கூறுஞ் சிறப்பெலாந் தீர்ந்தபின்னர்
குன்றெனக் குவித்தசூரல் கொழுமைசால் கறிகளாதி
நன்றெனக் களிக்குமாறு நல்கவுண் டேகினரால்
ஒன்றிரண் டகவப்பாண்டி ஆற்றவ ரூர்க்குப் பல்லோர்.

மேற்கூறிய காலட்சேப முதலிய சிறப்புக்களெல்லாம் முடிவாயபின்னர் அவர்கள் அவ்விடத்தினின்றும் அன்னம் பரிமாறுஞ் சாலைக்குச் சென்று அங்கு வெள்ளி மலைபோலக் குவிந்துள்ள சாதத்தையும் சிறந்த பாகத்தோடு மிருதுவாகச் சமைத்துள்ள கறிவகை முதலியவைகளையும் மிகவும் போக்கியமாயிருக்கிறதென்று யாவரும் களிக்கும்படி அங்குள்ள உபசாரிணைக் கூட்டத்தார் பரிமாற, உண்டு தாம்பூலங்கொண்டு இளைப்பாறி, பிற்பகலான பின்னர் அவர்களிலனேகர் ஒற்றைக் குதிரை பூண்டனவும் இரட்டைக் குதிரை பூண்டனவுமாகிய வண்டிகளிலேறித் தங்கள் தங்களூர்களுக்குச் சென்றனர்.

இன்னமும் பலர்கள் நிற்க விரவியேழ் குதிரை பூண்ட
பொன்னிறத் தேரிலேறிப் போந்தனன் மேற்கிற் கங்குல்
மின்னிடைக் கணிகைக்கீத விழவொன் றங் கிருந்தும் நோக்கா
தன்னவர் முன்னர்ச்செல்லு மவசிய மென்னென் றுன்னில்

சூரியனும் சத்தாஸ்வ இரதமேறிச் சென்றான். இன்னமுஞ் சிலர் அடியிற் கூறப்பட்டகணிகைமாதின் சங்கீதக் கச்சேரியைப் பார்ப்பதற்கென அங்கிருக்க, மேற்கூறிய பலரும் அற்றைய பிற்பகலே போய்விட்ட அவசியம் யாதென்று ஆலோசிக்கில்.

பின்னர்யாங் கூறப்போமப் பெண்டனக் குன்றின் கீழே
துன்னிய வரம்பை யூரிற் றுதைபல்குற் பாம்பு நம்மை
யென்னசெய் திடுமோ வென்றங் கிவர்பயந் தேகல் போலும்
பொன்னகர்க் கிறைவனேனும் புயங்கத்திற கஞ்சவானால்



யாம் அடியிற் கூறப்போகிற கணிகையாதின் கொங்கைக் குன்றுகளின் அடிவாரத்திலேயுள்ள தொடைவாழைகளின் நாப்பண்மேவிய அல்குற்பாம்பு நம்மை யென்னசெய்யுமோவெனப் பயந்து போய்விட்டாற்போலிருந்தது. இப்பூமண்டலத்தைப் பூர்வம் அரசாண்ட அக்கினிகுலசத்திரிய பரம்பரையில்வந்த இவ்வீரர்கள், கேவலம் இந்தப் பாம்புக்காக அஞ்சிப்போய்விடலாமோ வென்னில், பொன்னகருக்கு இறைவனாகிய இந்திரனும் பாம்பு என்றால் பயப்படாமலிரான்; அங்ஙனமிருக்க இம் மண்ணுலகையாண்ட அரசபரம்பரையில் வந்து தற்காலம் இக்கலிகாலக் கொடுமையால் அவ்வரசாட்சியுமின்றி எம்மை யேழைமையிருக்கின்ற இவர்கள் அஞ்சக் கேட்கவேண்டுமோவென்றபடி.

அந்தியம் பொழுதங் காக வனைவருஞ் சென்று யாங்க
சந்தியா வந்த னத்தைத் தாஞ்செய்து ராவுண் டாகப்
பந்தியாய்த் தீப மெல்லாம் பற்பல வகையில் விட்டார்
வந்தன ரன்ன முண்டம் மாச்சபா மண்ட பத்தே

சில நேரங்கழிந்ததும் அந்திக் காலம் வந்துவிட்டபடியால் அவர்களனைவரும் மாலைச் சந்தியா வந்தனத்தை முடித்துக் கொண்டு வரும்போது இருள் சூழ்ந்து இராவாய்விட, உடனே அவ்விடங்களில் வரிசை வரிசையாகப் பலவிதமான தீபங்களேற்றிய பின் உபசாரிணைக் கூட்டத்தார் பரிமாறிய அன்னமுண்டு தாம்பூலங் கொண்டு, அச்சபாமண்டபத்தின்கண் வந்தனர்.

மையரா வல்குற் பூவின் பந்தினைக் கொங்கை சேர்கண்
செய்யவாய் குயிலின் சொல்லோர் சிற்றிடைக் கணிகை யாது
கையினிற் றம்புரிபட்டுக் கைகொண்டுற் றுடையைத் தட்டி
மையமா மிடத்தி லுற்று மதுரமாய்ப் பாட லுற்றாள்

அங்குப் பாம்பின் படத்தைப்போன்ற அல்குலையும், இரண்டு பூஞ்செண்டுகளைப் போன்ற கொங்கைகளையும், சேற்கெண்டை போன்ற கண்களையும், [illegible] குரல்போன்ற சொல்லையும், [illegible] மாதானவள், [illegible] தொடையின்மீது [illegible]

கையால் இடது தொடைமேல் தாளமிட்டு, வெகுமதுரமாகப்பாடிக் கொண்டிருந்தாள்.

தம்புரைத் தொடையின் மீது சாய்விலா திருத்தி மீட்டி
அம்புயக் கைமற் றொன்றா லரம்பையந் தொடைமேற் றட்டல்
உம்பரில் முடிசாய்க் காம லுள்ளவ ரேனுஞ் செய்ய
எம்பத மலர்மேல் வீழ்த லியற்கையென் றியம்பல் போலும்.

அக்கன்னிகை மாதானவள், அத்தம்புரைத் தன்னுடைய வலது தொடையின்மீது சாய்விலாமல்நிறுத்தி, வலதுகையால் மீட்டிக்கொண்டு, இடதுகையால் இடது தொடையின்மீது தாளந்தட்டுதலால்; அத்தம்புரானது, சாய்வின்றி நிற்குந்தோற்றமும், மற்றொரு கையால் தன்னுடைய காலைத் தட்டுந்தோற்றமும், எங்ஙனமிருந்த தென்னில், தேவர்களைப்போல வணங்காமுடி மன்னர்களாயிருப்பவர்களானாலும், எம்முடைய செந்தாமரைபோன்ற பாதங்களில் வீழ்வதே அவர்களுக் கியற்கையெனக் குறிப்பாலுரைத்தல் போலிருந்தது.

சிக்கிலாத் தெரிவை செய்ய திருமுகம் பழிக்கு மென்றோ
அக்கரும் பாம்பு போலு மல்குற்பாம் புண்ணு மென்றோ
நக்கனார் வேணி சென்று நலிந்தத்த விந்து தேறிச்
சக்கைவான் வந்தா னஞ்சித் தோகைபா லணுகி லானால்.

அந்தத் தாசியின் களங்கமில்லாத அழகிய முகமானது, களங்கமுள்ள தன்னைப் பழிக்குமென்றோ? அந்த இராகுவென்னும் பாம்புபோல அவளல்குற்பாம்பும் தன்னை விழுங்கப்போகிற தெனப் பயந்தோ? சந்திரனானவன், தேகம் மிகவுமெலிவெய்திச் சிவபெருமானுடைய ஜடாபாரத்தி லொளித்திருந்து சிலநாள் பொறுத்து அந்தப் பயந்தெளிந்து, சற்றேறக்குறைய முன்போலவே தேகம் பரித்து ஒருவாறு மனோதிடங்கொண்டு, அப்பெண்ணினிடம் வருவதற்காக வான்மீன்கள் மேவிய ஆகாயத்திற் றோன்றினன். அங்ஙனந் தோன்றியும் (அவளிடத்தில் கண்களாகிய அம்புகளோடு கூடிய புருவங்களாகிய வில்லுகளும், தனங்களாகிய பிரங்கி துண்டுகளுமிருப்பதை யாலோசித்து,) முன்னிலு மதிக பயமேற்பட, அவளருகில் வராமல் தூரமாகிய ஆகாயத்திலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்.



அதாவது அவள் சங்கீதக் கச்சேரிக்காக அவளிடத்தில் மேற்கூறிய யாவரும் வந்திருக்க, அச்சந்திரன் மாத்திரம், தூரமான அவ்வாகாயத்திலேயே சஞ்சரித்துக்கொண்டிருந்த தோற்றமானது, மேற்கூறியவாறிருந்த தென்றுணர்ந்து கொள்க.

### எழுசீராசிரியச் சந்தவிருத்தம்.

திருவம் ரூபகம் மட்டிய மேகத்
திரிபுடை யோடடை சம்பையென
வருசற் றாளமுந் தன்கையி லிட்டு
மகரிகை பைரவி தோடியொடு
ஒருமுப் பானிரண் டின்னிசைகொண் டாங்
குடன்சில வாத்தியக் கோடுடன்
சரிகா மாபத நீயென மந்தச்
சாளிக ளோடவள் பாடினளால்

அன்னவள் எவ்வாறு என்னென்ன இராக தாளங்களோடு பாடினளென்றால்:—அடைதாளம், ஏகதாளம், துருவதாளம், மட்டியதாளம், ஜம்பைதாளம், திரிபுடைதாளம், ரூபகதாளம், ஆகிய ஏழுவகைத் தாளவரிசைகளிட்டு, மகரிகை, பைரவி, தோடி முதலிய முப்பத்திரண்டு இராகங்களில், ச-ரி-க- ம-ப-த-நி என்கிற சப்த ஸ்வரங்களையும், மாறி மாறி யிட்டு, நவநவமான பல்லவி, பத முதலிய வற்றைத், தம்புர், பிடில்என்கிற வின்னரம், மிருதங்க முதலிய இசைக்கருவிகளோடும் பாடினள் என்பதே.

### ஆறுசீராசிரிய விருத்தம்.

இசைவலார் கீத மோர்ந்தாங் கிளவியுள் ளாகா வென்றார்
நசைபலா விலையென் றன்னுந் தசையுளா ரேற்ப வன்றோ
குசைமலி யிரண்டோ டென்னக் கொள்ளுகொள் ளாக மன்னி
நசையுளார் மெய்ந்நீ வாரம் நண்ணிடப் பொருந்தல் போலும்.

அவள், மேற்கூறியபடி, வெகு சாதுரியமாகப் பாடிக்கொண்டிருந்ததை யுணர்ந்து, அங்கு வீற்றிருந்த சில சங்கீத வித்வான்கள், ஹாஹா! பேஷ்! பேஷ்! எனச் சொல்லிக்கொண்டிருந்தனர். ஆடவர்களுடைய உள்ளத்தைக் கொள்ளைகொள்கின்ற அவளு

டைய தனக்குன்றுகளோடு, அவளுடைய சவுந்தரியத்தையுங்
கண்டு, இவை யெல்லாந், தசை முதலியவற்றின் தோற்றமேயன்றி
வேறல்ல வென்றுன்னுந் திடச்சித்தர்கள் தவிர, ஏனையோர்களு
டைய தேகங்களெல்லாம், அக்கினியின் பாங்கர் வைக்கப்பட்டுள்ள
பொருள்கள் போலவே வெப்பங்கொண்டிருந்தன. அதாவது அன்
னாள் மீதிற் காதல்கொண்டவர்களுடைய தேகங்கள் விரகாக்கினி
யினால் அவ்வாறு வெப்பங்கொண்டன வென்றுணர்க.

அத்தராத் திரியங் காக வவளிசை முடிந்த பின்னர்
நித்திரை புரிந்து காலை நியமங்க ளாகு முன்னர்
மித்திரன் வழிவி டற்கே மேவினன் போலும் வந்தான்
சித்திரக் கனலிற் றானுஞ் செனித்ததாற் றமர்க ளொன்றே

அர்த்த ராத்திரியானதும், அன்னவள் சங்கீதக் கச்சேரி
முடிவான பின்னர், யாவரும் நித்திரை புரிந்து வைகறையிலெழுந்
திருந்து, காலைக் கடனை முடிப்பதற்கு முன்னர், சூரியனும் அவர்
கள் தோன்றிய அக்கினியினின்றுந் தோன்றினவனானபடியால்,
அவர்கள் மீதுள்ள, சகோதர வாஞ்சையால், அவர்களை வழிவிட
வந்தவன்போல உதயமானான்.

சூரியனுக்குஞ் சந்திரனுக்கும், அக்கினியே தாயகமாகையால்,
அங்ஙனங் கூறலாயிற்று. அன்றியும் அவ்வக்கினியே சூரியனாகவும்
சந்திரனாகவு முதிக்கிறானென்றும், இம்முச்சுடரும் ஒரே அமிச
மென்றும், இதனால் மற்ற இருசுடர்கட்கும் வன்னியென்னும்
பெயர் உண்டென்றும், சாத்திரங் கூறுவதால் ஒரு விதத்தில் அச்
சூரியனும், அக்கினியே யாதல்பற்றி அவர்கள், ஒரு விதத்தில்
புத்திரர்களு மாவாராதலால் புத்திரவாஞ்சையினாலும், வழிவிட
வந்தானென்று முணர்ந்து கொள்க. அதற்கேற்ப அம்முச்சுடரி
னின்றுந் தோன்றிய முக்குலத்தரசருக்குள், வன்னிகுலத்தரசர்
கள், அவ்வன்னியினின்று முதித்த காரணத்தால், வன்னியரெனப்
படுவது போலவே, சூரிய குலத்தரசர்களுக்கும், சந்திர குலத்தர
சர்களுக்கும், நூல் வழக்கிலும், உலகவழக்கிலும், செப்பேடு சிலா
சாசன முதலிய வற்றிலும், வன்னியரென்கிற பட்டப்பெயர் வழங்
கப்படுவதோடு, ஒருவருக்கொருவர் கொள்வன கொடுப்பன, உண்
பன, ஸ்வீகார மெடுத்துக் கொள்ளுதல் முதலிய வற்றிலும் பேத



மின்றி நடந்தனர். ஆதலால், அவ்வன்னிய ரென்னும் பதமானது,
முக்குலத்திற்கும் பொதுவில் நின்று க்ஷத்திரியரென்னும் பொருள்
தரக்கூடியதாயிற்று. இதனால், வன்னியரெனப் படுவார் அனைவரை
யும் அக்கினி வமிசத்தவரேயென்று சொல்லுவதற்கிட மில்லை.
சிலர் அக்கினி வமிசத்தவராகவும், சிலர் சூரிய வமிசத்தவராகவும்,
சிலர் சந்திர வமிசத்தவராகவுமிருக்கலாம். இவற்றிற்கெல்லாம்
மேற்கோள்களுண்டோ வெனில்:—கம்பராமாயணம், வில்லி புத்தூ
ரார் பாரதம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், நாலா
யிரப் பிரபந்தம், நால்வர் தேவாரம், கல்லாடம், ஞானவாசிஷ்டம்,
ஏகாம்பர நாதர் இரட்டையர் உலா முதலிய பற்பல தமிழ் நூல்
களிலும், சில வடநூல்களிலும், திருவரங்கம் சிதம்பரம் திருக்
காஞ்சி முதலிய தேவஸ்தான முதலிய விடங்களிலுள்ள சிலாசா
சனங்களிலும், செப்பேடுகளிலும் எழுதப்பட்டுள்ள விஷயங்களை
யச்சிட்டுச் சென்னை மியூஜிய மென்கிற பொருட் காட்சிசாலையில்
வைக்கப்பட்டுள்ள புத்தகங்களிலும், சில ஆங்கிலேயப் பண்டிதர்
களால் எழுதப்பட்டுள்ள இந்துதேசச் சரித்திர முதலிய புத்தகங்
களிலும், ஏராளமாயிருக்கின்றன. இவற்றையெல்லாம், ஈண்டுக்
கூறில், விரியுமாதலால் அதற்கஞ்சியே நிறுத்தினோம். இவற்றை
ஒருங்கே காணவிரும்பில், சாதிசாரசங்கிரகம், வருணதருப்பணம்,
வன்னிகுலவிளக்கம் முதலிய நூல்களிலும், இனி யெம்மாலெழுதப்
போகிற, வன்னியர் ஆதிக்கப் பிரமாணத்திரட்டு என்னும் நூலி
லும், பரக்கக் காணலாம். ஆயினும், தற்காலமுள்ள வன்னியர்கள்,
மேற்கூறிய முக்குலத்தினர்களாகிய வன்னியர்களின் பரம்பரையார்
களே யென்பதற்கென்ன திருஷ்டாந்த மென்னில்:—பிரம்ம க்ஷத்
திரிய வைசிய சூத்திரரென்கிற நான்கு வருணத்தவர்களும்,
இவற்றிற்குப் புறம்பான ஏனைய வருணத்தவர்களும், தத்தமக்குரிய
வருணாசிரம தருமங்களில் மாறி நிற்றலும், உயர்ந்த நிலைமைக்
குரியவர்கள், தாழ்ந்த நிலைமையராதலும், தாழ்ந்த நிலைமைக்குரிய
வர்கள், உயர்ந்த நிலைமையராதலும், இக்கலிகாலத்தினியற்கை
யென்பதைச் சாத்திரங்களிற் கண்டுள்ளதற்கேற்ப, இக்காலத்தில்
அனந்தம் பெயர்கள் அங்ஙனமாதலைப் பிரத்தியக்ஷமாகக் கண்டுள்
ளோமன்றோ? ஆதலால் தொன்று தொட்டுத் தங்குலத்திற்கே
யுரிமைத் தொழிலாகிய, அரசாட்சித் தொழில் புரிந்து வந்த, சேர
சோழ பாண்டிய பல்லவ சளுக்கியரெனக் குடிப்பெயர் வாய்ந்
துள்ளவர்களாகிய, சோமசூரியாக்கினி யென்னும் முக்குலத்தரசர்

களையும் தங்குலத்திற் குரிமையல்லாத, அரசாட்சித் தொழிலை
நவீனமாய்க் கைக்கொண்ட மிலேச்சராதி வேற்றரசர்கள் படை
யெடுத்து எதிர்த்தமையால், (அதிபராக்கிரமசாலியும், ஐவருக்கும்
நூற்றுவருக்கும் பாட்டனாரும், நூற்றுவருக்குச் சேனாதிபதியு
மாகிய, பீஷ்மாசாரியரும், விதிவசத்தால் கேவலம் சிகண்டியினி
டம்தோற்றுப்போனதுபோலவே) அம்முக்குலத்தரசர்களும் அவர்
களால் தோல்வியுற்று, செக்குதேய்ந்து சிறுவுரலாவது போலும்,
ஏற்றக்கோல் தேய்ந்து ஏருகாலாவது போலும், தூண் தேய்ந்து,
துலைக்கோலாவதுபோலும், சிற்றரசர்களாகவும், ஜமீன்தாரர்க
ளென்கிற பல கிராமங்களுக்குத் தலைவர்களாகவும், மாறினர். இவர்
களிடம், மந்திரி பிரதானிகளாகவும், சேனாதிபதிகளாகவும், சுக
ஜீவனஸ்தர்களாகவுமிருந்த இவர்கள்சுற்றத்தவர்களெல்லாம்,
பாணைத்தடிமாறிப் பட்டாப் பிடியாயாவது போலும், பட்டாப்பிடி
மாறி உளிப்பிடியாவது போலும், சுரோத்திரியதாரர்களாகவும்,
மிராசுதாரர்களாகவும், பெரும்பாலும் குடியாளர்களாகவும், மாறி
னர். அங்ஙனமாகியவர்களில் மேற்கூறியபடி சிற்றரசர்களாகவும்
கிராமாதிபதிகளாகவும் தற்காலமுள்ள சிலரைக் கூறுவாம். 1 சிவ
கிரி, 2 அரியலூர், 3 உடையார்பாளையம், 4 பித்தபுரம், 5 நல்ல
நாயகபுரம் 6 கடலங்குடி, 7 பளூர் 8 ஊற்றங்கால், 9 திருக்கணங்
கூர், 10 ஏழாயிரம்பண்ணை முதலிய நகரங்களில் சிற்றரசர்
களாகவும், கிராமாதிபதிகளாகவு முள்ளவர்களேயாவர். இவர்
களில், சிவ கிரியார், பாண்டியவமிசத்தவர். அரியலூரார், சலுக்
கிய வமிசத்தவரென்பர். உடையார் பாளையத்தார், கச்சிப் பல்லவ
ராய வமிசத்தவர். பித்தபுரத்தார், இரண்ணியவர்மச்சோழ வமி
சத்தவர். மேற்கூறிய மற்றவூராரும் இவர்களுடைய சம்பந்தி
களும் தாய்வர்க்கத்தாருமே யாகையால், அவ்வமிசத்தவரே
யாவர். இவர்களுக்கு முறையே, 1 வரகுணராம பாண்டிய வன்னி
யனார், 2 விஜய ஒப்பில்லாத மழவராயர், 3 கச்சிக்கல்யாண கால
தோழப்பல்லவர், 4 சூரப்ப சோழனார், 5 இராவுத்தமிண்ட நயினார்
6 வணங்காமுடிச் சோழனார். 7 பாவாசாவீரசேகரகச்சிராயர்,
8 பரமேஸ்வரநயினார் 9 கச்சிராயதுரை, 10 சோழனார், என்கிற,
பட்டப் பெயர்களிருக்கின்றன. ஆகிலும் இவர்களிற் சிலருக்கு
அதிகச் செலவுமுதலிய காரணங்களால் சுமார் ஐம்பது வருட
காலமாகத், தத்தமக்குரியஜமீன்என்கிற கிராமாதிபத்தியமுமின்றிப்
பெருங்காயமிருந்த குடுக்கையைப்போலவுமிருக்கின்றனர்.இவர்களு



டைய மூதாதைகளுக்குத், திருவரங்கம், திருவானைக்காவல், சிதம்
பரம், திருக்காஞ்சி முதலிய தேவஸ்தானங்களில், பரம்பரையாக
நடந்துகொண்டு வந்த, ஐதீக மரியாதை முதலியன, தற்காலமிருக்
கிற மேற்கூறியவர்களுக்கு இக்காலத்திலும் நடந்துகொண்டு வரு
கின்றன. அவைகளை முற்றுங் கூறில் விரியுமாதலால் சிலவற்றை
மாத்திரங் கூறுவாம். ஆதியில் தில்லைவனமாயிருந்த சிதம்பர
தேவஸ்தானமானது, பதஞ்சலிமுனிவருடைய கட்டளையினால் இர
ணியவர்மச்சோழனால் கட்டப்பட்டதாகையால், அப்பதஞ்சலி
முனிவரால், அந்த இரணியவர்மச்சோழனுக்கு, அந்தத் தேவஸ்
தான பஞ்சாக்ஷரப் படியில் பட்டாபிஷேகமும், அங்குள்ள ஆயிரக்
கால் மண்டபமென்கிற இராஜ சபையில் முடியுஞ், சூட்டப்பட்
டது. அதுபோலவே அவனுக்குப்பின்னர்வந்த அவன்சந்ததியாருக்
கும் நடந்து, சுமார் ஏழெட்டு வருடங்கட்கு முன்னர், அந்தப் பரம்
பரையில் வந்தவரும் தற்காலமிருப்பவருமாகிய, சாமிதுரை சூரப்
பசோழனாருக்கும், அந்தப் பஞ்சாக்ஷரப் படியில் பட்டாபிஷேகமும்
ஆயிரக்கால் மண்டபத்தில் முடியுஞ், சூட்டப்பட்ட பின் அத்தினப்
பகல் அவ்விடத்தினின்றும் சகல விருதுகளோடும் வாத்திய
கோஷங்களோடும் தண்டிகையில் நகர்வலஞ் செய்யப்பட்டு, அன்று
இராத்திரியும் புஷ்பக விமானத்தில் அத்தேவஸ்தான மாடவீதி
யில் வெகு ஆடம்பரத்துடன் கோலம் வந்ததைப் பல்லாயிரஞ்
சனங்களோடு யாமுங் கண்டுள்ளோமென்க. மேற்கூறிய கச்சிப்
பல்லவராய சந்ததியாராகிய உடையார்பாளையத்தார், மேற்கூறிய
வேற்றரசர் படையெழுச்சியால் அக்காஞ்சியினின்றும் அவ்வுடை
யார்பாளையத்தில் குடியேறினவர் ஆதலால் அவருடைய வுற்சவம்
விஷ்ணுகாஞ்சியில் இப்போதும் வருடந்தோறும் நடந்து வருவ
தோடு அத்தேவஸ்தானத்தில் அவர்களுக்குச் சில மரியாதை
களும் நடக்கின்றன. அன்றியும் மேற்படி காஞ்சி வரதராஜப் பெரு
மாள் முதலிய சுவாமிகள் அவ்வுடையார்பாளையத்திற்கு வருடந்
தோறும் போய்வருகிற வழக்கம் சில ஆண்டுகளுக்கு முன்னர்
வரையிலிருந்தது. அது உண்மையென்பதை அச்சுவாமிகள் அவ்
வுடையார்பாளையத்திற்கு வருங்காலங்களில் மண்டபடியாவதற்
காக அம்மார்க்கங்களில் அவ்வுடையார் பாளையத்தாரால் கட்டப்பட்
டுள்ள மண்டபங்களை அம்மார்க்கங்களிற் காணலாம். மற்றவர்
களுக்கும் இவைபோன்ற ஐதீகமரியாதை முதலியவை பற்பல
தேவஸ்தான முதலிய விடங்களில் நடக்கின்றன. இது நிற்க, மேற்

கூறிய மன்னர்களுடைய பட்டப்பெயர்களும், கோத்திரஞ் சூத்திர
முதலியவைகளும், ஏனையவன்னியர்களுக்கு மிருப்பதேயன்றி,
அவ்வன்னியரிற் சிலர்களோடு அந்தஸ்தை நோக்கி கொள்
வன கொடுப்பனவாகிய சம்பந்தமும், பந்திபோஜன முதலியவை
களும், அவர்கள் நடத்திக்கொண்டு வருகின்றனர். அன்றியும், மயி
லாப்பூர் என்கிற சென்னைத் திருமயிலையானது பல்லவ அரசனாகிய
நந்திபோத்தவர்மன் சந்ததியில் வந்த ஸ்கந்தவர்மா வென்கிற கந்
தப்பராஜாவின் ஆளுகையிலிருந்தபோது அங்குள்ள கபாலீஸ்வரர்
கோவிலில் கோபுரவாயில் முதலிய திருப்பணிகள் அவரால் செய்
யப்பட்டு, அவரால் அக்கோவில் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அக்
காலத்தில் அவர் தோமாஸ் என்னும் ஒரு கிறிஸ்தவரால் மயக்கப்
பட்டுக் கிறிஸ்து மதத்தை யனுஷ்டிக்க அதற்குடன்பட்டு, இவர்
பந்துக்களிற் சிலரும் அம்மதத்தையே யனுஷ்டித்தார்கள். சிலர்
சுயமதஸ்தராகவே யிருந்தனர். அங்ஙன மிருக்கும்போது மேற்
படி கந்தப்பராஜரும் இறந்த பிறகு அத்தேவஸ்தானம், சுயமதஸ்
தர்களாயிருந்த அவ்வன்னியர் பார்வையிலிருந்து, பிறகு அவருக்
குள் நாட்டாண்மைதாரர் பார்வையிலிருந்து இவருடைய மதிமயக்
கால் அன்னியர் வசமாய் விடவே வழக்கமாக, அந்த வன்னியர்கள்
அக்கோவில் பிரம்மோற்சவ காலங்களில் அக்கோவில் கோபுரவாயி
லின் உட்புற ஒருபக்கமேடையில் தீபாராதனைக்குரிய சாமான்களை
வைத்துக்கொண்டு சுவாமி புறப்பட்டு வரும்போது அவ்விடத்தி
னின்றும் முதல் தீபாராதனை முதலிய சிறப்புக்கள் செய்வதைத்
தடுக்கவேண்டு மென்று எண்ணங்கொண்டு அம்மேடையில் சுவ
ரெழுப்பி அதை அடைத்துவிட்டனர். அதனால், விரோதம்
நேரிட்டு அவ்வன்னியர் அந்த அன்னியர்மீது ஐகோர்ட்டு என்கிற
நியாயஸ்தானத்தில் வியாஜ்ஜிய மெடுத்து அக்கோபுரவாயில் தங்
களுக்குரிமை யென்றும், அத்தீபாராதனை அவ்விடத்தினின்றுஞ்
செய்வது நெடுநாளைய வழக்கமென்றும், நிரூபித்துத் தங்கள் பக்
கம் ஜெயம்பெற்று, முன்போல நடத்திவருகின்றனர். அன்றியும்
திருவண்ணாமலையை யரசாண்ட வன்னிகுலத்தரசனாகிய வல்லாள
மஹாராஜனுக்கு அவ்வண்ணாமலை நாதர் பிள்ளையாய்ப் பிறந்து அவ
னுக்கு அந்நாளில் சரமகைங்கரியஞ் செய்த ஐதிகவுற்சவத்தை
வருடந்தோறும் அங்குள்ள வன்னியர்களே செய்துகொண்டு வருவ
தோடு அவ்வுற்சவதினத்தில் சுவாமி புறப்பட்டுப்போய் அந்த ஐதி
கம்நடத்துகிறவிடத்தில் அவ்வன்னியர்கள் க்ஷவரஞ்செய்துகொண்டு



புதுவேஷ்டி முதலியவைகள் நடத்திக்கொள்ளுகிற வழக்கமு
முண்டெனக் கேள்விப்படுகிறோம். அன்றியும், காஞ்சி ஏகாம்பர
நாதர் ஆலயத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபமும், அதைச்
சார்ந்த பள்ளிகோபுரமென்று வழங்குகிற பல்லவ கோபுரமும்,
துலாபார மண்டப முதலியனவும், அக்காலத்தில் அரசாண்ட சம்பு
குலப் பல்லவனால் கட்டப்பட்டன. அவைகள் நாளைக்கும் அக்
காஞ்சி முதலிய விடங்களிலுள்ள வன்னியர்கள் பார்வையிலிருப்ப
தேயன்றி. அவர்களாலேயே பழுதுபார்க்கப்பட்டுவருகின்றன.
அன்றியும் பன்னிருவர்களிலொருவராகிய குலசேகராழ்வார்,
"சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே" என்கிறபடியே,
சேரன்குடியிலவதரித்த வன்னிகுலத்தரசராகையால், அவருடைய
திருநக்ஷத்திரவுற்சவங்களை இத்தமிழ் நாட்டு விஷ்ணு ஆலயங்களிற்
பெரும்பாலும், வன்னியர்களே செய்துகொண்டு வருவதோடு அக்
குலசேகர னென்கிற பெயரானது பெரும்பாலும் வன்னியர்
களுக்கே இட்டு வழங்கப்படுகின்றது. அன்றியும் அவ்வன்னியர்
அரசாட்சி புரிந்திருந்த காலத்தில், கட்டியங்கூறுதல் முதலிய
தொழில்கள் புரிந்துவந்த நோக்கர், அல்லது நவுக்கர் என்கிற ஒருவித
ஜாதியாருடைய சந்ததியார், அவ்வரசபரம்பரையாராகிய வன்னியர்
களின் சுபாசுபகாலங்களிலும், மற்றக்காலங்களிலும், நீண்ட அங்கி
யும், வண்டிப்பாகையும், கையிற்பாஹு பந்தும், காலில்வீரகண்டை
யும் பூண்டு சிறு நகார் அடித்துக்கொண்டும், வெற்றிச் சின்னம்
ஊதிக்கொண்டும், வன்னியர்களுடைய விருதுக்கொடிகளை யேந்திக்
கொண்டும், அவ்வன்னியர்களுடைய பூர்வ பிரதாபங்களைக் கூறி
அவர்களிடம் நாளைக்கும் ஜீவித்து வருகின்றனர். அன்றியும் அவ்
வன்னியருக்குள் ஆங்காங்குள்ள நாட்டாண்மைதாரர்கள், சுபாசுப
காலங்களில் தங்களுக்குரிய புலிக்கொடி, விற்கொடி, மச்சக்கொடி,
அக்கினிக்கொடி, பஞ்சவர்ணக்கொடி முதலிய விருதுக்கொடி
களும், ஆலவட்டம், தாலவட்டம், மகுடதோரணம், பூச்சக்கரக்
குடை, வில்மணி, இரட்டைச்சங்கு, இரட்டையருகுதீவர்த்தி,
டால் என்கிற இரட்டைப் பரிசை முதலிய விருதுகளோடும்,
வாத்திய கோஷங்களோடும், வீதிவலம் வருகின்றனர். அன்றி
யும், அரசனென்னும் பொருள் தரக்கூடிய, நாயகர், படையாட்சி,
உடையார், கண்டர், கவுண்டர், சாமந்தர், அஞ்சாதசிங்கம், வாள
ண்டையார், இராயர், பூபதி, வீரமிண்டர், துரை, பூபதி, இராஜாளி,

தந்திரியார், காளிங்கராயர், பல்லவராயர், சம்புவராயர், சோழனார், சேரனார், பாண்டியனார் முதலிய பட்டப் பெயர்களெல்லாம் அவர்களுக்கு ஆங்காங்கு வழங்குகின்றன. ஆகையால், மேற்கூறிய திருஷ்டாந்தங்களாகிய பிரத்தியக்ஷானுபவப் பிரமாணங்களாலேயே, முற்கூறியபடி ஒரே அமிசங்களாகிய முச்சுடரினின்றுந் தோன்றிய முக்குலத்தரசர்களாகிய சேரசோழ பாண்டிய பல்லவ செலுக்கிய அரசர்களுடைய பரம்பரையாரே, தற்காலமுள்ள வன்னியர்களென, வெள்ளிடைக் குன்றுபோல விளங்கும். இதனோடு மேற்காட்டிய தென்னூல் வடநூல்களின் மேற்கோள்களாகிய சாத்திரப்பிரமாணங்களையும், ஆங்கிலேயப் பண்டிதர்களா லெழுதப்பெற்ற தேசசரித்திர முதலியவற்றில், அன்னவரால் சிலவற்றை யூகித்துக்காட்டப்பட்ட மேற்கோள்களாகிய அனுமானப் பிரமாணங்களையும், செப்பேடு சிலாசாசனங்களிலுள்ள மேற்கோள்களாகிய உறுதிப் பிரமாணங்களையும் ஒருங்கே நோக்கின், அக்குன்றின் மேலேய்ந்த கோபுரமென நன்குவிளங்கு மென்றுணர்க. இது நிற்க.

### ஆறுசீராசிரிய விருத்தம்.

சிற்றுணா வருந்திப் பின்னர் செய்கறி மூரலுண்டாங்
கற்றைநாட் பகலிற் சென்று ரவரவர் தேயங்கட்கே
நற்றமிழ் முனியன் னானும் நண்ணுஞ்சிற் சிலர்தா நிற்க
மற்றையோர் கந்தசாமி வள்ளல்பால் விடைகொண் டன்றே

(அனந்தரம் அவ்வன்னியர்கள், புனலில் மூழ்கிச் சந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு வந்து) காலைச் சிற்றுண்டிகளையருந்தி மத்தியான காலமானபின் பற்பல கறிவகைகளோடு கூடிய வுணவுண்டு, தாம்பூலங்கொண்டனர். உடனே அவர்களில் அந்தியூர் குருசாமிகளும், ஸ்ரீமாந், கா, கோ. பலபத்திரநாயகர்முதலியசிலருமாத்திரம் இன்னுமிரண்டு மூன்று தினங்கழித்துப் புறப்படுவதற்காக அங்ஙனமிருக்க, மற்ற அம்மஹாசபாநாயகர், மஹாசங்கசபாநாயகர் முதலிய யாவரும், தங்கள் தங்கள் ஊர்களுக்குப்போவதற்காக நமது குல வள்ளலாகிய கந்தசாமி கண்டரவர்களிடம் விடைபெற்றுப் போந்தனர்.



### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

வன்னியர்க ளிப்புவியிற் செழித்து வாழ்க
வன்னியமாச் சங்கமது தழைத்து வாழ்க
இன்னமாச் சங்கமத னிருவா கத்தர்
என்னைக்கு மதன்செயல்நன் கியற்றி வாழ்க
பன்னருமிச் சங்கமது பயந்த வாய
பற்பலநாட் டுபசங்கம் பல்கி வாழ்க
இன்னியசெந் தமிழ்வாழ்க வுலகம் வாழ்க
இத்தரணிக் கிறைவாழ்க வறங்கள் வாழ்க.

அந்தியூ ரெனுநகரி லனந்த நாளாய்
அவிர்பிரம்ம வன்னியமா மடந்தான் வாழ்க
விந்தைமிகு குழந்தையா னந்த னென்னும்
மெய்க்குருவவ் வாதீனம் விளங்கி வாழ்க
சந்ததியா யதற்குறுநம் பாஸ்கரப்பேர்
சற்குருவுஞ் சந்ததியோ டினிது வாழ்க
அந்தமிலாச் சிறப்பினொடு பூர்வம் போல
அந்தியூர் மேவியிவன் வாழ்க வாழ்க.

நஞ்செயிடை யாறெனுநன் னகரம் வாழ்க
நண்ணியதி லுறைகந்த சாமி வாழ்க
தஞ்சமென வந்தவரை யளிக்கு மன்னோன்
தம்பியெழில் துரைமுத்து வீரன் வாழ்க
விஞ்சுபுக ழிவன்குடும்பம் விளங்கி வாழ்க
மிகப்பெருகி யிவன்சம்பத் தனைத்தும் வாழ்க
நஞ்சங்கக் கிவரளிக்கு மில்லம் வாழ்க
நற்கீர்த்தி யோடிவர்கள் வாழ்க வாழ்க

### ஆறுசீராசிரிய விருத்தம்.

பூபாலர் குலத்திற் றோன்றிப் புகழ்மிகுஞ் சீமா னான
கோபால மகிபன் சேட்ட குமரனு மிவன்றன் பன்னி
மாபால ரன்னை தம்பி மாரொடுஞ் சம்பத் தோங்கப்
பாபாலர் சீர்த்தி பாடப் பல்லாண்டு வாழி வாழி.

### கலிவிருத்தம்.

வன்னியர் யாவர்க்கும் மன்னுக மங்களம்
அன்னவர் மாச்சங்கத் தாகுக மங்களம்
இன்னதன் கீழ்ச்சங்கம் யாவைக்கு மங்களம்
மன்னுக மன்னுக மங்களம் மங்களம்.

வன்னியமகாசங்க வைபவசூடாமணி முற்றிற்று.

ஸ்ரீ

சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மஹாசங்க

# நிருவாக சபையார்:—

அக்கிராசனாதிபதி,

ம—ள—ள—ஸ்ரீ அ. சொக்கலிங்க நாயகர் அவர்கள்.

சிரேஷ்ட உபாக்கிராசனாதிபதி,

„ பாரத்துவாஜ முதலியார் அவர்கள்.

உபாக்கிராசனாதிபதி,

„ ராவ்சாஹிப். திரு. இலட்சுமண நாயகர் அவர்கள்.

காரியதரிசிகள்,

„ T. வரதப்ப நாயகர் அவர்கள் B. A. B. L.

*Local Secretary.*

„ பல்லவகுலசேகர, கா. கோ. பலபத்திர நாயகரவர்கள்.

*Moffussil Secretary.*

„ ச. இரத்தினசபாபதி நாயகர் அவர்கள்.

*Financial Secretary.*

பொக்கிஷதார், ஷை கா. கோ. பலபத்திர நாயகரவர்கள்.

திரிச்சிராப்பள்ளி ஜில்லா, நாமக்கல் தாலுக்கா,

நஞ்செயிடையாறு கிராமத்தில் நடந்தேறிய.

ஷை மஹாசங்க 25–வது வருஷ மஹோற்சவ

## வரவேற்புச் சபையார்:—

அக்கிராசனாதிபதி,

ம-ா-ா-ஸ்ரீ மிட்டாதாரர்—தாயப்பகண்டரவர்கள்.

உபாக்கிராசனாதிபதி,

ஆ. கு. சிதம்பரகண்டரவர்கள்.

காரியதரிசிகள்,

த. மு. து. பரமசிவ கண்டரவர்கள்.

M. பழனியப்ப கண்டரவர்கள்.

வி. கிருஷ்ண கண்டரவர்கள்.

பொக்கிஷதாரர், ஆ. சி. நடேச கண்டரவர்கள்.

அங்கத்தினர்கள்,

| | | |
|---|---|---|
| ம-ா-ா-ஸ்ரீ | தர்மகர்த்தா, சிதம்பர மாகாளி கண்டர் | அவர்கள். |
| ,, | கு. பெரியசாமி கண்டர். | ,, |
| ,, | பூ. தாண்டவ கண்டர். | ,, |
| ,, | தி. காத்தா கண்டர். | ,, |
| ,, | க. செ. செல்லாண்டி கண்டர். | ,, |
| ,, | M. குழந்தைவேல் கண்டர். | ,, |
| ,, | கோ. மா. முத்துசாமி கண்டர். | ,, |
| ,, | க. மு. ஆண்டியண்ண கண்டர். | ,, |
| ,, | தி. ராமசாமி கண்டர். | ,, |
| ,, | N. சின்ன கண்டர். | ,, |
| ,, | ந. சிதம்பர கண்டர். | ,, |
| ,, | கா. சி. சங்கர கண்டர் | ,, |
| ,, | ரா. சந்த கண்டர் | ,, |
| ,, | ச. காங்கய கண்டர் | ,, |



அங்கத்தினர்கள்,

| | | |
|---|---|---|
| ம-ா-ா ஸ்ரீ | பு. முனிசாமி நாயகர் | அவர்கள். |
| ,, | செ. அரங்கசாமி நாயகர் | ,, |
| ,, | சி. இராமலிங்க நாயகர் | ,, |
| ,, | ஆ. பொன்னுசாமி நாயகர் | ,, |
| ,, | கா. ஆறுமுகநாயகர் | ,, |
| ,, | கோ. பரசுராம நாயகர் | ,, |
| ,, | சு. மு. கன்னியப்ப நாயகர் | ,, |
| ,, | கோ. கிருஷ்ணசாமி நாயகர் | ,, |
| ,, | திரு. சின்னைய நாயகர் | ,, |
| ,, | ஜா. பசுபதி நாயகர் | ,, |
| ,, | M. பாலசுந்தர நாயகர் | ,, |
| ,, | சி. ஆறுமுக நாயகர் | ,, |
| ,, | ம. குப்புசாமி நாயகர் | ,, |
| ,, | தி. கோபால நாயகர் | ,, |
| ,, | சி. முருகேச நாயகர் | ,, |
| ,, | அ. அப்பாராவு நாயகர் | ,, |
| ,, | தி. மாணிக்க நாயகர் | ,, |
| ,, | செ. இராஜு நாயகர் | ,, |
| ,, | ம. இராஜரத்தின நாயகர் | ,, |
| ,, | காவேரிப்பாக்கம், பூபதி. ஜெகந்நாத ராஜா | ,, |
| ,, | G. நடராஜ நாயகர் B. A. | ,, |
| ,, | கள்ளிப்பட்டு கிருஷ்ணசாமி நாயகர் | ,, |
| ,, | புதுவை, வெ. பெரியசாமி நாயகர் | ,, |
| ,, | நஞ்செயிடையாறு. ச. கந்தசாமி கண்டர் | ,, |

| | | |
|---|---|---|
| ம-ா-ா-ஸ்ரீ | | அவர்கள். |
| ,, | ம. சின்னபிள்ளை கண்டர். | ,, |
| ,, | மா. இ. ஆனந்த கண்டர். | ,, |
| ,, | பெ. இருளாண்டி கண்டர். | ,, |
| ,, | மே. க. கூரைக்கருப்ப கண்டர். | ,, |
| ,, | அ. தேவராய கண்டர். | ,, |
| ,, | அ. மாரிமுத்து கண்டர். | ,, |
| ,, | சே. ஆனந்த கண்டர். | ,, |
| ,, | செ. முத்துசாமி கண்டர். | ,, |
| ,, | மு. வையாபுரி கண்டர். | ,, |
| ,, | க. வீரப்ப கண்டர். | ,, |
| ,, | க. பெரமாண்ட கண்டர். | ,, |
| ,, | பெ. ஆண்டியப்ப கண்டர். | ,, |
| ,, | கு. சின்னச்சி கண்டர். | ,, |
| ,, | வி. முத்துவீர கண்டர். | ,, |

ஸ்ரீ

இந்நூலாசிரியரா லியற்றி யச்சிட்டு வழங்கப்பட்டுள்ள நூல்கள்:—

எதிராசப்பதிகவந்தாதி.

கோபாலப்புகழ்ப் பாமாலை.

இவராலியற்றப்பெற்றுள்ளனவும் இனி யச்சிடப் போகின்றனவுமாகிய நூல்கள்:—

ஆசாரியாதியர் பதிகமாலிகை.

திருவேங்கடவண்ணப் பஞ்சகம்.

அலர்மேலுமங்கைத்தாயார் பஞ்சரத்தினம்.

திருவல்லிக்கேணித் தாயார் பதிகம்.

திருமால்பதிகவந்தாதி.

திருமால் எண்ணெழுகைப் பதிகம்.

திருமகள் பதிகவந்தாதி.

திருக்குழுளப் பதிகவந்தாதி

திருக்குழுளம் அலர்மேலுமங்கைத்தாயார் பஞ்சரத்தினம்

ஸ்ரீ சென்னைகேசவப்பெருமாள் பதிகவந்தாதி.

சென்னைச் செங்கமலவல்லித்தாயார் பதிகவந்தாதி

இவரிப்போதியற்றத் தொடங்கியுள்ள நூல்:—

திருவரங்கப்புராணம்.

இனி யியற்றப்போகிற நூல்:— வன்னியராதிக்கப் பிரமாணத்திரட்டு.

---

இப்புத்தகம், இந்நூலாசிரியராகிய
அடியிற்கண்ட விலாசதாரரிடத்தில் கிடைக்கும்.

ஜா. பசுபதி நாயகர்,
ஜவுளிவர்த்தகசாலை,
ஸ்ரீ சென்னைகேசவப்பெருமாள் கோவிலுக்கு அடுத்த கீழ்க்கட்டடம்.
தேவராஜமுதலி வீதி, சென்னை.

Wrapper Printed at The Sivarahasyam Press, P. T. Madras.